ஓம்

அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா

(இரண்டாம் பதிப்பு)

சென்னை

சமரச சுத்தசன்மார்க்க சங்கத்தின்

அடிமைகளால்,

சென்னை "உமாபதி" பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

பிரஜோற்பத்தி௵ தைப்பூசம்.

1932.

ஓம்

அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பிரகாசவள்ளலார்

அருளிச்செய்த

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசாரசங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல்வேண்டும். சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட்பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

சிதம்பரம்

இராமலிங்கம்

ஜீவகாருண்ய ஒழுக்கம்

ஜீவர்களெல்லாம் ஒருரிமையுள்ள சகோதரர்களென்றெண்ணி, அவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை பயம், கொலை இவைகளால் துக்கத்தை அநுபவிக்கக் கண்ட போதாயினும், கேட்டபோதாயினும், இவவாறுண்டாகுமென்று அறிந்தபோதாயினும், உபகாரம் செய்த ஜீவகாருண்யம். ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும், அன்புண்டானால் அருளுண்டாகும், அருளுண்டானால் சிவாநுபவம் உண்டாகும். ஜீவகாருண்யம் என்ற திறவுகோலைக் கொண்டு, அன்பின் வழி சென்று அருளென்னும் பூட்டைத் திறந்து, நமது தலைவர் வாசஞ் செய்யும் கோட்டையில் நுழையவேண்டும். மேலும் ஜீவகாருண்யத்தில் பரஜீவகாருண்யமென்றும், அபரஜீவகாருண்யமென்றும், இருவகை. பசியையும், கொலையையும் தவிர்ப்பது பரஜீவகாருண்யம். மற்றது அபரஜீவகாருண்யம். ஜீவர்களுக்கு பசி அதிகரித்த காலத்தில் ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றன. அவை மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது, அது மறையவே புருடதத்துவஞ் சோர்ந்து விடுகின்றது, அது சோரவே பிரகிருதி தத்துவமமழுங்குகின்றது, அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன, மனம் தடுமாறிச சிதறுகின்றது, புத்தி கெடுகின்றது, சித்தங் கலங்குகின்றது, அகங்காரமழிகின்றது, பிராணன் சுழல்கின்றது; பூதங்களெல்லாம் புழுங்குகின்றன, வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன, கண் பஞ்சடைந்து

குழிந்து போகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, நாவுலர்ந்து வறளுகின்றது, நாசி குழைந்து அழல்கின்றன, தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது, கைகால் சோர்ந்து துவளுகின்றன, வாக்குத் தொனி மாறிக் குளறுகின்றது, பற்கள் தளருகின்றன, மலஜலவழி வெதும்புகின்றது, மேனி கருகுகின்றது, ரோமம் வெறிக்கின்றது, நரம்புகள் குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டுவிட்டு குழைகின்றன, எலும்புகள் கருகி, பூட்டுகள் நெக்குவிடுகின்றன; இருதயம் வேகின்ற மூளை சுருங்குகின்றது சுக்கிலம் வெதும்பி வ கின்றது, ஈரல் கரைகின்றது, இரத்தமுஞ் ஜலமுஞ் றுகின்றது, மாமிசங் குழைந்து தன்மை கெடுகின்ற வயிறு பகீரென்றெரிகிறது, தாபசோபங்கள் மேல மேலும் உண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களுந் தோன்றுகின்றன. இவ்வாறு ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவேயிருக்கின்றன இவவளவுஅவஸ்தைகளும் ஆகாரங்கிடைத்தபோது உண்டு பசி நீங்க நீஙகுகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு விளங்கி, அகத்திலுமுகத்திலுஞ் ஜீவகளையும் கடவுள்களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தியின்பமுண்டாகின்றது, இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்; இந்தப்புண்ணியத்தைச செய்கின்ற புண்ணியர்களை எந்த தெய்வத்துக்குச சரியென்று சொல்லலாம். எல்லா தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்ஸமென்றே சத்தியமாக அறியவேண்டும்.

உண்மை நெறி

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு

1. ஏமசித்தி. 2. சாகாக்கல்வி. 3. தத்துவ நிக்கிரகஞ் செய்தல். 4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்.

இவைகளைப் பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு வகைப்படும்.

1. இந்திரிய ஒழுக்கம் 2. கரண ஒழுக்கம். ஜீவ ஒழுக்கம். 4. ஆன்ம ஒழுக்கம்.

1. இந்திரிய வொழுக்கம். கொடிய சொல் செவி புகாது, நாதம் முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்; அசுத்த பரிசஞ் செய்யாதிருத்தல்; குரூரமாகப் பாரா திருத்தல்; உருசி விரும்பாதிருத்தல்; சுகந்தம் விரும்பா திருத்தல்; இன்சொலாடல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவ ஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்விதத் தந்திரத்திலாவது தடை செய்தல்; ஜீவோபகார நிமித்தமாய் சாதுக்கள் வாஸஸ்தானங்களிலும், திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல், நன்முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்; மித ஆகாரஞ் செய்தல்; மித போகஞ் செய்தல்; மல ஜலோபாதிகளைக் கிரமமாய் ஒழித்தல்; கால பேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடை நேர்ந்தால் ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்த பரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத்யான சங்கற்

பத்தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்; (மந்தரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்; (தீவிரதனுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமை நிறுத்தல்; இடை விடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்; சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்; அழுக்காடை யுடுத்தாதிருத்தல் முதலியவாம்.

2. கரண வொழுக்கம். மனத்தைச சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச செய்தல்; துர்விஷயத்தைப் பற்றுதிருக்கச செய்தல்; ஜீவதோஷம் விசாரியாதிருத்தல்; தன்னை மதியாதிருத்தல், இராகாதி நீக்கி இயற்கைச சத்துவ மயமாத் தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது தண்டித்தல் முதலியவாம்.

3. ஜீவ வொழுக்கம். ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர் தாழ்ந்தோ ரென்னும் பேதம் நீங்கி எல்லவருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதலாம்.

4. ஆன்ம வொழுக்கம். யானை முதல் எறும்பு ஈறுகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும் அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும்பேத மற்று எல்லாந் தானாக நிற்றலாம்.

இவ்வண்ணம் நின்றால், மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும்.

ஓம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா

திருச்சிற்றம்பலம்

எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் றனையே யேத்து.

திருச்சிற்றம்பலம்

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்
றென்று வருமோ அறியேன் எமகோவே-துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்.

திருச்சிற்றம்பலம்

சற்குரு தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

பராபரம் கோதகனும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயம் காரகம திலாதசஞ் சீவிதநல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்
வராதஇன் பாரவெனை முனைளில்வந் தேயருளி
மகாபலம் சேரவருள் விராவுசெம் பாதநம
இராமலிந் தார் மனதின் இராதசந் தோடநம
இராமலிங காயநம இராமலிங் காயநம.

திருச்சிற்றம்பலம்

சற்குருநாதா சற்குரு நாதா
சன்மார்க்க சங்கம் தழைக்கவருள் தாதா.

திருச்சிற்றம்பலம்

பரசிவ வணக்கம்

திருச்சிற்றம்பலம்

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடுங் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச சிவாநுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருசசிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்சசியது விளங்க
உலகமெலாம் விளங்கஅருள் உதவும்பெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்துஒருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

திருசசிற்றம்பலம்

திரு அருட்பா மகிமை

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்-கண்மணியாம்
நங்கள் இராமலிங்க னல்ல அருட்பாமுறையைத்
துங்கமுற மாண தொழு.

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

கணபதி தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண். (1)

நாதமும் கடந்து நிறைந்து நின்மயமே
நான் என அறிந்து நான்தானும்
பேதமும் கடந்த மௌன ராச்சியத்தைப்
பேதையேன் பிடிப்ப தெந்நாளோ
வேதமும் சமய வாதமும் விடுத்தோர்
இதயமும் ஏழையேன் சிரமும்
வேதமும் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (2)

திருவும் கல்வியும் சீரும் சிறப்பும்உன்
திருவடிப் புகழ் பாடுந்திறமும் நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா
உணர்வும் தந்தெனது உள்ளத்து அமர்ந்தவா
குருவும் தெய்வமு மாகிஅன் பாளர்தம்
குறைதவிர்க்கும் குணப்பெருங் குன்றமே
வெருவும் சிந்தை விலகக் கஜானனம்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (3)

திங்களங் கொழுந்து வேய்ந்த
செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த
மகிணனின் மலர்த்தாள் போற்றி
ஐங்கரம் நால்வாய் முக்கண்
அருட்சிவ களிறே போற்றி
கங்கையாள் மகிழுஞ் செல்வக்
கணேசநின் கழல்கள் போற்றி.

திருச்சிற்றம்பலம் (4)

முருகன் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடை-
நீறுடையாய் நேயர்கள்தம் நெஞ்சுடையாய்—கூறும் [யாய்
முதல்வா ஓராறு முகவா முக்கண்ணன்
புதல்வா நின் தாள் எம் புகல். (1)

அமராவதி இறைக்கு ஆருயிர் ஈந்த அருட்குன்றமே
சமராபுரிக்கு அரசே தணிகாசலத் தற்பரனே
குமரா பரமகுருவே குகா எனக் கூவி நிற்பேன்
எமராஜன் வந்திடுங்கால் ஐயனே எனை என்றுகொள்ளே.

வேல்கொண்டகையும் விறல்கொண்ட தோளும் விளங்குமயில், மேல்கொண்டவீறும் மலர்முகம் ஆறும் விரைக்கமலக், கால்கொண்ட வீரக்கழலும் கண்டாலன்றிக் காமன் எய்யும், கோல்கொண்ட வன்மை அறுமோ தணிகைக் குருபரனே. (3)

திருச்சிற்றம்பலம்

ஓம

அருட்பெருஞ்ஜோதி

மகாதேவமாலை

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருணைநிறைந் தகம்புறமுந் துளும்பிவழிந்
துயிர்க்கெல்லாங் களைக ணாகித்
தெருள் நிறைந்த வின்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் சிதையா ஞானப்
பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்ய னேன்றன்
மருள் நிறைந்த மனக்கருங்கற் பாறையுமுட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகநிலை முழுதாகி யாங்காங் குள்ள
வுயிராகி யுயிர்க்குயிரா மொளிதா னாகிக்
கலகநிலை யறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
வியல்பாகி யிணையொன்று மில்லா தாகி
அலகிலறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி யமர்ந்த தேவே. (1)

உலகமெலாந் தனிநிறைந்த வுண்மை யாகி
யோகியர்த மநுபவத்தி னுவப்பா யென்றுங்
கலகமுறா வுபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற வருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறா நிபிடவா னந்த மாகி
மீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி
இலகுபரா பரமாய்ச்சிற் பரமா யன்ப
ரிதயமலர் மீதிருந்த வின்பத் தேவே. (2)

வித்தாகி முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத
சத்தாகிச் சித்தாகி யின்ப மாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாட்சியாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே. (3)

வேதாந்த நிலையாகிச சித்தாந் தத்தின்
மெய்யாகிச சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தி
னடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாந் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்று
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. (4)

தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதா மென்று
முள்ளதாய் நிரதிசய வுணர்வா யெல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தை யாகி
யெழிற்குருவாய்த் தெய்வதமா யிலங்குந் தேவே (5)

பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாஞ்
சிரமாகித் திருவருளாம் வெளியா யான்ம
சிற்சத்தி யாய்ப்பரையின் செம்மை யாகித்
திரமாகித் தற்போத நிவர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவாநுபவச செல்வ மாகி
அரமாகி யானந்த போத மாகி
யானந்தா தீதமதா யமர்ந்த தேவே. (6)

இந்தியமாய்க் காரணாதி யனைத்து மாகி
யியல்புருட னுய்க்கால பரமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமா யப்பாற்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி
வந்தவுப சாந்தமதாய் மௌன மாகி
மகா மௌன நிலையாகி வயங்கா நின்ற
அந்தமில்தொம் பதமாய்த்தத் பதமா யொன்று
மசிபதமா யதீதமா யமர்ந்த தேவே. (7)

நின்மயமா யென்மயமா யொன்றுங் காட்டா
நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாந்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச
சின்மயமாய்ச சிற்பரமா யசல மாகிச
சிற்சொலித மாயகண்ட சிவமா யெங்கு
மன்மயமாய் வாசகா தீத மாகி
மனாதீத மாயமர்ந்த மௌனத் தேவே. (8)

அளவிறந்த நெடுங்காலஞ் சித்தர் யோக
ரறிஞர்மல ரயன்முதலோ ரனந்த வேதங்
களவிறந்துங் கரணாதி யிறந்துஞ் செய்யுங்
கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவு ளாகி
உளவிறந்த வெம்போல்வா ருள்ளத் துள்ளே
யூறுகின்ற தெள்ளமுத வூற லாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே. (9)

வாயாகி வாயிறந்த மௌன மாகி
மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
கருவிகர ணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
தானாகி நானாகிச் சகல மாகி
ஓயாத சத்தியெலா முடைய தாகி
யொன்றாகிப் பலவாகி யோங்குந் தேவே. (10)

அண்டங்கள் பலவாகி யவற்றின் மேலு
மளவாகி யளவாத வதீத மாகிப்
பிண்டங்க ளனந்தவகை யாகிப் பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்
பண்டங்கள் பலவாகி யிவற்றைக் காக்கும்
பதியாகி யானந்தம் பழுத்துச சாந்தங்
கொண்டெங்கு நிழல்பரப்பித் தழைந்த ஞானக்
கொழுங்கடவுட் டருவாகிக் குலவுந் தேவே. (11)

பொன்னுகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி யகமாகிப் புனித மாகி
மன்னுகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னுகிப் பின்னுகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கு
மின்னுகிப் பரவியின்ப வெள்ளந் தேக்க
வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந் தேவே.

மலைமேலுங் கடன் மேலு மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்குங் கோவே
நிலைமேலு நெறிமேலு நிறுத்து கின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும் வேதக்
கலைமேலு மெம்போல்வா ருளத்தின் மேலுங்
கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின் மேலுந்
தலைமேலு முயிர்மேலு முணர்வின் மேலுந்
தகுமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே. (13)

பொற்குன்றே யகம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே யாரணத்துட் பொருளே யென்றுங்
கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத்தீங் கனியே வாய்மைச்
சொற்குன்றா நாவகத்துண் மாறா வின்பந்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதி யேவிண்
நிற்கின்ற சுடரேயச் சுடருள் ளோங்கும்
நீளொளியே யவ்வொளிக்குள் நிறைந்த தேவே. (14)

கோவேயென் குணக்குன்றே குன்றா ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்
காவேமெய் யறிவின்ப மயமே யென்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்
தேவேயத் தேவுக்குந் தெளிய வொண்ணாத்
தெய்வமே வாடாமற் றிகழ்சிற் போதப்
பூவேயப் பூவிலுறு மணமே யெங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே. (15)

மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே ஞான
வாரிதியே யன்பர்கள்தம் மனத்தே நின்ற
குறைமுடிக்குங் குணக்குன்றே குன்றா மோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானே யிந்த
இறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற
இறையேயிவ் வுருவுமின்றி யிருந்த தேவே. (16)

கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழுங்
குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியி னூறும்
வானமுதே யானந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கு ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே யெல்லையிலாச் சீர்மைத் தேவே. (17)

அருளருவி வழிந்துவழிந் தொழுக வோங்கும்
ஆனந்தத் தனிமலையே யமல வேதப்
பொருளளவு நிறைந்தவற்றின் மேலு மோங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே புரண மாகி
இருளறுசிற் பிரகாச மயமாஞ் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்கு ளிருந்த வாழ்வே
தெருளளவு முளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. (18)

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்துகடந் தமல யோகர்
உளவையெலாங் கடந்துபரங் கடந்து மேலை
ஒன்றுகடந் திரண்டுகடந் துணரச் சூழ்ந்த
களவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாங்
கடந்துநிறை வானசுகக் கடலே யன்பர்
வளவையெலா மிருளகற்று மொளியே மோன
வாழ்வேயென் னுயிர்க்குயிராய் வதியுந் தேவே. (19)

வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந் தான்கலந்து புலன்க ளோடும்
இந்திரிய மவைகலந்துள் ளியங்கு கின்ற
அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே யின்பத் தேவே. (20)

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச
எண்ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேயின்
னிசைவீசத் தண்பனிநீ ரெடுத்து வீசப்
பெண்ணமுத மனையவர்விண் ணமுத மூட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்து மின்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுட் டேவே. (21)

சுழியாத வருட்கருணைப் பெருக்கே யென்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதி யேவான்
ஒழியாது கதிர்பரப்புஞ் சுடரே யன்பர்க்
கோவாத வின்பருளு மொன்றே விண்ணோர்
விழியாலு மொழியாலு மனத்தி னாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பு மெந்த
வழியாலுங் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மௌனவெளி யூடிருந்து வயங்குந் தேவே. (22)

சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாஞ்
சோர்ந்தொழிய வுணர்வொழியத் துளங்கா நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த வநுபவமே யதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல வின்பம்
நிறைவொழியக் குறைகொண்மத நெறியோர் நெஞ்
கல்லொழிய மெய்யடிய ரிதய மெல்லாங் [சக்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. (23)

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியி லின்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தஙகள்
சிரம்பழுத்த பதப்பொருளே யறிவா னந்த
சிவம்பழுத்த வநுபவமே சிதாகா சத்திற்
பரம்பழுத்த நடத்தரசே கருணை யென்னும்
பழம்பழுத்த வான்தருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே
தினம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத் தேவே. (24)

அண்டமெலாங் கண்ணுகக் கொளினுங காண்டற்
கணுத்துணையுங் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி யோலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கு மொன்றே
கண்டவடி வாயகண்ட மயமா யெங்குங்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேயெஞ்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டுஞ்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே. (25)

பேதமுறு மெய்ப்போத வடிவ மாகிப்
பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்
சீதமிகுந் தருள்கனிந்து கனிந்து மாறுச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
ஆதரவோ டியன்மௌனச சுவைமேன் மேற்கொண்
டானந்த ரசமொழுக்கி யன்பா லென்றுஞ்
சேதமுறு தறிஞருளந் தித்தித் தோங்குஞ்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே. (26)

உடல்குளிர வுயிர் தழைக்க வுணர்ச்சி யோங்க
உளங்கனிய மெய்யன்ப ருள்ளத் தூடே
கடலனைய பேரின்பந் துளும்ப நாளுங்
கருணைமலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே
விடலரிய வெம்போல்வா ரிதயந் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதந்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே. (27)

சொற்போதற் கரும்பெரிய மறைக ளோடித்
தொடர்ந்துதொடர்ந் தயர்ந்திளைத்துத் துளங்கி [யேங்கிப்
பிற்போத விரைந்தன்ப ருளத்தே சென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றுந்
தற்போத வொழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்
சிற்போதத் தகம்புறமுங் கோத்து நின்ற
சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே.(28)

பொங்குபல சமயமெனு நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி யோங்கும்
கங்குகரை காணாத கடலே யெங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே யன்பர்
தங்கநிழல் பரப்பிமயற் சோடை யொல்லாந்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச
செங்குமுத மலரவரு மதியே யெல்லாஞ்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே. (29)

வான்காணா மறைகாணா மலரோன் காணான்
மால்காணா னுருத்திரனு மதித்துக் காணான்
நான்காணா விடத்ததனைக் காண்பே மென்று
நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை
மான்காணா வுளக்கமலம் மலர்த்தா நின்ற
வான்சுடரே யானந்த மயமே யீன்ற
ஆன்காணா விளங்கன்று யலமந் தேங்கும்
அன்பர்தமைக் கலந்துகொளு மமலத் தேவே. (30)

மெய்ஞ்ஞான விருப்பத்தி லேறிக் கேள்வி
மீதேறித் தெளிந்திச்சை விடுதே லேறி
அஞ்ஞான மற்றபடி யேறி யுண்மை
அறிந்தபடி நிலையேறி யதுநா னென்னும்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற வெல்லாம்
கடந்தேறி மௌனவியற் கதியி லேறி
எஞ்ஞான மறத்தெளிந்தோர் கண்டுங் காணேம்
என்கின்ற வநுபவமே யின்பத் தேவே. (31)

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே யானந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியா தின்னுமின்னு மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற வொன்றே யொன்றும்
கற்றறியாப் பேதையேன் றனக்கு மின்பம்
கனிந்தளித்த வருட்கடலே கருணைத் தேவே. (32)

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்யுணர்ந்த வெமைப்போல்வார் தமக்கு மின்பம்
புரிந்தருளும் கருணைவெள்ளப் பொற்பே யன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே யுள்ளம்
கரைந்துகரைந் துருகவவர் கருத்தி னூடே
உய்யுநெறி யொளிகாட்டி வெளியு முள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே யுண்மைத் தேவே. (33)

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய
கனலினடு வூசியின்மேற் காலை யூன்றிப்
பொற்பறமெய் யுணவின்றி யுறக்க மின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்படவைம் பொறியை யோம்பி
நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்து யோக
நீண்முனிவர்க் கொளித்தமரர்க்கொளித்து மேலாஞ்
சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்து ஞானத்
திருவாள ருட்கலந்த தேவ தேவே. (34)

மட்டகன்ற நெடுங்கால மனத்தால் வாக்கால்
மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரண நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாங் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்க நீக்கிச
சுட்டகன்று நிற்கவவர் தம்மை முற்றுஞ்
சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே. (35)

பாங்குளநாந் தெரிதுமெனத் துணிந்து கோடிப்
பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி
ஈங்குளதென் றாங்குளதென் றோடி யோடி
இளைத்திளைத்துத் தொடர்ந்து தொடர்ந் தெட்டுந் [தோறும்
வாங்குபர வெளிமுழுது நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே யெங்குந்
தேங்குபர மானந்த வெள்ளமே சச
சிதானந்த வருட்சிவமே தேவ தேவே. (36)

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோக ருள்ளத்
தியலறிவாந் தருவினிலன் பெனுமோ ருசசி
பழுத்தளிந்து மௌனநறுஞ் சுவைமேற் பொஙகிப்
பதம்பொருந்த வநுபவிக்கும் பழமே மாயைக்
கழுத்தரிந்து கருமமலத் தலையை வீசுங
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையா யமர்ந்தருளும் பொருளே மோன
வெளியினிறை யானந்த விளைவாந் தேவே. (37)

உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவ ரியக்கர் பூதர்
மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை
வானவர்கள் முதலோர்தம் மனத்தாற் றேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணே மென்று
வருத்தமுற்றுங் கவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளி யேயின்ப மயமாந் தேவே. (38)

பாயிரமா மறையனந்த மனந்த மின்னும்
பார்த்தளந்து காண்டுமெனப் பல்கான் மேவி
ஆயிரமா யிரமுகங்க ளாலும் பன்னாள்
அளந்தளந்தோ ரணுத்துணையு மளவு காணா
தேயிரங்கி யழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்பவருட் பரவெளிவாழ் சிவமே யீன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோ லெம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்குந் தேவே. (39)

[பொது நூல்· வேதம்.]

அந்தரமிங் கறிவோமற் றதனி லண்ட
மடுக்கடுக்கா யமைந்தவுள வறிவோ மாங்கே
உந்துறும்பல் பிண்டநிலை யறிவோஞ் சீவன்
உற்றநிலை யறிவோமற் றனைத்தும் நாட்டும்
எந்தைநின தருள்விளையாட் டந்தோ வந்தோ
எள்ளளவு மறிந்திலோ மென்னே யென்று
முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற
முழுமுதலே யன்பர்குறை முடிக்குந் தேவே. (40)

[அநுபவ நூல் : உபநிடதம்.]

தோன்றுபர சாக்கிரமுங் கண்டோ மந்தச்
சொப்பனமுங் கண்டோமேற் சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோ மப்பால்
அதுகண்டோ மப்பாலா மதுவுங் கண்டோம்
என்றவுப சாந்தநிலை கண்டோ மப்பால்
இருந்தநினைக் காண்கிலோ மென்னே யென்று
சான்றவுப நிடங்க ளெலாம் வழுத்தநின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே. (41)

[சிறப்பு நூல்: ஆகமம்.]

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோ மேலைப்
பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்
எரிக்குமியற் பரநாத நிலைக்கண் மெல்ல
வெய்தினோ மப்பாலு மெட்டிப் போனோம்
தெரிக்கரிய வெளிமூன்றுந் தெரிந்தோ மெங்கும்
சிவமேநின் சின்மயமோர் சிறிதுந் தேறோம்
தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே. (42)

[கலைகள் : பசு நூல்.]

மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல
வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோ ரெல்லாம்
இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற்
கியற்கைநிலை யாததுதா னெம்மாற் கூறும்
கணக்குவழக் கனைத்தினையுங் கடந்த தந்தோ
காண்பரிதிங் கெவர்க்குமெனக் கலைக ளெல்லாம்
பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்றப்
பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே. (43)

அருமறையா கமங்கண்முத னூலீ றெல்லாம்
அமைந்தமைந்து மற்றவைக்கு மப்பா லாகிக்
கருமறைந்த வுயிர்கள்தொறுங் கலந்து மேவிக்
கலவாமற் பன்னெறியுங் கடந்து ஞானத்
திருமணிமன் றகத்தின்ப வுருவா யென்றுந்
திகழ்கருணை நடம்புரியுஞ் சிவமே மோனப்
பெருமலையே பரமவின்ப நிலையே முக்கட்
பெருமானே யெத்திறத்தும் பெரிய தேவே. (44)

என்னுயிர் நீ யென்னுயிர்க்கோ ருயிரு நீயென்
இன்னுயிர்க்குத் துணைவனீ யென்னை யீன்ற
அன்னைநீ யென்னுடைய வப்ப னீயென்
அரும்பொருணீ யென்னிதயத் தன்பு நீயென்
நன்னெறிநீ யெனக்குரிய வுறவு நீயென்
நற்குருநீ யெனைக்கலந்த நட்பு நீயென்
தன்னுடைய வாழ்வுநீ யென்னைக் காக்குந்
தலைவநீ கண்மூன்று தழைத்த தேவே. (45)

ஆனேறும் பெருமானே யரசே யென்றன்
ஆருயிருக கொருதுணையே யமுதே கொன்றைத்
தேனேறு மலர்ச்சடையெஞ் சிவனே தில்லை
செழுஞ்சுடரே யானந்தத் தெய்வ மேயென்
ஊனேறு முயிர்க்குள்நிறை யொளியே யெல்லாம்
உடையானே நின்னடிச்சீ ருன்னி யன்பர்
வானேறு கின்றார்நா னொருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே. (46)

செஞ்சடையெம் பெருமானே சிறுமா னேற்ற
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையு மதிற்றில்லை மணியே யொற்றி
வளர்மருந்தே யென்னுடைய வாழ்வே வேட்கை
அஞ்சடைய வஞ்சியர்மா லடைய வஞ்ச
மடையநெடுந் துயரடைய வகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதி யேன்மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே. (47)

அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டும்
ஆரமுதே யென்னுறவே யரசே யிந்த
மன்னுலகி லடியேனை யென்னே துன்ப
வலையிலகப் படவியற்றி மறைந்தா யந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றேன்
என்னையுளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
என்செய்வே னென்செய்வே னென்செய் வேனே.

மத்தேறி யலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி யுழல்கின்ற மனத்தா லந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்
மேலேறி யன்பரெலாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி யுயிர்க்குயிராய் நிறைந்த வெங்கள்
உடையானே யிதுதகுமோ வுணாகி லேனே. (49)

மதியணிந்த முடிக்கனியே மணியே யெல்லாம்
வல்லவருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தா ரன்பரெலா மடியே னென்றுங்
கண்டறியேன் கருமத்தாற் கலங்கி யந்தோ
பொதியணிந்து திரிந்துழலு மேறு போலப்
பொய்யுலகிற் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
இன்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே. (50)

என்னரசே யென்னுயிரே யென்னை யீன்ற
வென்தாயே யென்குருவே யெளியே னிங்கே
தன்னரசே செலுத்தியெங்கு முழலா நின்ற
சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி யந்தோ
மின்னரசே பெண்ணமுதே யென்று மாதர்
வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே யெண்ணிக்
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே. (51)

வன்கொடுமை மலநீக்கி யடியார் தம்மை
வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தா ளெண்ண
முன்கொடுசென் றிடுமடியேன் றன்னை யிந்த
மூடமன மிவ்வுலக முயற்சி நாடிப்
பின்கொடுசென் றலைத திழுக்கு தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போற் பிதற்றா நின்றேன்
என்கொடுமை யென்பாவ மெந்தா யெந்தாய்
என்னுரைப்பே னெங்குறுவே னென்செய் வேனே.

உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லாம்
உண்மைநிலை பெறவருளு முடையா யிங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கி லாழ்ந்து
வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தா ளெண்ணிக்
கைகுவித்துக் கண்களில்நீர் பொழிந்து நானோர்
கணமேனுங் கருதிநினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ
திருவுளத்தை யறியேனென் செய்கு வேனே. (53)

அருள்வெளியி லானந்த வடிவி னால்நின்
றாடுகின்ற பெருவாழ்வே யரசே யிந்த
மருள்வலையி லகப்பட்ட மனத்தா லந்தோ
மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகா ணாதே
இருள்நெறியிற் கோலிழந்த குருட்டே மன்போல்
எண்ணாதெல் லாமெண்ணி யேங்கி யேங்கி
உருள் சகடக் கால்போலுஞ் சுழலா நின்றேன்
உய்யும்வகை யறியேனிவ் வொதிய னேனே. (54)

கற்றவளை தனக்குமுண வளிக்கு முன்றன்
கருணைநிலை தனையறியேன் கடையே னிங்கே
எற்றவளை யெறும்பே போற் றிரிந்து நாளும்
இளைத்துநின தருள்காணா தெந்தா யந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
இற்றவளைக் கேள்விடல்போல் விடுதி யேல்யான்
என்செய்வே னெங்குறுவே னென்சொல் வேனே.

அடிமைசெயப் புகுந்திடுமெம் போல்வார் குற்றம்
ஆயிரமும் பொறுத்தருளு மரசே நாயேன்
கொடுமைசெயு மனத்தாலே வருந்தி யந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்
கடுமைசெயப் பிறர்துணிந்தா லடிமை தன்னைக்
கண்டிருத்த லழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனே னென்செய் வேனின்
திருவுளத்தை யறிந்திலேன் திகைக்கின் றேனே. (56)

கூம்பாத மெய்ந்நெறியோ ருளத்தே யென்றுங்
குறையாத வின்பளிக்கு மருவே யாசைத்
தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன்
தையலார் மையலெனுஞ் சலதி யாழ்ந்து
ஓம்பாம லுவர்நீருண் டயங்கு கின்றேன்
உன்னடிய ரக்கரைமே லுவந்து நின்றே
தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனு நெய்யும்
தேக்குகின்ற ரிதுதகுமோ தேவ தேவே. (57)

வெள்ளமணி சடைக்கனியே மூவ ராகி
விரிந்தருளு மொருதனியே விழல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டு மாட்ட மெல்லாம்
கண்டிருந்து மிரங்கிலையேற் கவலை யாலே
உள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்னர்
உய்யும்வகை யெவ்வகையீ துன்னுந் தோறும்
பொள்ளெனமெய் வியர்க்கவுளம் பதைக்கச் சோபம்
பொங்கிவழி கின்றது நான் பொறுக்கி லேனே. (58)

தீவினைநல் வினையெனும்வன் கயிற்ரு லிந்தச
சீவர்களை யாட்டுகின்ற தேவே நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்துஞ் சலிப்பின்றி யென்னே யின்னும்
நாவினையென் பால்வருந்திக் கறண்டு கின்ற
நாய்க்குநகை தோன்றநின்று நயக்கின் றேனுன்
ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்
அறிவிலிக்கு மறிவிலியே னென வாறே. (59)

எம்பெருமா னின்விளையாட் டென்சொல் கேணுன்
ஏதுமறி யாசசிறியே னெனைத்தா னிங்கே
செம்புனலாற் குழைத்தபுலாற் சுவர்சூழ் பொத்தைச
சிறுவீட்டி லிருட்டறையிற் சிறைசெய் தந்தோ
கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த வந்தக்
கரணமுதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி யரட்ட ரெல்லாம்
மடிபிடித்து வருத்தவென்ரு வளர்த்தா யெந்தாய்.

அம்பரத்தே யானந்த வடிவா லென்றும்
ஆடுகின்ற மாமணியே யரசே நாயேன்
இம்பரத்த மெனுமுலக நடையி லந்தோ
இடருழந்தேன் பன்னெறியி லெனையி ழுத்தே
பம்பரத்தி னுடியலைப் படுத்து மிந்தப்
பாவிமன மெனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற விளங்கொடிபோற் றளர்ந்தே னென்னைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. (61)

பொன்னுடையா ரிடம்புகவோ வவர்கட் கேற்கப்
பொய்மொழிகள் புகன்றிடவோ பொதிபோ லிந்தக்
கொன்னுடையா வுடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்க ணந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான்
என்னுடையா யென்னுடையா யென்னை யிங்கே
யெடுத்துவளர்த் தனையறியே னென்சொல் வேனே.

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ விந்த
மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டும்
அருகணைத்துக் கொளப்பெண்பே யெங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறெங்கே யாடை யெங்கே
இருகணுக்கு வியப்பெங்கே வசதி யான
விடமெங்கே யென்றுதிரிந் திளைத்தே னல்லால்
ஒருகணத்து முனைநினைந்த துண்டோ வென்னை
உடையானே யெவ்வகைநா னுய்யு மாறே. (63)

பொனமலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப்
புவிநடையிற் பற்பலகாற் போந்து போந்து
தென்மலையோ நிதிமலையோ வென்று தேடி
நிலைகுலைந்த தன்றியுனை நினைந்து நேடி
மன்மலையோ மாமணியோ மருந்தோ வென்று
வழுத்தியதே யில்லையிந்த வஞ்ச நெஞ்சங்
கன்மலையோ விரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ. (64)

தம்மைமறந் தருளமுத முண்டு தேக்குந்
தகையுடையார் திருக்கூட்டஞ் சார்ந்து நாயேன்
வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டி லென்றும்
செம்மையெலாந் தருமௌன வணைமேற் கொண்டு
செறியிரவு பகலொன்றுந் தெரியா வண்ணம்
இம்மையிலே யெம்மையினுங் காணாச சுத்த
இன்பநிலை யடைவேனோ வேழை யேனே. (65)

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதிற்
கருத்தறியாச சிறுவனையோர் கடுங்கா னத்தே
உண்மயக்கங் கொளவிடுத்தே யொருவன் பின்போம்
ஒருதாய்போன் மாயையிரு ளோங்கும் போதில்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டி லந்தோ
மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பி னென்னை விட்டே
மறைந்தனையே பரமேநின் வண்மை யென்னே. (66)

நற்றாயும் பிழை குறிக்கக் கண்டோ மிந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயு மவர் தமைநாம் பற்றோம் பற்றிற்
பற்றாத பற்றுடையார் பற்றி யுள்ளே
உற்றாயுஞ் சிவபெருமான் கருணை யொன்றே
உறுபிழைக ளத்தனையும் பொறுப்ப தென்றான்
பொற்றாளை விரும்பியது மன்றா ளாடும்
பொருளேயென் பிழையனைத்தும் பொறுக்கவன்றே.

'கொல்லா நெறியே குரு அருள்நெறி'

எண்ணியநம் எண்ணமெலா முடிப்பான் மன்று
ளெம்பெருமா னென்றுமகிழ்ந் திறுமாந் திங்கே
நண்ணியமற் றையர் தம்மை யுரிமை பேசி
நன்குமதி யாதிருந்த நாயி னேனைத்
தண்ணியநல் லருட்கடலே மன்றி லின்பத்
தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே யெங்கள்
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயிற்
பொய்யனே னெங்குற்றென் புரிவே னந்தோ. (68)

புற்றோங்கு மரவமெல்லாம் பணியாக் கொண்டு
பொன்மேனி தனிலணிந்த பொருளே மாயை
யுற்றோங்கு வஞ்சமனக் கள்வ னேனை
யுளங்கொண்டு பணிகொள்வ தனக்கே யொக்கும்
மற்றோங்கு மவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்த ரெனைவேண்டார் வள்ளலே நான்
கற்றோங்கு மறிவறியேன் பலவாச சொல்லுங்
கருத்தறியே னெனக்கருளக் கருது வாயே. (69)

அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே யன்பு ளோர்தம்
தெருளுடைய வுளமுழுதுங் கோயில் கொண்ட
சிவமேமெய் யறிவுருவாந் தெய்வ மேயிம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனு மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறே னென்னை
யேற்றுவதற் கெண்ணுகவென் னின்பத் தேவே. (70)

திருச்சிற்றம்பலம்.

உயிர்க்கொலையும்புலைப்புசிப்பும்தவிர்த்தவர்உறவினத்தார்.

சிவநேச வெண்பா

சீர் சான்ற வேதச செழும் பொருளே சிற்சொருபப்
பேர் சான்ற வுண்மைப் பிரமமே—நேர்சான்றோர்
நாடும்பரசிவமே நாயேனுக் கன்புநின்பால்
நீடும் படிநீ நிகழ்த்து. (1)

மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை யொன்றேயென் பேராசை—நண்ணாசை
விட்டார்புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமே பதம். (2)

இப்பாரி லென்பிழைக ளெல்லாம்பொறுத்தருளென்
அப்பாநின் தாட்கே யடைக்கலங்காண்—இப்பாரில்
நானினது தாள்நீழல் நண்ணுமட்டும் நின்னடியார்
பால்நினது சீர்கேட்கப் பண். (3)

திருவருண் முறையீடு

நான்படும்பாடுசிவனேயுலகர்நவிலும்பஞ்சு [மோ
தான்படுமோசொல்லத்தான்படுமோ வெண்ணத்தான்படு
கான்படுகண்ணியில்மான்படுமாறுகலங்கிநின்றேன்
ஏன்படுகின்றனையென்றிரங்காயென்னிலென்செய்வனே.

மின்போலுஞ் செஞ்சடை வித்தகனே யொளி மேவி
யசெம், பொன்போலு மேனியெம் புண்ணிய னேயெ
னைப் போற்றிப்பெற்ற, தன்போலுந் தாய்தந்தை யாயி
ரம் பேரிருந் தாலுமந்தோ, நின்போலு மன்புடை யாரெ
னக் காரிந்த நீணிலத்தே. (2)

'பரனளித்த தேகம் இது சுடுவது அபராதம்'

வாளேய் நெடுங்கண்ணி யெம்பெரு மாட்டி வருடுமலர்த்
தாளே வருந்த மணிக்கூடற் பாணன் தனக்கடிமை
ஆளே யெனவிற கேற்றுவிற் றோய்நின் னருள்கிடைக்கும்
நாளேநன்னாளந்தநாட்காயிரந்தெண்டன்நான்செய்வனே.

நாடிநின்றேநினைநான்கேட்டுக்கொள்வதுநண்ணும்பத்துக்
கோடியன்றேயொருகோடியினூற்றொருகூறுமன்றே
தேடிநின்றேபுதைப்போருந்தருவர்நின்சீர்நினைந்துட்
பாடியந்தோமனம்வாடிநின்றேன்முகம்பார்த்தருளே. (3)

தாயாகினுஞ்சற்றுநேரந்தரிப்பள்நந்தந்தையைநாம்
வாயாரவாழ்த்தினும்வையினுந்தன்னிடைவந்திதுநீ
ஈயாயெனிலருள்வானென்றுனையடுத்தேனுமையாள்
நேயாமனமிரங்காயாவென்னெண்ணநெறிப்படவே. (4)

ஏட்டாலும் கேளய லென்பாரை 'நான்சிரித்தென்னை வெட்டிப், போட்டாலும் வேறிடங் கேளேனென் னாணைப் புறம்விடுத்துக், கேட்டாலு மென்னை யுடையா னிடஞ்சென்று கேட்பனென்றே, நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்துவனே. (5)

வான்மாறினுமொழிமாறாதமாறன்மனங்களிக்கக்
கால்மாறியாடியகற்பகமேநின்கருணையென்மேற்
றான்மாறினும்விட்டுநான்மாறிடேன்பெற்றதாய்க்குமுலைப்
பால்மாறினும்பிள்ளைபான்மாறுமோவதிற்பல்லிடுமே. (6)

ஊர்தருவார்நல்லவூண்தருவாருடையுந்தருவார்
பார்தருவாருழற்கேர்தருவார்பொன்பணந்தருவார்
சோர்தருவாருள்ளறிவுகெடாமற்சுகிப்பதற்கிங்
கார்தருவாரம்மையார்தருபாகனையன்றிநெஞ்சே. (7)

பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாயென்பர் பித்த னென்ற, திட்டுக்குஞ் சீரருள் செய்தளித் தாயென்பர் தீவிறகுக், கட்டுக்கும் பொன்முடிகாட்டி நின்றாயென் பர் கண்டிடவென், மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமெண் கோமுக்கண் மாணிக்கமே. (8)

நிலையறி யாத குடும்பத் துயரென்னு நீத்தத்திலே
தலையறி யாது விழுந்தேனை யாண்டருள் தானளிப்பாய்
அலையறியாத கடலேமுக் கண்கொண்ட வாரமுதே
விலையறியாத மணியேவிடேலிதென் விண்ணப்பமே. (10)

வடிவுடை மாணிக்கமாலை

காப்பு

சீர்கொண்ட வொற்றிப் பதியுடை யானிடஞ் சேர்ந்தமணி
வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கே
ஏர்கொண்ட நல்லரு ளீயுங் குணாலய வேரம்பனே.

கட்டளைக் கலித்துறை

கடலமு தேசெங் கரும்பே யருள்கற்ப கக்கனியே
உடலுயி ரேயுயிர்க் குள்ளுணர் வேயுணர் வுளொளியே
அடல்விடை யாரொற்றி யாரிடங் கொண்ட அருமருந்தே
மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே. (1)

'உள்ளும்புறம்பும் வள்ளல்இருக்க வாட்டம்ஏன்'

அணியே யணிபெறு மொற்றித் தியாகர்தம் அன்புறுசற்,
குணியேயெம் வாழ்க்கைக்குலதெய்வ மேமலைக்கோன்தவ
மே,பணியேன் பிழைபொறுத் தாட்கொண்டதெய்வப்பதி
கோன்சிந்தா மணியேயென் கண்ணுண்மணியே வடி
வுடை மாணிக்கமே. (2)

மானேர் விழிமலை மானேயெம் மானிடம் வாழ்ம
யிலே, கானே ரளகப் பசுங்குயி லேயருட் கட்கரும்பே,
தேனே திருவொற்றி மாநகர் வாழுஞ் சிவசத்தியே,வானே
கருணை வடிவே வடிவுடை மாணிக்கமே. (3)

திருமாலும் நான்முகத் தேவுமுன் னுள்மிகத் தேடிமனத்
தருமா லுழக்க அனலுரு வாகியமர்ந்தருளும்[பித்தன்மலை
பெருமானெம் மானொற்றிப்பெம்மான்கைம் மான்கொளும்
மருமானிடங்கொள்பெண்மானே வடிவுடை மாணிக்கமே.

கண்ணேயக் கண்ணின்மணியே மணியிற்கலந்தொளிசெய்
விண்ணே வியனொற்றி யூரண்ணல்வாமத்தில்வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணியேதெய்வப்பெண்ண
மூதே,மண்ணேயநீத்தவர் வாழ்வேவடிவுடைமாணிக்கமே.

மலையான்தவஞ்செய்துபெற்றமுத்தேயொற்றிவாழ்கனகச்
சிலையான் மணக்க மணக்குந்தெய் வீகத்திருமலரே
அலையால் மலிகடற் பள்ளிகொண் டான்தொழு மாரமுதே
வலையா னருமை மகளே வடிவுடைமாணிக்கமே. (6)

நீயே யெனது பிழைகுறிப் பாயெனில் நின்னடிமைப்,
பேயேன் செயும்வண்ண மெவ்வண்ண மோவெனைப் பெற்
றளிக்குந், தாயே கருணைத் தடங்கட லேயொற்றிச சார்
குமுத,வாயேர்சவுந்தர மானே வடிவுடை மாணிக்கமே.

'ஜீவகாருண்யமே கடவுள்வழிபாடு'

வான்தேட நான்கு மறைதேட மாலுடன் வாரிசமே,
லான்றேட மற்றை யருந்தவர் தேடவென் னன்பின்மை
யால், யான்தேட வென்னுளஞ் சேரொற்றி யூரெம் மிரு
நிதியே, மான்தேடும் வாட்கண் மயிலே வடிவுடை
மாணிக்கமே. (8)

திருநாள்நினைத்தொழுநன்னாள் தொழாமற் செலுத்தியநாள்
கருநா ளெனமறை யெல்லாம் புகலுங் கருத்தறிந்தே
ஒருநா ளினுநின் றனைமற வாரன்ப ரொற்றியில்வாழ்
மருநாண் மலர்க்குழன் மானே வடிவுடைமாணிக்கமே.(9)

வாணா ளடைவர் வறுமை யுறார்நன் மனைமகள்பொன்
பூணா ளிடம்புகழ் போதம் பெறுவர்பின்புன்மையொன்றுங்
காணார்நின்றனைமனங்கருதுகின்றோரொற்றிக்கண்ணுதல்பான்
மாணார்வ முற்ற மயிலே வடிவுடைமாணிக்கமே. (10)

தீதுசெய் தாலுநின் னன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
வாதுசெய் தாலும்நின் தாள்மறந் தாலு மதியிலியேன்,
ஏதுசெய்தாலும்பொறுத்தருள் வாயொற்றியின்னிடைப்பூ
மாதுசெய் தாழ்குழன் மானே வடிவுடைமாணிக்கமே.(11)

என்போற் குணத்திலிழிந்தவ ரில்லையெப் போதுமெங்கும்
நின்போ லருளிற் சிறந்தவ ரில்லையிந் நீர்மையினுற [ய்
பொன்போலும் நின்னருளன்னே யெனக்கும்புரிதிகண்டா
மன்போ லுயரொற்றி வாழ்வே வடிவுடைமாணிக்கமே,

தாயே மிகவுந் தயவுடை யாளெனச சாற்றுவரிச
சேயேன் படுந்துயர் நீக்கவென்னே யுளஞ்செய்திலையே
நாயேன் பிழையினி நாடாது நல்லருள் நல்கவரு
வாயேயெம் மொற்றி மயிலே வடிவுடை மாணிககமே.(13)

'ஜீவதயவைக்கொண்டு கடவுள்தயவைப் பெறவேண்டும்'

26760 MARAIMAL

நேயானு கூல மன்முடை யாயினி நீயுமென்றன்
தாயாகில் யானுன் தனையனு மாகிலென் றன்னுளத்தில்
ஓயாதுறுந்துய ரெல்லாந் தவிர்த்தருளொற்றியிற்செவ்
வாயாரமுத வடிவே வடிவுடை மாணிக்கமே. (14)

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் தாள்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின்சீர்
வாழியென் னுள்ளத்தில் நீயுநின் னொற்றி மகிழ்நருநீ
வாழியென் னுருயிர வாழ்வே வடிவுடைமாணிக்கமே.(15)

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது திருமுறை

——(*)——

திருசசிற்றம்பலம்

பாடற்கினியவாக்களிக்கும்பாலுஞ்சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய வடியவர்தங்கூட்ட மளிக்குங்குணமளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ யஞ்சேலென்மேலாணைகண்டாய்
தேடற் கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. (1)

பெற்ற தாய்தனை மகமறந் தாலும் பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும், உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலு முயிரை மேவிய வுடல்மறந் தாலுங், கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலுங் கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்,நற்றவத்தவ ருள்ளிருந் தோங்கும்நமசிவாயத்தை நான்மற வேனே. (2)

உடை யுடுத்திட இடைமறந் தாலு முலகு ளோர் பசிக் குணமறந் தாலும், படையெ டுத்தவர் படைமறந் தாலும் பரவை தானலைப் பதுமறந் தாலும், புடைய டுத்த தவர் தமைமறந் தாலும் பொன்னை வைத்தவர் புதை மறந் தாலு, நடைய டுத்தவர் வழிமறந் தாலு நமச்சி வாயத்தை நான்மற வேனே. (3)

முத்தி நீறிடார் முன்கையால் தொடினும் முள்ளு றுத்தல்போல் முனிவுடனடுங்க, பத்தி நீறிடும் பத்தர்கள் காலாற் பாய்ந்து தைக்கினும் பரிந்ததை மகிழ்க, புத்தி யீதுகாண் என்னுடை யுடம்பே போற்ற லார்புரம் பொடி பட நகைத்தோன், சத்தி வேற்கரத் தனயனை மகிழ் வோன் றன்னை நாமென்றுஞ்சார்ந்திடற் பொருட்டே. (4)

நிலையி லாவுல கியற்படு மனத்தை நிறுத்தி லேனொரு நியமமு மறியேன், விலையி லாமணி யேயுனை வாழ்த்தி வீட்டு நன்னெறிக் கூட்டென விளம்பேன், அலையி லார்ந் தெழுந் துரும்பென வலைநதே ளற்ப னேன்றிரு வருளடை வேனே, சிலையி லாரழற் கணைதொடுத் தவனே திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. (5)

இல்லையென் பதனுக் கஞ்சிடே னுய்க்கு மிணையிலே னிழிவினேன் துயர்க்கோர், எல்லைமற் றறியே னெதி யனே னென்னை யென்செய்தாற் றீருமோ வறியேன், கல்லைவில் லாக்குங் கருணைவா ரிதியே கண்ணுத லுடைய செங்கனியே, தில்லைவா ழரசே தெய்வமா மணியே திரு வொற்றியூர் வருந் தேவே. (6)

‘அருளலாது அணுவும அசைந்திடாது’

தேனென வினிக்குந் திருவருட் கடலே தெள்ளிய வமுதமே சிவமே, வானென நிற்குந் தெய்வமே முல்லை வாயில்வாழ் மாசிலா மணியே, ஊனென நின்ற வுணர் விலே னெனினு முன்திருக் கோயில்வந் தடைந்தால், ஏனெனக் கேளா திருந்தனை யையா ஈதுநின் திருவருட் கியல்போ. (7)

அஞ்செழுத் தோதி யுய்ந்திடாப் பிழையை யைய நின் திருவுளத் தெண்ணி, வெஞ்சனென் றையோ கைவி டிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே, கஞ்சன் மான் முதலோ ருயிர்பெற விடத்தைக் களத்திருத் திய வருட் கடலே, சஞ்சித மறுக்குஞ் சண்முக முடையோன் தந்தையே யொற்றியெந் தவமே. (8)

திருச்சிற்றம்பலம்

எழுத்தறியும் பெருமான்மாலை

—(*)—

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தைவினை தொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறு நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ யொற்றியெழுத் தறியும் பெருமானே. (1)

மைப்படியுங் கண்ணார் மயலுழக்கச் செய்வாயோ
கைப்படிய வுன்றன் கழல்கருதச் செய்வாயோ
இப்படியென் றப்படியென் றென்னறிவே னுன்சித்தம்
எப்படியோ வையா வெழுத்தறியும் பெருமானே. (2)

'சகஜப்பழக்கமே பழக்கம் சமாதிப்பழக்கம் பழக்கமல்ல'

நில்லா வுடம்பை நிலையென்றே நேசிக்கும்
பொல்லாத நெஞ்சப் புலையனே னிவ்வுலகிற்
சொல்லா மனநோயாற் சோர்வுற் றலையுமல்லல்
எல்லா மறிவா யெழுத்தறியும் பெருமானே. (3)

மாறாத வன்பிணியால் மாழாந்து நெஞ்சயர்ந்தே
கூறாத துன்பக் கொடுங்கடற்குள் வீழ்ந்தடியேன்
ஆறாதாற்றி யழுகின்றே னின்செவியில்
ஏறாதோ வையாவெழுத்தறியும் பெருமானே. (4)

உண்ணாடும் வல்வினையா லோயாப் பிணியுழந்து
புண்ணாக நெஞ்சம் புழுங்குகின்றேன் புண்ணியனே
கண்ணாளா வுன்றன் கருணை யெனக்களிக்க
எண்ணாயோவையா வெழுத்தறியும பெருமானே. (5)

புன்செய்கை மாறாப் புலையமட மங்கையர்தம்
வன்செய்கை யாலே மயங்குகின்ற வஞ்சகனேன்
கொன்செய்கை மாறாத கூற்றன் வருவானேல்
என்செய்வேனையா வெழுத்தறியும் பெருமானே. (6)

சங்குடையான்தாமரையான்தாள்முடியுங்காண்பரிதாம்
கொங்குடையகொன்றைக்குளிர்சடையாய்கோதையொ
பங்குடையாயேழைமுகம்பாராதுதள்ளிவிட்டால் [ரு
எங்கடைவே னையா வெழுத்தறியும் பெருமானே. (7)

பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப்புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்து நின்றா ரையோநான்
காமாந்த காரமெனுங் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தே னேற்றி யெழுத்தறியும் பெருமானே. (8)

'கடவுள்தயவைப்பெற கருணையேவழி'

வீட்டுக்கடங்காவிளையாட்டுப்பிள்ளையெனத்
தேட்டுக்கடங்காததீமனத்தா லாந்துயரம்
பாட்டுக் கடங்காநின் பத்த ரடிப்புகழ்போல்
எட்டுக் கடங்கா தெழுத்தறியும் பெருமானே. (9)

நறைமணக்குங்கொன்றைநதிசசடில நாயகனே
கறைமணக்குந் திருநீலகண்டப்பெருமானே
உறைமணக்கும்பூம்பொழில்சூழொற்றியப்பாவுன்னுடைய
மறைமணக்குந் திருவடியைவாய்நிரம்பவாழ்ததேனே ()

ஆறடுத்துச் சென்றவெங்கள் அப்பருக்கா வன்றுகட்டுச
சோறெடுத்துச சென்ற துணையே சுயஞ்சுடரே
ஊறெடுத்தோர் காணரிய வொற்றியப்பா வுன்னுடைய
நீறடுத்தவெண்டோள் நிலைமைதனைப் பாரேனே. (11)

பாடுகின்றோர்பாடப்பரிசளிக்கும்புண்ணியனே
தேடுகின்றோர்தேடநிற்குந்தியாகப்பெருமானே
ஊடுகின்றோரில்லாதவொற்றியப்பா அம்பலத்துள்
ஆடுகின்றசேவடிகண்டல்லலெலாந் தீரேனே. (12)

பெணமணியேயென்றுலகிற்பேதையரைப்பேசாதென்
கண்மணியேகற்பகமேகணணுதலிற்கொள்கரும்பே
ஒண்மணியேதேனேயென்றொற்றியப்பாவுன்றனைநான்
பண்மணஞ்செய் பாட்டிற் பரவித் துதியேனே. (13)

கல்லார்க்கிதயகூறிக்கற்பழிந்துநில்லாமல்
எல்லார்கரும்நல்லவனேயென்னரசேநற்றருமம்
ஒல்லார்புரமெரித்தவொற்றியப்பாவுன்னடிககே
சொல்லால்மலர்தொடுத்துசசூறந்தணிந்துவாழேனே(14)

தந்தைதாய்மக்கண் மனைதாரமெனுஞ்சங்கடத்தில்
சிந்தைதான்சென்றுதியங்கிமயங்காமே
உந்தையென்போரில்லாதவொற்றியப்பாவுன்னடிக்கீழ்
முந்தையோர்போன்றுமுயங்கிமகிழ்வேனோ. (15)

கள்ளுண்ட நாய்போற்கடுங்காமவெள்ளமுண்டு
துள்ளுண்டநெஞ்சத்துடுக்கடக்கியன்பர்கள்தம்
உள்ளுண்டதெள்ளமுதேஒற்றியப்பாவுன்றனை நான்
வெள்ளுண்ட நந்தி விடைமீதிற் காணேனோ. (17)

கூட்டுவிக்குண் மேலெழுவே கூற்றுவன்வந் தாவிதனை
வாட்டுவிக்குங் காலம் வருமுன்னே யெவ்வுயிர்க்கும்
ஊட்டுவிக்குந் தாயாகு மொற்றியப்பா நீயுலகை
ஆட்டுவிக்கு மம்பலத்துன் னாட்டமதைப் பாரேனோ. (18)

கண்ணப்பா வென்றருளுங் காளத்தி யப்பாமுன்
வண்ணப்பால் வேண்டும் மதலையைப்பால் வாரிதியை
உண்ணப்பா வென்றுரைத்த வொற்றியப்பா வந்தருள
எண்ணப்பா வென்றழுமிவ் வேழைமுகம பாராயோ. (19)

உடையாயுன் னடியவர்க்கு மலர்மேற் பூண்ட வொண்மணியாங் கண்மணிக்கு மோங்கு சைவ, அடையாள மென்னவொளிர் வெண்ணீற் றுக்கும் அன்பிலே னஞ்சாம லந்தோ வந்தோ, நடையாய வுடன்முழுது நாவாய்நின்று நவில்கின்றே னென்பாவி நாவைச சற்றும், இடையாத கொடுந்தீயாற் சுடினு மன்றி யென்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். (20)

அணிகொள் கோவணைக் கந்தையே நமக்கிங் குடுத்த வாடையென் றறிமட நெஞ்சே, கணிகொள் மாமணிக்

‘ஜீவாகள அனைவரும சகோதரமுறையே’

கலன்கள்நங் கடவுட் கண்ணுண் மாமணிக் கண்டிகை கண்டாய், பிணிகொள் வன்பவம் நீக்கும்வெண் ணீறே பெருமைச சாந்தமாம் பிறங்கொளி மன்றில், திணிகொள் சங்கர சிவசிவ வென்று சென்று வாழ்த்தலே செய் தொழி லாமே. (21)

தூய நெஞ்சமே சுகம்பெற வேண்டிற் சொல்லு வா மது சொல்லள வன்றால், காய மாயமாங் கான்செறிந் துலவுங் கள்வ ரைவரைக் கைவிடுத தததன்மேற், பாய வாணவப் பகைகெட முருக்கிப் பகலி ராவிலாப் பாங்கரி னின்றே, ஆய வானந்தக் கூத்துடைப் பரமா காய சோதிகண் டமருத லணியே. (22)

மன்னு ருத்திரர்வாழ்வை வேண்டினையோ மால வன்பெறும் வாழ்வு வேண்டினையோ, அன்னஊர்திபோ லாகவேண் டினையோ வமையு மிந்திர னாகவேண் டினை யோ, என்ன வேண்டினுந் தடையிலை நெஞ்சே யின்று வாங்கி நானீகுவ னுனக்கே, வன்னி யஞ்சடை யெம்பிரா னொற்றி வளநகொ ளூரிடைவருதியென் னுடனே. (23)

கொடிய மாதர்களிடையுறு நரகக்குழியி லென்ற னைக் கொண்டுசென றழுத்திக், கடிய வஞ்சனை யாலெ னைக் கலக்கங் கண்ட பாவியே! காமவேட் டுவனே, இடிய நெஞ்சக மிடருழந திருந்தே னின்னு மென்னைநீ யேனி ழுக் கின்றாய், ஒடிவிலொற்றியூர்ச் சிவனருள் வாளாலுன் னைவெட்டுவ லுண்மையென் றுணரே. (24)

தந்தை தாய்மனை மக்களென் றுலகச் சழக்கி லேயிட ருழக்குமென் மனந்தான், கந்த வாதனை யியற்றுகின் றது

'இரப்போர்க்கு இல்லையென்னார்பால் இரத்தல்ஈதலே'

காண் கடையனேன் செயக் கடவதொன்றறியேன், எந்தை யேயெனை யெழுமையுந் தொடர்ந்த வின்ப வெள்ளமே யென்னுயிர்க் குயிரே, சிந்தை யோங்கிய வொற்றி யெந் தேவே செல்வ மேபர சிவபரம்பொருளே. (25)

பண்ணாலுன் னருட்புகழைப் பாடு கின்றார் பணி கின்றார் நின்னழகைப்பார்த்துப் பார்த்துக், கண்ணார வுளங்குளிரக் களித்தா னந்தக்கண்ணீர்கொண் டாடுகின் றார் கருணை வாழ்வை, எண்ணாநின் றுனையெந்தா யெந்தா யெந்தா யென்கின்றார் நின்னன்ப ரெல்லா மென் றன், அண்ணாநா னொருபாவி வஞ்சநெஞ்சா லலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. (26)

கொலையறியாக் குணத்தோர்நின் னன்ப ரெல்லாங் குணமேசெய் துன்னருள்தான் கூடுகின்றார், புலையறிவேன் நானொருவன் பிழையேசெய்து புலங்கெட்ட விலங்கே போற் கலங்கு கின்றேன், நிலையறியே னெறியொன்று மறியே னெங்கும் நினையன்றித் துணையொன்று மறியேன் சற்றும், அலையறியா வருட்கடனீயாள்க வீணி லலை கின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. (27)

மண்ணேயும் வாழ்க்கையிடை மாழாந்து வன்பிணி யாற், புண்ணேயும் நெஞ்சம் புழுங்குகின்ற பொய்யவ னேன், பண்ணேயு மின்பப் பரஞ்சுடரே யென்னிரண்டு, கண்ணேயுன் பொன்முகத்தைக் காணக் கிடைத் திலனே. (28)

ஊட்டு கின்றனை யுண்ணுகின் றனன்மே லுறக்கு கின்றனை யுறங்குகின்றனன்பின், காட்டு கின்றனை காணு

கின் றனனீ களிப்பிக் கின்றனை களிப்புறுகின்றேன், ஆட்டு கின்றனை யாடுகின்றனனிவ் வகில கோடியு மவ்வ கையாலெல், நீட்டு மன்பருக் கன்ப!நின் றனது சித்த மன் றியான் செய்வதொன் றிலையே. (29)

சென்ற நாளிலோ ரிறைப்பொழு தேனுஞ் சிந்தை யோர்வகை தெளிந்த தன் றதுபோய், நின்ற நாளினு நிற் கின்ற திலைகா ணெடிய பாவியே னிகழ்த்துவ தென்னே, யென்ற னுருயிர்க்கொருபெருந் துணையா மெந்தை யேயெனை யெழுமையுங் காத்த, வுன்ற னுவின்று முவகை கொள் கின்றே னொற்றி யோங்கிய வுத்தமப் பொருளே.

நாடுந் தாயினு நல்லவ னமது நாதனென்றுனை நாடு மப் பொழுதே, வாடுநெஞ்சகந் தளிர்க்கின்றேன் மற்றை வைகற் போதெலாம் வாடுகின் றனன்காண், பாடுந் தொண்டர்களிடர்ப்படிற் றரியாப் பண்பென் மட்டுநின் பாலிலைபோலும், தேடும் பத்தர்தம் முளத்தமர் வோய்நின் சித்த மன்றியா செய்வ தொன்றிலையே. (31)

என்றுநின் னருள்நீ ருண்டுஉவந் திடுநா ளென்றுநின் னுருவுகண் டிடுநாள், என்றுநின் னடியர்க் கேவல்செய் திடுநா ளென்றென தகத்துய ரறுநாள், மன்றுணின் றூடும் பரஞ்சுடர்க் குன்றே வானவர் கனவினுந் தோனரு, தொன்றுறு மொன்றே யருண்மய மான வுத்தம வித்தக மணியே. (32)

அன்னை யப்பனு நீயென மகிழ்ந்தே யகங்கு ளிர்ந்துநா னுதரித் திருந்தேன், என்னை யிப்படி யிடர்கொள விடுதே தாலென்செய் கேனிதை யாரொடு புகல்கேன், பொன்னை

யொத்தநின் னடித்துணை மலரைப் போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ, உன்னை யெப்படி யாயினு மறவே னுனைய லாலெனை யுடையவ ரெவரே. (33)

கொடிய பாவியேன் படும்பரி தாபங் குறித்துக் கண்டுமென் குறையகற் றாது,நெடிய காலமுந் தாழ்த்தனை நினது நெஞ்சும்வஞ்சகம் நேர்ந்ததுண் டேயோ,அடியர் தந் துயர்கண்டிடிற் றரியா ரைய ரென்பரென் னளவஃ திலையோ, ஒடிய மாதுயர் நீக்கிடா யென்னி லுனைய லாலெனையுடையவ ரெவரே. (34)

தேடுவார் தேடுஞ் செல்வமே சிவமே திருவரு ளுபு ரித்தேவே, யேடுவா ரிதழிக் கண்ணியெங் கோவே யெந் தையே யெம்பெரு மானே, பாடுவார்க் களிக்கும் பரம் பரப் பொருளே பாவியேன் பொய்யெலாம் பொறுத்து, நாடுவார் புகழு நின்திருக் கோயி னண்ணுமா றெனக்கிவ ணருளே. (35)

அருட்பெருங் கடலே யானந்த நறவே யடிநடு வந்த மூங் கடந்த, தெருட்பெரு மலையே திருவணு மலையிற் றிகழ்சுயஞ் சோதியே சிவனே, மருட்பெருங் கடலின் மயங்குகின் றேனென் மயக்கெலா மொழிந்துவன் பிறவி, இருட்பெருங் கடல்விட் டேறநின் கோயிற் கெளியனேன் வரவர மருளே. (36)

ஏதுசெய் திடினும் பொறுத்தருள் புரியு மென்னு யிர்க் கொருபெருந்துணையே, தீதுசெய் மனத்தார் தம் முடன் சேராச் செயலெனக் களித்தவென் தேவே, வாது செய் புலனுல் வருந்தல்செய்கின்றேன் வருந்துறு வண்ண

---

1. ‘காமமே உட்பகைவன்’

மெற் கருளித், தாதுசெய் யவனேத் தருணையங் கோயிற்
சந்நிதிக் கியான்வர வருளே. (37)

உண்டோவென் போற்றய ராலலை கின்றவ ருத்தமநீ
கண்டோர் சிறிது மிரங்குகி லாயிக கடையவனேன்
பண்டோர்துணையறியேனின்னை யன்றிநிற் பற்றிநின்றேன்
எண்டோண் மணிமிடற்றெந்தாய்கருணையிருங்கடலே.(38)

தீதுமுற்று நாளுஞ்செயினும் பொறுததருளுஞ்
சாதுமுற்றுஞ் சூழ்ந்த தயாநிதிநீ யென்றடைந்தேன்
கோதுமுற்றுந் தீரக் குறியாயே னன்மையென்ப
தேதுமற்றபாவிக் கெவர்தா னிரங்குவரே. (39)

கல்லா நடையேன் கருணையிலே ளுனுலும்
நல்லார்புகழு நமசிவா யப்பெயரே
அல்லாது பற்றென் றறியேன ருளாயேல்
எல்லா முடையா யெனக்கா ரிரஙகுவரே. (40)

குடிகொண் மலஞ்சூழ் நவவாயிற் கூட்டைக் காத்துக்
குணமிலியாய்ப், படிகொ ணடையிற் பரதவிக்கும்பாவி
யேனைப் பரிந்தருளிப்,பொடிகொள் வெள்ளைப்பூச்சணிந்த
பொன்னே யுன்னைப் போற்றியொற்றிக்,கடிகொணகர்க்கு
வரசெய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. (41)

திருவண்ணப் பதிகம்

இரட்டைக்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எண்ணுறு விருப்பாதி வல்விலங் கினமெலாம்
இடைவிடா துழல வொளியோர்
எள்ளளவு மின்றியஞ் ஞானவிருள் மூடிட
இருண்டுயிர் மருண்டு மாழ்க

2. 'கோபமே வெங்கொடியன்'

நண்ணுமன மாயையாங் காட்டைக் கடந்துநின்
ஞானவருள் நாட்டை யடையும்
நாளெந்த நாளந்த நாளிந்த நாளென்று
நாயினேற் கருள்செய் கண்டாய்
விண்ணூறு சுடர்க்கெலாஞ் சுடரளித் தொருபெரு
வெளிக்குள் வளர் கின்றசுடரே
வித்தொன்று மின்றியே விளைவெலாந் தருகின்ற
விஞ்ஞான மழைசெய் முகிலே
கண்ணூறு நுதற்பெருங் கடவுளே மன்றினிற்
கருணை நடமிடு தெய்வமே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. (1)

படமெடுத் தாடுமொரு பாம்பாக வென்மனம்
பாம்பாட்டி யாக மாயைப்
பார்த்துக் களித்துதவு பரிசுடையர் விடயம்
படர்ந்த பிரபஞ்ச மாகத்
திடமடுத் துறுபாம்பி னாட்டமது கண்டஞ்சு
சிறுவன்யா னாக நின்றேன்
தீரத்து றந்தந்த வச்சந்த விர்த்திடு
திறத்தனீ யாகல் வேண்டும்
விடமடுத் தணிகொண்ட மணிகண்ட னேவிமல
விஞ்ஞான மாம கண்ட
வீடளித் தருள்கருணை வெற்பனே யற்புத
விராட்டுருவ வேதார்த் தனே

---

3. ‘கன லோபமே முழுமூடன்’

கடமடுத் திடுகளிற் றுரிகொண்ட ணிந்தமெய்க்
கடவுளே சடைகொ ளரசே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. (2)

எழுவகைப் பிறவிகளு ளெப்பிறவி யெய்துகினும்
எய்துக பிறப்பி லினிநான்
எய்தாமை யெய்துகினு மெய்திடுக விருமையினும்
இன்ப மெய்தினு மெய்துக

வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும் வருக
வறுமைவரு கினும்வருக மதிவரினும் வருகவவ
மதிவரினும் வருக வுயர்வோ

டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகவல
தெது போகினும் போகநின்
இணையடிகண் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டு மரசே

கழிவகைப் பவரோக நீக்குநல் லருளனுங்
கதிமருந் துதவு நிதியே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. (3)

பற்றுவது பந்தமப் பற்றறுதல் வீடிஃது
பரம வேதார்த்த மெனவே
பண்புளோர் நண்பினொடு பகருவது கேட்டுமென்
பாவிமனம் விடய நடையே

---

4. 'கடு மோகமே வீணன்'

எற்றுவது செய்யாம லெழுவதொடு விழுவதும்
இறங்குவது மேறு வதும்வீண்
எண்ணுவது நண்ணுவது மிப்புவன போகங்கள்
யாவினுஞ் சென்று சென்றே
சுற்றுவது மாகியோர் சற்றுமறி வில்லாது
சுழல்கின்ற தென்செய் குவேன்
தூயநின் திருவருளி னன்றியிவ வேழையச்
சுழன்மன மடக்க வருமோ
கற்றுவழு வற்றவர் கருத்தமர் கருத்தனே
கண்ணுதற் கடவுண் மணியே
கனகவம பலநாத கருணையங கணபோத
கமல குஞ்சித பாதனே. (4)

எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ
எழுகடலி னும்பெரி யவே
என்செய்கே னென்செய்கே னினியாயி னுஞ்செயா
தெந்தைநினை யேதத வென்றால்
வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சான்
மயங்குகின் றேனடிய னேன்
மனமெனது வசமாக நினதுவச நாளுக
வந்தறிவு தந்தருளு வாய்
ஒளியினொளி யேநாத வெளியின் வெளியேவிடய
வுருவினுரு வேயுரு வினும்
உயிரினுயி ரேயுயர்கொ ளுணர்வினுணர் வேயுணர்வின்
உறவினுற வேயெ மிறையே

5. 'கொடு மதமே துட்டகண் கெட்ட ஆங்காரி'

களியினிறை வெயளிகொள் கருணைநிதி யேமணிகொள்
கண்டவெண் டோட் கடவுளே
கணகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. (5)

சந்ததமெ னக்குமகிழ் தந்தைநீ யுண்டுநின்
தன்னிடத் தேம வல்லி
தாயுண்டு நின்னடிய ரென்னுநற் றமருண்டு
சாந்தமெனு நேய ருண்டு
புந்திகொணி ராசையா மனைவியுண் டறிவெனும்
புதல்வனுண் டிரவு பகலும்
போனவிட முண்டருட் பொருளுமுண் டானந்த
போகபோக் கியமு முண்டு
வந்தனைசெய் நீறெனுங் கவசமுண் டக்கமா
மணியுமுண் டஞ்செ ழுத்தா
மந்திரப் படையுண்டு சிவகதியெ னும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வு முண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணை மலையே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. (6)

அம்மை திருப்பதிகம்

இரட்டைக் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமுமுட் பிரியாத சாந்தமும்
புந்தி தளராத நிலையும்

6. 'எமமறும் மாச்சரியமே விழலன்'

எய்யாத வாழ்வும்வே றெண்ணுத நிறைவுநினை
என்றுமற வாத நெறியும்
இறவாத தகவுமேற் பிறவாத கதியுமிவ
வேழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குழையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவி ளக்கே
ஐய்யான னங்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. (1)

பவமான வெழுகடல் கடந்துமேற் கதியான
பதிநிலை யணைந்து வாழப்
பகலான சகலமுட னிரவான கேவலப்
பகையுந் தடாத படியோர்
தவமான கலனினருள் மீகாம னலலது
தமியே னடத்த வருமோ
தானு நடக்குமோ வென்செய்கே னின்திருச்
சரணமே சரண மருள்வாய்
உவமான மற்றபர சிவமான சுத்தவெளி
உறவான முத்த ருறவே
உருவான வருவான வொருவான ஞானமே
உயிரான வொளியி னுணர்வே

---

7. 'கோலையே இயம்புபாதகனும்'

அவமான நீக்கியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. (2)

சூரிட்ட நடையிலென் போரிட்ட மனதைநான்
சொல்விட்ட முடனணைத்துத்
துன்றிட்ட மோநமெனு நன்றிட்ட வமுதுண்டு
சும்மா விருத்தி யென்றூற்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலே னம்மம்மவோர்
கணமேனு நில்லாது பொல்லாது புவியிற்
கறங்கெனச் சுழல்கின்றதே
தாரிட்ட நீயருட் சீரிட்டி டாயெனிற்
றூழபிறவி தன்னி லதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி யென்னையும் வீழ்த்துமித்
தமியனே னென்செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. (3)

மாயையெனு மிரவிலென் மனையகத் தேவிடய
வாதனையெ னுங்கள் வர்தாம்
வந்துமன வடிமையை யெழுப்பியவ னைத்தமது
வசமாக வுளவு கண்டு

இவவெழுவரையும் வென்றவனேபெரியோன்.

மேயமதி யெனுமொரு விளக்கினைய வித்தெனது
மெய்ந்நிலைச சாளிகை யெலாம்
வேறற வுடைத்துள்ள பொருளெலாங் கொள்ளை
மிகநடுக் குற்று நினையே [கொள

நேயமுற வோவாது கூவுகின் றேன் சற்று
நின்செவிக் கேற விலையோ
நீதியிலை யோதரும நெறியுமிலை யோவருளி
னிறைவுமிலை யோவென் செய்கேன்

ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வானந்த வல்லி யுமையே. (4)

வெவ்வினைக் கீடான காயமிது மாயமென
வேதமுத லாகம மெலா
மிகுபறைய றைந்துமிது வெயின்மஞ்ச ணிறமெனும்
விவேகர்சொற் கேட்ட றிந்தும்
கவலைபெறு கடலுலகில் வைரமலை யொத்தவர்
கணத்திடை யிறத்தல் பலகாற்
கண்ணுறக கண்டுமிப் புலையுடலின் மானமோா
கடுவளவும் விடுவ தறியேன
எவ்வமுறு சிறியனே னேழைமதி யென்னமதி
இன்னமதி யென்றுணா கிலேன்
இநதமதி கொண்டுநா னெந்தவகை யழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்

---

1. ‘நிலையுறும் நிராசையே உயர்குலப்பெண்டிர்’

அவ்வியம கற்றியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. (5)

ஒளிமருவு முனது திரு வருளனுத் துணையேனும்
உற்றிடிற் சிறு துரும்பும்
உலகம் படைத்தன்முதன் முத்தொழிலி யற்றுமென
உயர் மறைக ளோரா நந்தந்
தெளிவுற முழக்கவது கேட்டுநின் றிருவடித்
தியானமில் லாம லவமே
சிறுதெய்வ நெறிசெல்லு மானிடப் பேய்கள்பாற்
சேராமை யெற்க ருளுவாய்
களிமருவு மிமயவரை யரையன்மக ளெனவருங்
கருணைதரு கலப மயிலே
கருதுமடி யவரிதய கமலமலர் மிசையருட்
கலைகிளர வள ரன்னமே
அளிநறைகொ ளிதழிவனை தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. (6)

நீறணிந் தொளிரக்க மணிதரித் துயர்சைவ
நெறிநின் றுனக்கு ரியவோர்
நிமலமுறு மைந்தெழுத தெண்ணிலையு றக்கொண்டு
நின்னடிப் பூசை செய்து

---

2. 'நிகழ் சாந்தமே புதல்வன்'

வீறணிந் தென்றுமொரு தன்மைபெறு சிவஞான
 வித்தகர்ப தம்பர வுமோர்
மெய்ச்செல்வ வாழக்கையில் விருப்பமுடை யேனிது
 விரைந்தருள வேண்டு மமுதே
பேறணிந் தயன்மாலு மிந்திரனு மறிவரிய
 பெருமையை யணிந்த வமுதே
பிரசமலர் மகள்கலைசொல் மகள்விசய மகண்முதற்
 பெண்கள்சிர மேவு மணியே
ஆறணிந் திடுசடையர் தில்லையம் பதிமருவும்
 அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
 வாநந்த வல்லி யுமையே. (7)

சரஸ்வதி தோத்திரம்

கலைபயின்ற வுளத்துஇனிக்கும் கரும்பினை முக்கனியை யருட்கடலைஓங்கும், நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த நான்முகனார் நீண்டநாவின், தலைபயின்ற மறைபயின்று மூவுலகுங் காக்கின்ற தாயை வாகைச், சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி யம்மையைநாம் சிந்திப்போமே.

—(*)—

வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்குந், தூண்டாத மணிவிளக்கே பொதுவி லாடுஞ் சுடர்க்கொழுந்தே யென்னுயிர்க்குத் துணையே யென்னை, ஆண்டாறு மூன்றண்டில் ஆண்டு

---

3. 'நெறிபெறும் உதார தனமே நற்பொருள்'

கொண்ட வருட்கடலே யென்னுள்ளத் தமர்ந்த தேவே, யீண்டாவ வெனச்சிறிய வடியேனுள்ளத் தெண்ணமறிந் தருளாயே லெனசெய் கேனே. (1)

திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன் சிறிய ரிற் சிறியனேன் வஞ்சக், கருவுளக் கடையேன் பாவி யேன் கொடிய கன்மனக் குரங்கனே னந்தோ, வெருவுறு கின்றே னஞ்சலென் றின்னே விரும்பியாட் கொள்ளுதல் வேண்டும், மருவுமா கருணைப் பெருங்கட லமுதே வள் ளலே யென்பெரு வாழ்வே. (2)

மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி, கறைமணி கண்ட போற்றி கணனுதற் கரும் பே போற்றி, பிறைமுடிச சடைகொண் டோங்கும் பேர ருட் குன்றே போற்றி, சிறைதவிர்த் தெனையாட் கொண் டசிவசிவ போற்றி போற்றி. (3)

நிதியைநினைந் துனைமறந்த மதியைநினைந் தழுகேனே நிமலா னைக், கதியையிகழ்ந் திருள்விழைந்த விதியை நினைந் தழுகேனே கண்போல் வாய்ந்த, பதியையுனைப் பாடாத பாட்டைநினைந் தழுகேனே படிற்று நெஞ்சச, சதியைநினைந் தழுகேனே யாதுகுறித் தழுகேனித் தமிய னேனே. (4)

தாய்தடை யென்றேன் பின்னர்த் தாரமே தடை யென்றேனுற், சேயதடை யென்றேனிந்தச சிறுதடை யெல்லாந் நீராநதுந், தோய்தடைச சிறியேனின்னுந் துறந் திலே னெனைத் தடுக்க, ஏய்தடை யாதோ வெநதா யென் செய்கே னென்செய் கேனே. (5)

---

4. 'மருளா நீக்கும் அறிவே துணைவன்'

கள்ளுருகு மலர்மணம்போற் கலந்தெங்கு நிறைந்
தோய்நின் கருணைக் கந்தோ, முள்ளுருகும் வலியபராய்
முருடுருகு முருகாத முறைசேர் கல்லும், வள்ளுருகு
மலையுருகு மண்ணுருகு மரமுருகு மதியி லேன்றன், உள்ளு
ருகும் வகையிலையென் செய்கேனோ னேன்பிறந்தேனோ
தியனேனே. (6)

மன்னுயிர்க்குத் தாய்தந்தை குருதெய்வ முறவுமுதன்
மற்று நீயே, பின்னுயிர்க்கோர் துணைவேறு பிறிதிலை
யென்று யானறிந்த பின்பொய் யான, மின்னுடற்குத் தாய்
தந்தை யாதியரை மதித்தேனோ விரும்பி னேனோ, என்
னுயிர்க்குத் துணைவாநின் றுணையொன்று மறியேனா
னிரங்கிடாயே (7)

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற் கண்ணா
விழித்து வயங்குதமப்பெண், உருவாணை யுருவாக்கி யிறந்த
வரை யெழுப்புகின்ற வுறுவ னேனுங், கருவாளனை யுறவி
ரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்த னேலெங்,
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக்
கூறேனோதே. (8)

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக் கில்லை
யென்றார் மேலோர் நானும், பொய்விளக்கே விளக்கென
வுட் பொங்கிவழி கின்றேனோர் புதுமை யன்றே, செய்வி
ளக்கும் புகழுடைய சென்னநகர் நண்பர்களே செப்பக்
கேளீர், நெய்விளக்கே போன்றொரு தண்ணீர் விளக்கு
மெரிந்தது சந்நிதியின் முன்னே. (9)

---

5 'மலைவறும் நிராங்காரமே நண்பன்'

ஆண்டவனீ யாகிலுனக் கடியனுநா ளுகில் அருளு டையா யின்றிரவி லருளிறைபாய் வந்து, நீண்டவனே முதலியருந் தீண்டரிதாம் பொருளின் னிலைகாட்டி யடி முடியி னெறிமுழுதுங் காட்டி, வீண்டவனே காலையினீ விழித்தவுட னெழுந்து விதிமுடித்துப் புரிதியிது விளங்கு மெனப் புகல்வாய், தாண்டவனே யருட்பொதுவிற் றனி மூதலே கருணைத் தடங்கடலே நெடுந்தகையே சங்க ரனே சிவனே. (10)

விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கும்
மேலானு னன்பருள மேவுநட ராஜன்
பண்படைத்த வெனையறியா விளம்பருவந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெலா மவமதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சியென லானேன்[றன்
கண்படைத்துங் குழியில்விழக் கணக்குமுண்டோ அவன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. (11)

சித்தமணி யம்பலத்தா னென்பிராண நாதன்
சிவபெருமா னெம்பெருமான செல்வநட ராஜன்
வாய்த்தவென்னை யறியாத விளம்பருவந் தனிலே
மகிழ்ந்துவந்து மாலையிட்டான் மறித்துமுகம் பாரான்
ஆய்த்தகலை கற்றுணர்ந்த வணங்கனையார் தமக்குள்
ஆர்செய்த போதனையோ வானுலு மிதுகேள்
காய்த்தமரம் வளையாத கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. (12)

---

6. 'சுத்தமுறும் மனமே நல் ஏவல்'

மூன்றாவது திருமுறை

——(*)——

சீரார் வளஞ்சே ரொற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிதனை, ஊரா ருடன்சென் றெனது நெஞ்ச முவகை யோங்கப் பார்த்தனன்காண், வாரார் முலைகண் மலைக ளென வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால், ஏரார் குழலா யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. (1)

மாதர் மணியே மகளேநீ வாய்த்த தவந்தான் யாதறி யேன், வேத ரனந்தர் மாலனந்தர் மேவி வணங்கக் காண் பரியார், நாதர் நடன நாயகனார் நல்லோ ருளத்துள் நண் ணுகின்றோர், கோத றியாத் தியாகர் தமைக் கூடி யுட லங் குளிர்ந்தனையே. (2)

எங்கள் காழிக் கவுணியரை யெழிலார் சிவிகை யேற் றிவைத்தோர், திங்க ளணியுஞ் செஞ்சடையார் தியாகர் திருவா ழொற்றியினார், அங்க ளணிபூந் தார்ப்புயத்தி லணைத்தா ரல்ல ரெனமடவார், தங்க ளலரோ தாழா தென் சகியே யினிநான் சகியேனே. (3)

விடையார் விடங்கப் பெருமானார் வெள்ளச் சடை யார் வெண்ணகையால், அடையார் புரங்க ளெரித்தழித் தாரவரே யிந்த வகிலமெலாம், உடையா ரென்று நினைத் தனையூ ரொற்றி யவர்க்கென் றுணர்ந்திலையோ, இடையா மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென் மகளே. (4)

---

7. 'வரு சகலகேவலமிலாத இடமே மேலான இடம்'

திடனான் மறையார் திருவொற்றித் தியாக ரவர்தம் பவனிதனை, மடனா மகன்று காணவந்தால் மலர்க்கை வளைக ளினைக்கவர்ந்து, படனா கணியர் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம், உடனா வோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. (5)

தக்க வளஞ்சே ரொற்றியில்வாழ் தம்பி ரானார் பவனி தனைத், துக்க மகன்று காணவந்தாற் றுகிலைக் கவர்ந்து துணிவுகொண்டே, பக்க மருவு நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம், ஒக்க வோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. (9)

மடையார் வாளை வயலொற்றி வள்ளல் பவனி தனைக்காண, அடையா மகிழ்வி னொடும்வந்தா லம்மா நமது விடயமெலாம், படையாற் கவர்ந்து நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம், உடையா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே, (7)

நான்காவது திருமுறை

—(*)—

நிறையணிந்த சிவகாமி நேயநிறை யொளியே
நித்தபரி பூரணமாஞ் சுத்தசிவ வெளியே
கறையணிந்த களத்தரசே கண்ணுடைய கரும்பே
கற்கண்டே கனியேயென் கண்ணேகண் மணியே
பிறையணிந்த முடிமலையே பெருங்கருணைக் கடலே
பெரியவரெல்லாம் வணங்கும் பெரியபரம்பொருளே
குறையணிந்து திரிகின்றேன் குறைகளெலாந் தவிர்த்தே
குற்றமெலாங் குணமாகக் கொள்வதுநின குணமே.(1)

துப்பாடு திருமேனிச் சோதிமணிச் சுடரே
துரியவெளிக் குள்ளிருந்த சுத்தசிவ வெளியே
அப்பாடு சடைமுடியெம் மாசுந்த மலையே
அருட்கடலே குருவேயென் னுண்டவனே யரசே
இப்பாடு படவெனக்கு முடியாது துரையே
யிரங்கியருள் செயல்வேண்டு மிதுதருணங் கண்டாய்
தப்பாடு வேனெனினு மென்னைவிடத் துணியேல்
தனிமன்று ணடம்புரியுந் தாண்மலரெந் தாயே. (2)

ஆளுடைய பிள்ளையார்

சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ மரபிற் றிகழ் விளக்கே-தெவிட்டா துளத்திற் றித்திக்குந் தேனே யழியாச் செல்வமே, காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே - கரும்பே கனியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே, ஏரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டும் - இன்பக்குதலை மொழிக்குருந்தே யென்னு ருயிருக் கொருதுணையே, பேரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் றிருப்புகழைப் பேசு கின்றோர் - மேன்மேலும் பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே.

ஆளுடைய அரசுகள்

திருத்தகுசீ ரதிகையருட் டலத்தி னோங்குஞ்
சிவக்கொழுந்தி னருட்பெருமைத்திறத்தால் வாய்மை
உருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ
வொளிவிளங்க நாவரசென் றொருபேர்பெற்றுப்

'எழுமனம் உடைந்துருகி நெகிழ்தலே அன்பு'

பொருத்தமுற வுழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனித னேயென்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே.

ஆளுடைய நம்பிகள்

பேரூரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
ஊரூரும் பலபுகல வோரிரவிற் றூதனெனத்
தேரூருந் திருவாரூர்த் தெருவுதொறு நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே.

ஆளுடைய அடிகள்

சேமமிகுந் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை யெண்ணுதொறுங்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையா ளின்பினுமின் பெய்துவதே. (1)

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே [ன்
தேன்கலந்துபால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தெ
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே. (2)

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில் [வித்துத்
ஒருமொழியே யென்னையுமென் னுடையனையு மொன்று
தருமொழியா மென்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே. (3)

பெண்சுமந்த பாகப் பெருமா னொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும் வைகைநதி

'ஏழைகளைப்பார்த்து மனங்கசிதலே அன்பு'

மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின்பொருட்டன்றோபுண்ணியனே

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே.(5)

ஐந்தாவது திருமுறை.

திருச்சிற்றம்பலம

சீர்கொண்ட தெய்வவதனங்களாறுந் திகழ்கடப்பந்[மோர்
தார்கொண்ட பன்னிருதோள்களுந் தாமரைத் தாள்களு
கூர்கொண்டவேலுமயிலுநற்கோழிக்கொடியுமருட்
கார்கொண்டவண்மைத்தணிகாசலமுமென்கண்ணுற்றதே

அன்னேயெனைத்தந்தவப்பாவென்றேங்கியலறுகின்றேன்
என்னேயிவ்வேழைக் கிரங்காது நீட்டித்திருத்தலெந்தாய்
பொன்னேசுகுணப்பொருப்பேதணிகைப்பொருப்பமர்ந்த
மன்னே கலபமயின்மே லழகிய மாமணியே. (2)

சீர்பூத்த வருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே யெனதுகுல தெய்வ மேநற்
கூர்பூத்த வேன்மலர்க்கை யரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலைக் கோவே ஞானப்
பேர்பூத்த நின்புகழைக் கருதி யேழை
பிழைக்கவருள் செய்வாயோ பிழையை நோக்கிப்
பார்பூத்த பவத்திலுற விடினென் செய்கேன்
பாவியே னந்தோவன் பயந்தீ ரேனே.

ஜீவசாக்ஷிமாலை

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
பாதமல ரழகினையிப் பாவி பார்க்கில்
கண்ணேறு படுமென்றோ கனவி லேனுங்
காட்டென்றாற் காட்டுகிலாய் கருணை யீதோ
விண்ணேறு மரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேயென் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. (1)

மின்னாரு மிடைமடவா ரல்கு லாய
வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தே னல்லால்
எந்நாளு முனைப்போற்றி யறியே னென்னே
ஏழைமதி கொண்டேனிங் கென்செய் கேனே
அன்னையென் னப்பாவென் றரற்று மன்பர்க்
காரமுதே யருட்கடலே யமரர் கோவே
தன்னார்வத் தமர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. (2)

வாழாத வண்ணமெனைக் கெடுக்கும் பொல்லா
வஞ்சகநெஞ் சாலுலகின் மாழாந் தந்தோ
பாழான மடந்தையர்பாற் சிந்தை வைக்கும்
பாவியேன் முகம்பார்க்கப் படுவ தேயோ
ஏழாய வன்பவத்தை நீக்கு ஞான
வின்பமே யென்னரசே யிறையே சற்றுந்
தாழாத புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. (3)

உளந்தளர விழிசுருக்கும் வஞ்சர் பாற்சென்
றுத்தமநின் னடியைமறந் தோயா வெய்யில்
இளந்தளிர்போ னலிந்திரந்திங் குழலு மிந்த
வேழைமுகம் பார்த்திரங்கா யென்னே யென்னே
வளந்தருசற் குணமலையே முக்கட் சோதி
மணியினிருந் தொளிரொளியே மயிலூர் மன்னே
தளந்தரும்பூம் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. (4)

உள்ளமனக் குரங்காட்டித் திரியு மென்ற
னுளவறிந்தோ வையாநின் புனைப் போற்றார்
கள்ளமனக் குரங்குகளை யாட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்ளமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேயென் தெய்வமே தேவர் கோவே
தள்ளரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. (5)

வந்தாள்வா யையாவோ வஞ்சர் தம்பால்
வருந்துகின்றே னென்றலறு மாற்றங் கேட்டும்
எந்தாய்நீ யிரங்காம லிருக்கின் றாயால்
என்மனம்போ னின்மனமு மிருந்த தேயோ
கந்தாவென் றுரைப்பவர்தங் கருத்துள் ளூறுங்
கனிரசமே கரும்பேகற் கண்டே நற்சீர்த்
தந்தாளுந் திருத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. (6)

'கலந்து கலந்து பாடினால்தான் மனமுருகும்'

பன்னகமெனாந் துறுவஞ்ச வுலகி னின்று
பரதவித்துன்னருட்கெதிர்போய்ப்பார்க்கின்றேனின்

பொன்னருளைப் புணர்ந்துமன மகிழ்ந்து வாழப்
புண்ணியனே நாயேற்குப் பொருத்த மின்றோ

பின்னையொரு துணையறியேன் தனியே விட்டாற்
பெருமகினக் கழகேயோ பேதை யாமென்

றன்னையளித் தருள்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே.

சைவ நாயக சம்பந்த னாகிய தமிழருட் குன்றேயென், தெய்வ மேனியை யன்றியோர் துணையிலேன் திருவரு ளறியாதோ, வைவ தேகொளும் வஞ்சகர் தம்மிடை வருந்தி நெஞ் சழிகின்றேன், செய்வ தோர்கிலேன் கைவிடி லென் செய்கேன் தெளிவிலாச் சிறியேனே. (1)

நண்ணேனோ மகிழ்வினொடுந் திருத்தணிகை மலையதனை நண்ணி யென்றன், கண்ணேநீ யமர்ந்தவெழில் கண் குளிரக் காணேனோ கண்டு வாரி, உண்ணேனோ ஆனந் தக் கண்ணீர்கொண் டாடியுனக் குகப்பாத் தொண்டு, பண் ணேனோ நின்புகழைப் பாடேனோ வாயாரப் பாவியேனே.

பாவியேன் படுந்துயருக் கிரங்கியருள் தணிகையிலென் பால்வா வென்று, கூவிநீ யாட்கொளவோர் கன வேனுங் காணேனோ குணப்பொற் குன்றே, ஆவியே யறிவேயெ னன்பேயென் னரசேநின் னடியைச சற்றும், சேவியே னெனினுமெனைக் கைவிடே லன்பர்பழி செப்புவாரே. (3)

காச மேகங் கடும்பிணி சூலமோ காதி யாற்றந்து கண்கலக் கஞ்செயு, மோச மேநிச மென்றுபெண் பேய்களை முன்னினேனினை முன்னில னாயினேன், பாச நீக்கிடு மன்பர்கள் போலெனைப் பாது காக்கும் பரமுனக் கையனே, தேசம் யாவும் புகழ்தணி காசலச் செல்வ மேயருட் சிற்சுக வாரியே. (4)

ஐய மேற்றுத் திரிபவ ராயினு மாசை யாம்பொரு ளீந்திட வல்லரேற், குய்யங் காட்டு மடந்தையர் வாய்ப் பட்டுன் கோல மாமலர்ப்பாதங் குறித்திலேன், மையு லாம்பொழில் சூழுந் தணிகைவாழ் வள்ள லேவள்ளி நாயக னேபுவிச, சைய றும்பர ஞானிகள் போற்றிடுஞ் சாமி யேயெனைக் காப்பதுன் றன்மையே. (5)

தணிகை மலையைச சாரேனோ சாமி யழகைப் பாரேனோ
பிணிகை யறையைப் பேரேனோ பேரா வன்பு கூரேனோ
அணிசெ யருணீ ராரேனோ வாரூத் தாகந் தீரேனோ
பணிசெய் தொழும்பிற் சேரேனோ பார்மீ திரங்குநீரேனே.

காமப் பயலைத் தடுப்பாரோ கடப்ப மலர்த்தார் கொடுப்பாரோ, வேமத் தனத்தைக் கடுப்பாரோ வென்மே லன்பை விடுப்பாரோ, மாமற் றொருவீ டடுப்பாரோ மன திற் கோபந் தொடுப்பாரோ, தாமத் தாழ்வைக் கெடுப் பாரோ தணிகை தனில்வே லெடுப்பாரே. (2)

தணிகா சலம்போய்த் தழையேனோ சாமி திருத்தாள் விழையேனோ, பணிகா தலித்துப் பிழையேனோ பாடி மனது குழையேனோ, திணிகா னுலகை யழையேனோ,

சேர்ந்தவ் வீட்டு ளுழையேனே, பிணிகா ளுலகிற் பிறந் துழன்றே பேதுற் றலையும் பழையேனே. (3)

திருப்பள்ளித்தாமம் தாங்கல்

வெம்புமஉயிர்க்கு ஒருறவாய் வேளை நமனும் வருவானேல் தம்பிதமையன் துணையாமோதனையர் மனைவிவருவாரோ உம்பர்பரவும்திருத்தணிகைஉயர்மாமலைமேல்இருப்பவர்க் குத், தும்பக்குடலையெடுக்காமல்துக்கஉடலைஎடுத்தேனே.

தொல்லைக்குடும்பத்துயரதனில்தொலைத்தேனந்தோ காலமெல்லாம், அல்லல்அகற்றிப் பெரியோரை அடுத்தும் அறியேன் அரும்பாவி, செல்வத்தணிகைத் திருமலைவாழ் தேவாவுன்றன் சந்நிதிக்கு, வில்வக் குடலை எடுக்காமல் வீணுக்கு உடலை எடுத்தேனே. (2)

அவலவயிற்றைவளர்ப்பதற்கே அல்லும்பகலும்அதில் கினைவாய்க், கவலைப்படுவதன்றி சிவகனியைச் சேரக் கருதுகிலேன், திவலையொழிக்கும் திருத்தணிகைத் திரு மால்மருகன் திருத்தாட்குக், குவளைக் குடலைஎடுக்காமல் கொழுத்தவுடலை எடுத்தேனே.

தேனே யுளங்கொள் தெளிவே யகண்ட சிதமேவி நின்ற சிவமே, கோனே கனிந்த சிவபோத ஞான குருவே விளங்கு குகனே, தானே தனக்கு நிகராய் விளங்கு தணி காச லத்தெம் மரசே, நானேழை யிங்கு மனநொந்து நலி கின்ற செய்கை நலமோ. (1)

‘ஈன்றஆன்காணஇளங்கன்றுயலமந்து வங்குதலே அன்பு’

அடுத்திலே னின்னடிய ரவைக்குட் சற்றும்
அன்பிலே னின்தொழும்ப னாகேன் வஞ்சம்
தடுத்திலேன் தணிகைதனிற் சென்று நின்னைத்
தரிசனஞ்செய் தேமதுரத் தமிழ்ச்சொன் மாலை
தொடுத்திலே னழுதுநின தருளை வேண்டித்
தொழுதுதொழு தானந்தத் தூய்நீ ராடேன்
எடுத்திலே னல்லனென்னும் பெயரை யந்தோ
என்பிறந்தேன் புவிச்சுமையா விருக்கின் றேனே. (2)

மக்கட்பிறவி யெடுத்துமுனை வழுத்தாக் கொடிய மர மனையேன், துக்கக்கடலில் வீழ்ந்துமனஞ் சோர்கின்றே னோர் துணைகாணேன், செக்கர்ப் பொருவு வடிவேற்கைத் தேவே தெவிட்டாத் தெள்ளமுதே, முக்கட் கரும்பின் முழுமுத்தே முறையோமுறையோ முறையேயோ. (3)

அழுக்கு நெஞ்சினேன் பொய்யல தறியேன்
அணங்க னார்மய லாழத்தில் விழுந்தேன்
பழுக்கு மூடருட் சேர்ந்திடுங் கொடியேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
மழுக்கை யேந்திய மாசிலா மணிக்குள்
மன்னி யோங்கிய வளரொளிப் பிழம்பே
வழுக்கி லார்புகழ் தணிகையென் னரசே
வள்ள லேயென்னை வாழ்விக்கும் பொருளே. (4)

அண்ணாவோ வென்னருமை யையாவோ பன்னிரண்டு
கண்ணாவோ வேல்பிடித்த கையாவோ செம்பவள
வண்ணாவோ நற்றணிகை மன்னாவோ வென்றென்றே
எண்ணாவோ துன்பத் திருங்கடற்கண் மன்னினனே. (5)

'உண்மையாகக் கடவுளைக்காண விரும்பினால் அழுதகண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இசசை செல்லுமா?'

தேவ ரேழுத லுலகங்கள் யாவையுஞ் சிருட்டியாதிய
செய்யும், மூவ ரேயெதிர் வருகினு மதித்திடேன் முருக
நின் பெயர்சொல்வோர், யாவரேனு மென்குடிமுழுதாண்
டெனை யளித்தவ ரவரேகாண், தாவ நாடொறுத் தணி
கையம் பதியில்வாழ் சண்முகப் பெருமானே. (6)

புண்ணியநீற்று மான்மியம்

திவசங்கடொ றுங்கொண்டிடு தீமைப்பிணி தீரும்
பவசங்கட மறுமிவ்விக பரமும்புகழ் பரவுங்
கவசங்களெ னசசூழ்ந்துறு கண்ணேறது தவிரும்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே. (7)

மாலேந்திய குழலார்தரு மயல்போமிட ரயல்போம்
கோலேந்திய வரசாட்சியுங் கூடும்புகழ் நீடும்
மேலேந்திய வானுடர்கண் மெலியாவித மொருசெவ
வேலேந்திய முருகாவென வெண்ணீறணிந் திடிலே. (8)

துயிலேறிய சோர்வுங்கெடுந் துயரங்கெடு நடுவன்
கையிலேறிய பாசந்துணி கண்டேமுறித் திடுமால்
குயிலேறிய பொழில்சூழதிருக் குன்றேறி நடக்கும்
மயிலேறிய மணியேயென வளாநீறணிந திடிலே. (9)

தேருப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாறுப்பிணி மாயுந்திரு மருவுங்கரு வொருவும்
வீறுப்பொடு வருசூர்முடி வேறுக்கிட வருமோர்
ஆறுக்கரப் பொருளேயென வருணீறணிந் திடிலே. (10)

'சாதி மத சமயம் பிசுசுப் பிள்ளை விளையாட்டே'

மஞ்சேர் பிணிமிடி யாதியை நோக்கி வருந்துறமென்
னெஞ்சே தணிகைய னாறெழுத் துண்டுவெண்ணீறுண்டுநீ
யெஞ்சே லிரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
அஞ்சேலிதுசத்தியமாமென்சொல்லையறிந்துகொண்டே.

கண்ணப்ப னென்னுந் திருப்பெய ராலுல கம்புகழுந்
திண்ணப்ப னேத்துஞ்சிவனார் மகனுக்குத்தெண்டனிட்ட
விண்ணப்ப மொன்றிந்த மேதினி மாயையில் வீழ்வதறத்
தெண்ணப் படுநின் திருவரு ளீகவிவ் வேழையற்கே. (12)

அழிதரு முலக வாழ்வினை மெய்யென் றலைந்திடும் பாவியே னியற்றும், பழிதரும் பிழையை யெண்ணுறே லின்று பாதுகாத் தளிப்பதுன் கடனே, மொழிதரு முக்கட் செங்கரும் பீன்ற முத்தமே முத்தியின் முதலே, கொழிதரு மருவி பொழிதருந் தணிகைக் குன்றமாந் திருகுணக் குன்றே. (13)

பட்டி மாடெனத் திரிதரு மடவார் பாழ்ங்குழிக் குள்வீழ்ந் தாழ்ந்திளைக்கின்றேன், தட்டி லார்புகழ் தணிகையை யடையேன் சம்பு வென்னுமோர் தருவொளிர் கனியே, ஒட்டி லேனினை யுளத்திடை நினையேன் உதவுறு துநச்சுறுமர மானேன், எட்டி யென்முன மினிப்புறு மந்தோ என்செய் வான்பிறந்தேனெளி யேனே. (14)

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ யானை மகிழ் மணிக்குன்றே யரசே முக்கட், பேறுமுகப் பெருஞ் சுடர்க்குட் சுடரே செவவேல் பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம், வீறுமுகப் பெருங்குணத்தோ ரித

‘தயையுடையா ரெல்லாம் சன்மார்க்கர்களே’

யத்தோங்கும் விளக்கமே யானந்த வெள்ள மேமுன், தேறுமுகப் பெரியவருட்குருவா யென்னைச் சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. (15)

கல்வியெலாங் கற்பித்தாய் நின்பா னேயங் காண வைத்தா யிவ்வுலகங் காணலென்றே, ஒல்லும்வகை யறி வித்தா யுள்ளே நின்றென் னுடையானே நின்னருளு முதவு கின்றாய், இல்லையெனப் பிறர்பாற்சென் றிரவா வண்ணம் ஏற்றமளித் தாயிரக்க மென்னே யென்னே, செல்வவருட் குருவாகி நாயி னேனைச் சிறுகாலை யாட் கொண்ட தேவ தேவே. (16)

எந்தைபிரா னென்னிறைவ னிருக்க விங்கேயென்ன குறை நமக்கென்றேயிறுமாப் புற்றே, மந்தவுல கினிற்பிற ரையொருகா சுக்கும் மதியாம னின்னடியே மதிக்கின் றேன்யான், இந்தவடி யேனிடத்துன் திருவு ளந்தான்எவ் வாறோ வறிகிலே னேழை யேனுற், சிந்தைமகிழ்ந் தருட் குருவாயென்னை முன்னே சிறுகாலையாட்கொண்ட தேவ தேவே. (17)

மாறாத பெருஞ்செல்வ யோகர் போற்று மாமணியே யாறுமுகமணியே நின்சீர், கூறாத புலைவாய்மை யுடையார் தம்மைக் கூடாத வண்ணமருட் குருவாய் வந்து, தேறாத நிலையெல்லாந்தேற்றியோங்குஞ் சிவஞானச்சிறப்படைந்து திகைப்புநீங்கிச, சீறாதவாழ்விடைநான் வாழ வென்னைச் சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. (18)

ஞாலமெலாம் படைத்தவனைப் படைத்த முக்கண் நாயகனேவடிவேற்கைநாதனேநான்,கோலமெலாங்கொடி

'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக'

யெனற் குணமொன் றில்லேன் குற்றமே விழைந்தேனிக் கோதுளோனைச், சாலமெலாஞ் செயுமடவார் மயக்கினீக் கிசன்மார்க்க மடையவருள் தருவாய்ஞானச, சீலமெலா முடையவருட் குருவாய்வந்து சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. (19)

பன்னிருகண் மலர்மலர்ந்த கடலேஞானப் பரஞ்சுடரே யாறுமுகம்படைத்த கோவே, என்னிருகண் மணியே யென்தாயே யென்னை ஈன்றானே யென்னரசே யென்றன் வாழ்வே, மின்னிருவர் புடைவிளங்க மயின்மீதேறி விரும் புமடியார்காண மேவுந்தேவே, சென்னியினின் னடிமலர் வைத்தென்னை முன்னே சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. (20)

முருகா வெனநின் றேத்தாதமூட ரிடம்போய்மதிமயஙகி - முன்னுமடவார் முலைமுகட்டின் முயங்கி யலைந்தே னினைமறந்தேன், உருகா வஞ்ச மனத்தேனை யுருத்தீர்த் துயெமனொருபாசத்-துடலநடுங்க விசிக்கிலவற் குரைப்ப தறியே னுத்தமனே, பருகா துள்ளத் தினித்திருக்கும் பாலே தேனே பகரருட்செம் - பாகே தோகை மயினடத் தும் பரமேயாவும் படைத்தோனே, தருகா தலித்தோன் முடிகொடுத்த தருமதுரையே தற்பரனே தணிகாசலமாந் தலத்தமர்ந்த சைவமணியே சண்முகனே. (21)

வேதமுங் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி
நாதமுங கடந்து நின்ற நாதநின் கருணை போற்றி
போதமும் பொருளு மாகும் புனிதநின் பாதம் போற்றி
ஆதர மாகி யென்னு ளமர்ந்தவென் னரசே போற்றி. (22)

பெண்குணைத்திற்கடைப்படு மோர்பேய்க்குணங்கொ ளுேயென்றன் பிழைகளெல்லா, மெண்குணப் பொற்குன் றேநின் திருவுளத்திற்சிறிதேனு மெண்ணேல்கண்டாய் பண்குணத்திற் சிறந்திடுநின் பத்தர்தமைப்புரப்பதுபோற் பாவியேனை வண்குணத்திற் புரத்தியிலை யேனுமெனைக் கைவிடேல் வடிவே லோனே. (23)

கறிபிடித்த வூன்கடையிற் கண்டவர்தங் கால்பிடித் துக் கவ்வும் பொல்லா, வெறிபிடித்த நாய்க்கேனும் வித் தைபயிற் றிடவாகும் வேண்டி வேண்டி, மறிபிடித்த சிறு வனைப்போல் வாத்தியார் மனமறுகி வருந்தத்தங்கள், குறி பிடித்துக் காட்டுவோர்க் கியாவர்படிப் பிக்கவலார் குமர வேளே. (24)

தெய்வ மணிமாலை

பரமேது வினைசெயும் பயனேது பதியேது
    பசுவேது பாச மேது
  பத்தியே தடைகின்ற முத்தியே தருளேது
    பாவபுண் ணியங்க ளேது
வரமேது தவமேது விரதமே தொன்றுமிலை
    மனம்விரும் புணவுண் டுநல்
  வத்திரம ணிந்துமட மாதர்தமை நாடிநறு
    மலர்சூடி விளையாடி மேற்

'பரனளித்ததேகமிது சுடுவதபராதம்' சமாதிசெய்யுங்கள்.

கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு
கலந்து மகிழ்கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனுங்
கயவரைக் கூடா தருள்
தரமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (1)

வள்ளலுனை யுள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதியென்னி னானவரை யொருகனவின்
மாட்டினு மறந்து மதியேன்
கள்ளமறு முள்ளமுறு நின்பதம லால்வேறு
கடவுளர் பதத்தை யவரென்
கண்ணெதி ரடுத்தைய நண்ணென வளிப்பினுங்
கடுவென வெறுத்து நிற்பேன்
எள்ளளவு மிம்மொழியி லேசுமொழி யன்றுண்மை
என்னையாண் டருள் புரிகுவாய்
என்றந்தை யேயெனது தாயேயெ னின்பமே
என்றனறி வேயெ னன்பே
தள்ளரிய சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (2)

'ஊன் சுவையுண்டு உடலை வளர்க்காதே'

காமவுட் பகைவனுங் கோபவெங் கொடியனுங்
கனலோப முழுமூ டனுங்
கடுமோக வீணனுங் கொடுமதமெ னுந்துட்ட
கண்கெட்ட வாங்கா ரியும்
ஏமமறு மாச்சரிய விழலனுங் கொலையென்
றியம்புபா தகனு மாவிவ்
வெழுவரு மிவர்க்குற்ற வுறவான பேர்களும்
எனைப்பற்றி டாம லருள்வாய்
சேமமிகு மாமறையி னோமெனு மருட்பதத்
திறனருளி மலய முனிவன்
சிந்தனையின் வந்தனையு வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகா ரத்னமே
தாமமொளிர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (3)

நிலையுறு நிராசையா முயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம்பு தல்வனும்
நெறிபெறு முதாரகுண மென்னுநற் பொருளுமருள்
நீக்கு மறிவாந் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனுஞ் சுத்தமுறு
மனமென்னு நல்லே வலும்
வருசகல கேவலமி லாதவிட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வ ருளுவாய்

'உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்யாதே'

அலையிலாச சிவஞான வாரியே யானந்த
வமுதமே குமுத மலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடியிரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன் மலையே
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (4)

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டு நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (5)

'இன்றிருந்தார் நாளைக்கிருப்பது பொய்'

ஈயென்று நானொருவ ரிடநின்று கேளாத
வியல்புமென் னிடமொ ருவரீ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமு மிறையாம்
நீயென்று மெனைவிடா நிலையுநா னென்றுமுள்
நினைவிடா நெறியு மயலார்
நிதியொன்று நயவாத மனமுமெய்ந் நிலையென்று
நெகிழாத திடமு முலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக் குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (6)

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற்றி ருக்கும் வெறுவாய்
எங்கள்பெரு மானுனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகெ டுக்குந் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்த வழுகண்
கடவுணின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்குஞ் செவி

பந்தமற நினையெணாப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீரென நடுங்கு நெஞ்சம்
பரமநின் றிருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலியேற்க நீள்கொ டுங்கை
சந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (7)

ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண்டு(உ)வந்த திருவாய்
அப்பநின் றிருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந் தலை
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கவொளி மேவு கண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர்தி ருச்செவி
விழாச்சுபங் கேட்குஞ் செவி
தூயநின் பதமெண்ணு மேலோர்க ணெஞ்சமெய்ச
சுகரூப மான நெஞ்சம்
தோன்றலுன் றிருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்ற கைகள்
சைவமுயர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (8)

வாய்கொண் டுரைத்தலரி தென்செய்கே னென் செய்கேன்
வள்ளலுன் சேவ டிக்கண்
மன்னாது பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை
வாய்ந்துழலு மெனது மனது
பேய்கொண்டு கள்ளுண்டு கோலினுன் மொத்துண்டு
பித்துண்ட வன்கு ரங்கோ
பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ
பேதைவிளை யாடு பந்தோ
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்
காற்றினால் சுழல்க றங்கோ
காலவடி வோவிந்த்ர ஜாலவடிவோவெனது
கர்மவடி வோவறி கிலேன்
தாய்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (9)

உளமெனது வசநின்ற தில்லையென் றால்வினை
ஒல்லைவிட் டிடவு மில்லை
உன்பதத் தன்பில்லை யென்றனுக் குற்றதுணை
உனையன்றி வேறு மில்லை
இளையனவ னுக்கருள வேண்டுமென் றுன்பால்
இசைக்கின்ற பேரு மில்லை
ஏழையவ னுக்கருள்வ தேனென்று உனெதிர்நின்
றியம்புகின் றோரு மில்லை

'அந்தோ! மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே!'

வளமருவு முனது திரு வருள்குறைவ தில்லைமேன்
மற்றொரு வழக்கு மில்லை
வந்திரப் போர்களுக கிலையென்ப தில்லை நீ
வன்மனத் தவனு மல்லை
தளர்விலாச சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (10)

எத்திக்கு மென்னுளந் திதிக்கு மின்பமே
என்னுயிர்க குயிரா குமோர்
ஏகமே யானந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வ மேநன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவி லாத
முருகனே நெடியமான் மருகனே சிவபிரான்
முத்தாடு மருமை மகனே
பத்திக்கு (உ)வந்தருள் பரிந்தருளு நின்னடிப்
பற்றருளி யென்னை யிந்தப்
படியிலே யுழல்கின்ற குடியிலே யொருவனுப்
பண்ணும லாண்ட ருளுவாய்
சத்திக்கு நீசசென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச சைவமணி
சணமுகத் தெய்வ மணியே. (11)

'சமரச சன்மார்க்க மெய்ந்நெறியைப் பற்றுஙகள்'

கந்தர் சரணப்பத்து

அருளா ரமுதே சரணம் சரணம் அழகா வமலா சரணம் சரணம், பொருளா வெனையாள் புனிதா சரணம் பொன்னே மணியே சரணம் சரணம், மருள்வார்க கரியாய் சரணம் சரணம் மயில்வா கனனே சரணம் சரணம் கருணு லயனே சரணம சரணம் கந்தா சரணம் சரணம் சரணம். (1)

பண்ணேர் மறையின் பயனே சரணம் பதியே பபமே சரணம் சரணம், விண்ணே ரொளியே வெளியே சரணம் வெளியின் விளைவே சரணம சரணம், உண்ணே ருயிரே யுணர்வே சரணம் உருவே யருவே யுறவே சரணம், கண்ணே மணியே சரணம் சரணம் கந்தா சரணம் சரணம சரணம். (2)

முடியா முதலே சரணம் சரணம் முருகா குமரா சரணம் சரணம், வடிவே லரசே சரணம் சரணம் மயிலூர் மணியே சரணம் சரணம், அடியார்க் கெளியாய் சரணம் சரணம் அரியாய் பெரியாய் சரணம் சரணம், கடியாக் கதியே சரணம் சரணம் கந்தா சரணம் சரணம் சரணம். (3)

பூவே மணமே சரணம் சரணம் பொருளே யருளே சரணம் சரணம், கோவே குகனே சரணம் சரணம் குருவே திருவே சரணம் சரணம, தேவே தெளிவே சரணம் சரணம் சிவசண் முகனே சரணம் சரணம், காவேர் தருவே சரணம் சரணம் கந்தா சரணம் சரணம் சரணம். (4)

'பற்றிஞல் மரணமிலாப் பெருவாழ்வையடையலாம்'

கோலக் குறமான் கணவா சரணம் குலமா மணியே சரணம் சரணம், சீலத் தவருக் கருள்வோய் சரணம் சிவனார் புதல்வா சரணம் சரணம், ஞாலத் துயர்தீர் நலனேசரணம் நடுவா கியநல் லொளியே சரணம், காலற் செறுவோய் சரணம் சரணம் கந்தா சரணம் சரணம் சரணம்.

நங்கட் கினியாய் சரணம் சரணம் நந்தா வுயர்சம் பந்தாசரணம், திங்கட் சடையோன் மகனே சரணம் சிவைதந் தருளும் புதல்வா சரணம், துங்கச சுகநன் றருள்வோய் சரணம் சுரர்வாழ்ந திடுநந் துரையே சரணம், கங்கைக் கொருமா மதலாய் சரணம் கந்தா சரணம் சரணம் சரணம். (6)

வேதப் பொருளே சரணம் சரணம் விண்ணோர் பெருமான் சரணம் சரணம், போதத திறனே சரணம் சரணம் புனமா மயிலோய் சரணம் சரணம், நாதத் தொலியே சரணம் சரணம் நவையில் லவனே சரணம் சரணம், காதுக் கினிதாம் புகழோய் சரணம் கந்தா சரணம் சரணம் சரணம். (7)

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது திருமுறை

அருட்பெருஞ்ஜோதி அகவல்

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்சிவ நெறிசா ரருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியா மருட்பெருஞ் ஜோதி
ஆகம முடிமே லாரண முடிமேல்
ஆகநின் றோங்கிய வருட்பெருஞ் ஜோதி
இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய வருட்பெருஞ் ஜோதி
ஈனமின்றி கபரத் திரண்டின்மேற் பொருளாய்
ஆனலின் றோங்கிய வருட்பெருஞ் ஜோதி (10)

உரைமனங் கடந்த வொருபெரு வெளிமேல்
அரைசு செய்தோங்கு மருட்பெருஞ் ஜோதி
ஊக்கமு முணர்ச்சியு மொளிதரு மாக்கையும்
ஆக்கமு மருளிய வருட்பெருஞ் ஜோதி
எல்லையில் பிறப்பெனு மிருங்கடல் கடத்தியென்
அல்லலை நீக்கிய வருட்பெருஞ் ஜோதி
ஏறா நிலைமிசை யேற்றியென் றனக்கே
ஆறாறு காட்டிய வருட்பெருஞ் ஜோதி
ஐயமுந் திரிபு மறுத்தென துடம்பினுள்
ஐயமு நீக்கிய வருட்பெருஞ் ஜோதி (20)

'நீ யாரென அறியாய் நின்எதிரில்நின் றவரை
நீ யாரென்கின்றாய்!'

ஒன்றென விரண்டென வொன்றிரண் டெனவிவை
அன்றென விளங்கிய வருட்பெருஞ் ஜோதி
ஓதா துணர்ந்திட வொளியளித் தெனக்கே
ஆதார மாகிய வருட்பெருஞ் ஜோதி
ஔவிய மாதியோ ராறுந் தவிர்த்தபேர்
அவ்வியல் வழுத்து மருட்பெருஞ் ஜோதி
திருநிலைத் தனிவெளி சிவவெளி யெனுமோர்
அருள்வெளிப் பதிவள ரருட்பெருஞ் ஜோதி
சுத்தசன் மார்க்கச் சுகத்தனி வெளியெனும்
அத்தகைச் சிற்சபை யருட்பெருஞ் ஜோதி

எங்கே கருணை யியற்கையி னுள்ளன
அங்கே விளங்கிய வருட்பெருஞ் சிவமே
ஆரே யென்னினு மிரங்கு கின்றார்க்குச
சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே
கொல்லா நெறியே குருவருள் நெறியெனப்
பல்கா லெனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே
உயிருள்யா மெம்மு ளுயிரிவை யுணர்ந்தே
உயிர்நலம் பரவுகென் றுரைத்தமெய்ச சிவமே

அமுத சித்தி

தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாங் கட்டவை விட்டுவிட் டியங்கிட
என்பெலா நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட
இரத்த மனைத்துமுள் ளிறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொருதிர ளாயிட

மடலெலா மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலா மூற்றெடுத் தோடி நிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுக மலர்ந்திடத்
தண்ணிய வுயிர்ப்பினிற் சாந்தம் ததும்பிட
உண்ணகை தோற்றிட வுரோமம் பொடித்திடக்
கண்ணினீர் பெருகிக் கால்வழிந் தோடிட
வாய்துடித் தலறிட வளர்செவித் துளைகளிற்
கூயிசைப் பொறியெலாங் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட
மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்த மியைந்து களித்திட
அகங்கார மாங்காங் கதிகரிப் பமைந்திடச்
சகங்கா ணவுள்ளந் தழைத்து மலர்ந்திட
அறிவுரு வனைத்து மானந்த மாயிடப்
பொறியுறு மான்மதப் போதமும் போயிடத்
தத்துவ மனைத்துந் தாமொருங் கொழிந்திடச்
சத்துவ மொன்றே தனித்துநின் றோங்கிட
உலகெலாம் விடய முளவெலா மறைந்திட
அலகிலா வருளி னாசைமேற் பொங்கிட
என்னுளத் தெழுந்துயி ரெல்லா மலர்ந்திட
என்னுளத் தோங்கிய என்றனி யன்பே
பொன்னடி கண்டருட் புத்தமு துணவே
என்னுளத் தெழுந்த வென்னுடை யன்பே
தன்னையே யெனக்குத் தந்தரு ளொளியால்
என்னை வேதித்த வென்றனி யன்பே

என்னுளே யரும்பி யென்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த வென்னுடை யன்பே
என்னுளே விளங்கி யென்னுளே பழுத்து
என்னுளே கனிந்த வென்னுடை யன்பே
தன்னுளே நிறைவுறு தரமெலா மளித்தே
என்னுளே நிறைந்த வென்றனி யன்பே
துன்புள வனைத்துந் தொலைத்தென துருவை
யின்புரு வாக்கிய வென்னுடை யன்பே
பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டாய்
* என்னுளங் கலந்த வென்றனி யன்பே

அருட்பெருஞ்ஜோதி

சபையென துளமெனத் தானமர்ந் தெனக்கே
அபய மளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி
வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன் றளித்த அருட்பெருஞ் ஜோதி
என்னையும் பொருளென வெண்ணியென் னுளத்தே
அன்னையு மப்பனு மாகிவீற் றிருந்து
உலகியற் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பே ரருளா லறிவது விளக்கிச
சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி யுணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து

சாகாக் கல்வியின் தரமெலா முணர்த்திச
சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்
அன்பையு மறிவித் தருட்பே ரொளியால்
இன்பையு நிறைவித் தென்னையு நின்னையும்

'ஞானமது அனித்திய விவேகமுற்றாலன்றி விளங்காது'

ஒருரு வாக்கியா னுன்னிய படியெலாஞ்
  சீருறச் செய்துயிர்த் திறம்பெற வழியா
அருளமு தளித்தனை யருணிலை யேற்றினை
  யருளறி வளித்தனை அருட்பெருஞ் ஜோதி
வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
  அல்கலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி
உலகுயிர்த் திரளெலா மொளிநெறி பெற்றிட
  இலகுமைந் தொழிலையும் யான்செயத் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
  ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி
மருளெலாந் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
  அருளமு தருத்திய அருட்பெருஞ் ஜோதி
மூவருந் தேவரு முத்தருஞ் சித்தரும்
  யாவரும் பெற்றிடா வியலெனக் களித்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
  ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி
சித்திக ளனைத்தையும் தெளிவித் தெனக்கே
  சத்திய நிலைதனைத் தயவினிற் றந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
  ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி
உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறெலாம்
  விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க
சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக
  உத்தம னாகுக வோங்குக வென்றனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
  ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
  அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி.

'சாதுக்கள் சங்கமடைந்தாலன்றிச் சாராது'

பரசிவ நிலை

அருட்ஜோதித் தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற வானந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். (1)

எல்லாஞ்செய் வல்லதெய்வ மெங்குநிறை தெய்வம்
என்னுயிரிற் கலந்தெனக்கே யின்பநல்குந் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையி லாடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வமருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். (2)

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக வெனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். (3)

'நின்னுடனே வாதித்திடுவோர்பால் வாய்ந்துறையேல்'

தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
தூரியதெய்வ மரியதெய்வம் பெரியபெருந் தெய்வம்
மாண்டாரை யெழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியையோர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை யாண்டதெய்வ மருட்ஜோதித் தெய்வம்
ஆகமவே தாதியெலா மறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். (4)

ஆற்றாமை

குலத்திடையுங்கொடியனொருகுடித்தனத்துங்கொடியேன்
குறிகளினுங்கொடியனன்றிக்குணங்களிலுங் கொடியேன்
மலத்திடையே புழுத்தசிறு புழுக்களினுங் கடையேன்
வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப் புலையேன்
நலத்திடையோ ரணுவளவும் நண்ணுகிலேன் பொல்லா
நாய்க்குநகைதோன்றநின்றேன்பேய்க்குமிகவிழிந்தேன்
நிலத்திடைநா னேன்பிறந்தே னின்கருத்தை யறியேன்
நிறகுணனே நடராஜ நிபுணமணி விளக்கே. (1)

விளக்கறியா விருட்டறையிற் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்துநெடுங் காலம்
அலைந்தலைந்துமெலிந்ததுரும் பதனின்மிகத்துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநா னேன்பிறந்தே னந்தோ
கருணைநடத் தரசேநின் கருத்தையறி யேனே. (2)

‘சகப்பழக்கவாதனை அருளைநாடுகின்ற
ஞானம்வந்தாலன்றி நலியாது’

தாவு மானெனக் குதித்துக்கொண் டோடித் தைய லார்முலைத் தடம்படுங் கடையேன், கூவு காக்கைக்குச சோற்றிலோர் பொருக்குங் கொடுக்க நேர்ந்திடாக் கொடியரிற் கொடியேன், ஓவுறு துழ லீயெனப் பலகால் ஓடி யோடியே தேடுறுந் தொழிலேன், சாவு றுவகைக் கென் செயக் கடவேன் தந்தையே யெனைத் தாங்கிக்கொண் டருளே. (3)

விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன் விருந்தி-லேயுண வருந்தி யோர்வயிற்றுக், குழியைத்தூர்க்கின்ற கொடியரிற் கொடியேன் கோப வெய்யனேன் பாபமேபயின்றேன், வழியைத் தூர்ப்பவர்க் குளவுரைத் திடுவேன் மாயமேபுரி பேயரிற் பெரியேன், பழியைத் தூர்ப்பதற் கென்செயக் கடவேன் பரமனேயெனைப் பரிந்துகொண்டருளே. (4)

தூங்கு கின்றதே சுகமென வறிந்தேன் சோறதே பெறும் பேறதென் றுணர்ந்தேன், ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன் இரக்கின் றோர்களே யென்னினு மவர்பால், வாங்குகின்றதே பொருளென வலித்தேன் வஞ்ச நெஞ்சினுற் பஞ்செனப் பறந்தேன், ஓங்குகின்றதற் கென்செயக் கடவேன் உடைய வாவெனை யுவந்து கொண்டருளே. (5)

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியே னறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலோ ரிடத்தே

‘இடைவிடாது கோசத்தைக் கவசத்தால்
மறைக்கவேண்டும்’

இருந்தறியே னறிந்தோரை யேத்திடவு மறியேன்
எந்தைபிரான் மணிமன்ற மெய்தவறி வேனோ
இருந்ததிசை சொலவறியே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந்திலனே.

வெடிக்கப் பார்த்து நிற்கின்ற வெய்யர் தமையும் வினைத்துயர்கள், பிடிக்கப் பார்க்கத் துணியாத பெருமானினது திருவுளந்தான், நடிக்கப் பார்க்கு முலகத்தே சிறியேன் மனது நவையாலே, துடிக்கப் பார்த்திங் கிருந்ததுகா ணையோ விதற்குந் துணிந்ததுவே. (1)

கல்லுங் கனியத் திருநோக்கம் புரியுங் கருணைக் கடலேநான், அல்லும் பகலுந் திருக்குறிப்பே யெதிர்பார்த் திங்கே யயர்கின்றேன், கொல்லும் கொடியார்க் குதவுகின்ற குறும்புத் தேவர் மனம்போலச், சொல்லும் இரங்காவன்மைகற்க வெங்கே யையோ துணிந்தாயே. (2)

நயத்தா லுனது திருவருளை நண்ணுக் கொடியே னுயுடம்பை, உயத்தான் வையேன் மடித்திடுவேன் மடித்தாற் பின்ன ருலகத்தே, வயத்தா லெந்த வுடம்புறுமோ வென்னவருமோ வென்கின்ற, பயத்தா லையோவிவ்வுடம்பைச் சுமக்கின் றேனெம் பரஞ்சுடரே. (3)

வட்டியே பெருக்கிக் கொட்டியே யேழை மனைகவர் கருத்தினே னேட்டைச, சட்டியே யெனினும் பிறர்கொளத் தரியேன் தயவிலேன் சூதெலா மடைத்த, பெட்டியே நிகர்த்த மனத்தினே னுலகிற் பெரியவர் மனம்வெறுக்

'நெஞ்சே! என்வசம் நீ ஆனல் எனக்கு
ஆகாப்பொருள் உளவோ!'

கசசெய், எட்டியே மண்ணுக கட்டியே யனையே னென்னி னும் காத்தரு ளெனையே. (4)

உடுத்திலேஞ் சிறிது மூண்டிலே மெனவந் தோதிய வறிஞருக் கேதுங, கொடுத்திலேன் கொடுக்குங குறிப் பிலே னுலகிற் குணம்பெரி துடைய நல்லோரை, யடுத்தி லேனடுத்தற் காசையு மில்லேன் அவனிமேல் நல்லவ னெனப்பேர், எடுத்திலே னெனினுந் தெய்வமே துணை யென் றிருக்கின்றேன் காத்தருளெனையே. (5)

அவா அறுத்தல்

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திட லொருவன் றுன்னு நற் றவமெலா ஞ சுருங்கி, ஆற்றிலே கரைத்த புளியெனப் போமென் றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும், போற்றிலே னுன்னைப் போற்றிலேன சுவையிற் பொருந்திய காரசா ரஞ்சேர், சாற்றிலே கலந்த சோற்றிலே யாசை தங்கினே னென்செய்வே னெந்தாய். (1)

உறியிலே தயிரைத் திருடியுண்டனனென் றொருவனை யுரைப்பதோர் வியப்போ, குறியிலே யமைத்த வுணவெ லாந் திருடிக கொண்டுபோ யுண்டனன் பருப்புக், கறி யிலே பொரித்த கறியிலே கூட்டுக் கறியிலே கலந்த பேரா ச, வெறியிலே யுனையு மறந்தனன் வயிறு வீங்கிட வுணடன னெந்தாய். (2)

கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த கீரையே விரும்பினேன் வெறுந்தண்ணீரையே விரும்பேன், தெங் கிளங் காயி னீரையே விரும்பினே னுணவில், ஆரையே

யெனக்கு நிகரெனப் புகல்வேன் அய்யகோ அடிசசிறு நாயேன், பேரையே யுரைக்கிற் றவமெலா மோட்டம் பிடிக்குமே யென்செய்வே னெந்தாய். (3)

பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே பத்தியா லொருபெரு வயிற்றுச், சாலிலே யடைக்கத் தடைபடேன் வாழை தருபலா மாமுதற் பழத்தின், தோலிலே யெனி னுங் கிள்ளியோர் சிறிதுஞ் சூழ்ந்தவர்க் கீந்திடத் துணி யேன், வாலிலே ணிருக்கில் வனத்திலே யிருக்க வாய்ப் புளே னென்செய்வே னெந்தாய். (4)

வறுத்தலே பொடித்து மலர்த்தலே புரட்டி வைத் தலே துவட்டலிற்சுவைகள், உறுத்தலே முதலா வுற்றபல் லுணவை யொருமல வயிற்றுப்பையுள்ளே, துறுத்தலே யெனக்குத் தொழிலெனத் துணிந்தேன் துணிந்தரைக். கணத்தும்வன் பசியைப் பொறுத்தலே யறியேன் மலப் புலைக் கூட்டைப் பொறுத்தன னென் செய்வே னெந் தாய். (5)

உண்டியே விழைந்தே னெனினுமென் றன்னை யுடை யவா வடியனே னுனையே, அண்டியே யிருந்தே னிருக் கின்றே னிருப்பே னப்பநின் ஞணைநின் றனக்கே, தொண் டுறு தவர்கைச சோற்றினை விரும்பேன் றூயனே துனை நினை யல்லாற், கண்டிலே னென்னைக் காப்பதுன் கடன் காண் கைவிடேல் கைவிடே லெந்தாய். (6)

தந்தையுந் தாயுங் குருவும்யான் போற்றுஞ் சாமியும் பூமியும் பொருளுஞ், சொந்தநல் வாழ்வு நேயமுந் துணை

நாளை நாளை என பதுக பழுடையநாளோ நமனுடையநாளோ

யுஞ் சுற்றமு முற்றுநீ யென்றே, சிந்தையுற்றிங்கே யிருக்கின்றே னிதுநின் றிருவுளந் தெரிந்ததே யெந்தாய், நிந்தைசெய்யுலகில் யானுளங கலங்கல் நீதியோ நின்னருட் கழகோ. (1)

சோறு வேண்டினுந் துகிலணி முதலாஞ் சுகங்கள் வேண்டினுஞ் சுகமலாற்சுகமாம், வேறுவேண்டினு நினையடைந்தன்றி மேவொணாதெனு மேலவருரைக்கே, மாறுவேண்டிலேன் வந்துநிற்கின்றேன் வள்ளலே யுன்றன் மனக்குறிப்பறியேன், சாறுவேண்டிய பொழில்வடலரசே சத்தி யசசபைத் தனிப்பெரும் பதியே. (2)

தூயநெஞ்சினே னன்றுநின் கருணைச் சுகம் விழைந்திலேனெனினும் பொய்யுலக, மாயம்வேண்டிலேன் வந்து நிற்கின்றேன் வள்ளலேயுன்றன மனக்குறிப்பறியேன, ஈயவாய்த்தநற் றருணமீதருள்க வெந்தை நின்மலரிணையடியல்லால், தாயமொன்றிலேன் தனிவடலரசே சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. (3)

திருவடி முறையீடு

சீரிடம்பெறுமோர் திருச்சிற்றம்பலத்தே திகழ்தனித் தந்தையே நின்பாற், சேரிட மறிந்தே சேர்ந்தனன் கருணை செய்தருள் செய்திடத் தாழ்க்கில், யாரிடம்புகுவேன்யார் துணையென்பேன் யாரகெடுத் தென்குறை யிசைப்பேன், போரிடமுடியா தினித்துய ரொடுநான் பொறுக்கலே னருள்கவிப் போதே. (1)

யாரினுங் கடையேன் யாரினுஞ்சிறியேன் என்பிழை பொறுப்பவர்யாரே, பாரினும் பெரிதாம்பொறுமையோய்

நீயே பாவியேன் பிழைபொறுத்திலையேல், ஊரினும்புகுத வொண்ணுமோ பாவி யுடம்பைவைத் துலாவவும்படுமோ, சேரினுமெனைத் தான்சேர்த்திடார் பொதுவாந்தெய்வத் துககடாதவனென்றே. (2)

அடாதகாரியங்கள் செய்தனனெனினும் அப்பநீயடிய னேன்றன்னை, விடாதவாறறிந்தே களித்திருக்கின்றேன் விடுதியோ விட்டிடு வாயேல், உடாதவெற் றரைநேர்ந் துயங்குவேனையோ வுன்னருளடையநா னிங்கே, படாத பாடெல்லாம் பட்டன னந்தப் பாடெலாம் நீயறியாயோ.

தற்சுதந்திர மின்மை

இப்பாரி லுடலாவி பொருளுமுன்பாற் கொடுத்தேன் மற்றெனக்கென் றிங்கே, எப்பாலுஞ் சுதந்தரமோரிறையு மிலை அருட்ஜோதியியற்கையென்னுந், துப்பாயவுடலாதி தருவாயோ வின்னுமெனைச சோதிப்பாயோ, அப்பாநின் றிருவுளத்தை யறியேனிவ வடியேனாலாவ தென்னே.

பாட்டுவித்தாற் பாடுகின்றேன் பணிவித்தாற் பணி கின்றேன் பதியேநின்னைக், கூட்டுவித்தாற் கூடுகின்றேன் குழைவித்தாற் குழைகின்றேன் குறித்த ஆணை, ஊட்டு வித்தா லுண்கின்றே னுறக்குவித்தாலுறங்குகின்றேனுறங் காதென்றும், ஆட்டுவித்தா லாடுகின்றேனந்தோவிச சிறி யேனா லாவ தென்னே. (2)

இசைத்திடவு நினைத்திடவும் பெரிதரிதாந் தனித் தலைமை யிறைவா வுன்றன், நசைத்திடுபே ரருட்செயலா லசைவதன்றி யைந்தொழில்செய் நாதராலும், தசைத்திடு

'புலாலுண்பவன் ஈசனானாலும் நீசனே'

புன் துரும்பினையு மகங்கரித்துத் தங்கள் சுதந்தரத்தாலிங் கே, அசைத்திடற்கு முடியாதே லந்தோவிச சிறியேனு லாவதென்னே. (3)

கரைசேரப் புரிந்தாலுங் கடையேன்செய் குற்றமெ லாஙகருதி மாயைத், திரைசேரப்புரிந்தாலுந் திருவுளமே துணையெனநான் சிந்தித்திங்கே, உரைசேர விருந்தலன்றி யுடையாயென் னுறவேயென் னுயிரே யென்றன், அரை சேயென் னம்மேயென் னப்பாவிச சிறியேனுலாவ தென்னே. (4)

வட்டவான் சுடரே வளரொளி விளக்கே வயங்குசிற் ஜோதியே யடியேன், இட்டமே யிட்டத் தியைந்துளே கலந்தவின்பமே யென்பெரும்பொருளே, கட்டமேதவிர்த் திங கென்னைவாழ்வித்த கடவுளே கனகமன் றகத்தே, நட்டமே புரியும் பேரருளரசே நம்பினேன் கைவிடே லென்னையே. (5)

கட்டமே யறியே னடுத்தவரிடத்தே காசிலேயாசை யில் லவன்போற், பட்டமே காட்டிப் பணம்பறித் துழன் றேன் பகலெலலாங தவசிபோலிருநதேன், இட்டமே யிரவி லுண் டயல்புணர்ந்தே யிழுதையிற்றூங்கினேன் களித்து, நட்டமேபுரிந்தே னெனனினு முனையே நம்பினேன் கை விடே லென்னையே. (6)

திருமுதுகுன்றம்

என்னு ருயிரிற கலநதுகலந் தினிக்குங் கரும்பின் கட்டிதனைப், பொன்னார் வேணிக் கொழுங்கனியைப்புனி

'பசியையும் கொலையையும் நீககுதலே பரஜீவகாருண்யம்'

தருளத்திற் புகுங் களிப்பைக், கன்னாருரித்துப் பணிகொண்டகருணைப் பெருக்கைக் கலைத்தெளிவைப்,பன்னாகப்பூணணிமலையைப் பழையமலையிற் கண்டேனே. (1)

திருப்பள்ளி யெழுச்சி

பொழுது விடிந்ததென் னுள்ளமென் கமலம் பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்குந், தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாஞ் சொல்லுதல் வேண்டுமென் வல்ல சற்குருவே, முழுதுமா னானென வாகம வேத முறைகளெலாமொழி கின்றமுன் னவனே, எழுதுத லரியசீ ரருட்பெருஞ் ஜோதி என் தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. (1)

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானந் தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான், சிற்குண வரைமிசை யுதயஞ்செய் ததுமா சித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த, நற்குண சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம் நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார், எற்குணவளித்தவென் னருட்பெருஞ் ஜோதி என்னம்மை யேபள்ளி யெழுந்தருள் வாயே. (2)

நிலந்தெளிந் ததுகண மழுங்கின சுவண நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற, அலர்ந்தது தாமரை யாணவ விருள்போய் அழிந்தது கழிந்தது மாயைமா லிரவு, புலர்ந்தது தொண்டரோ டண்டருங் கூடிப் போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார், இலங்குரு வளித்தவென் னருட்பெருஞ் ஜோதி யென்குருவே பள்ளி யெழுந்தருள் வாயே (3)

‘பிணி,எளிமை,பயம்இசசைநீக்குதல் அபரஜீவகாருண்யம்’

கல்லாய மனங்களுங் கரையப்பொன் ஞெளிதான் கண்டது கங்குலும் விண்டது தொண்டர், பல்லாரு மெய் தினர் பாடிநின் ருடிப் பரவுகின் ருரன்பு விரவுகின் ருராய், நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும் நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே,யெல்லாஞ்செய் வல்லவென் னருட்பெருஞ் ஜோதி யென்தெய்வ மேபள்ளி யெழுந்தருள் வாயே (4)

அலஙகரிக் கின்ருேமோர் திருசசபை யதிலே அமர்ந்தருட் சோதிகொண்டிசசிறி யோமை, வலம்பெறு மிறவாத வாழ்வில்வைத்திடவே வாழ்த்துகின்ருே முன்னர் வணங்கிநிற் கின்ருேம், விலஙகிய திருளெலாம் விடிந்தது பொழுது விரைந்தெமக் கருளுதல் வேண்டுமித் தருணம், இலங்குநற் றருணமெம் அருட்பெருஞ் ஜோதி என்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. (5)

இன்பத்திறன்

பணிந்தடங்கு மனத்தவாபாற் பரிந்தமரும் பதியே - பாடுகின்ருே ருள்ளகத்தே கூடுகின்ற குருவே, கணிந்த மறை பலகோடி யாகமம்பல் கோடி - கடவுணின தருட் புகழைக் கணிப்பதற்குப் பலகால், துணிந்துதுணிந் தெழுந்தெழுந்து தொடர்ந்துதொடர்ந் தடிகள் சுமந்து சுமந் திளைத்திளைத்துச் சொல்லியவல் லனவென்,றணிந்த மொழி மாற்றிவலி தணிந்தவென்று லந்தோ - அடியேனின் புகழுரைக்க லாவதுவோ வறிந்தே. (1)

'பசியினுல் வருங்கெடுதி தேகநாசமே'

வாக்கொழிந்து மனமொழிந்து மதியொழிந்து மதியின்
வாதனையு மொழிந்தறிவாய் வயங்கிநின்ற விடத்தும்
போக்கொழிந்தும் வரவொழிந்தும் பூரணமா யதுவும்
போனபொழு துள்ளபடி புகலுவதெப் படியோ
நீக்கொழிந்த நிறைவேமெய்ந் நிலையேயென் னுடைய
நேயமே யானந்த நிருத்தமிடும் பதியே
ஏக்கொழிந்தா ருளத்திருக்கு மிறையேயென் குருவே
எல்லாமா யல்லதுமா யிலங்கியமெய்ப் பொருளே. (2)

சற்குருமணிமாலை

மாற்றறியாத செழும்பசும் பொன்னே மாணிக்கமே சுடர்வண்ணக் கொழுந்தே, கூற்றறியாத பெருந்தவருள்ளக்கோயிலிருந்த குணப்பெருங் குன்றே, வேற்றறியாத சிற்றம்பலக் கனியே விசைையில்வல்லவர் மெசசும்விருந்தே, சாற்றறியாதவென் சாற்றுங்களித்தாய் தனிநடராஜவென் சற்குரு மணியே.

சிற்சத்தி துதி

நாடாக்கொடிய மனமடக்கி நல்லமனத்தைக் கனிவித்துப், பாடாப் பிழையைப் பொறுத்தெனக்கும் பதமீந்தாண்ட பதிக்கொடியே, தேடாக்கரும சித்தியெலாந் திகழத் தயவாற் றெரிவித்த, கோடாக்கொடியே சிவதருமக்கொடியே யடியேற் கருளுகவே. (1)

நடராஜ பதிமாலை

அருணிலை விளங்குசிற் றம்பல மெனுஞ்சிவ
சுகாதீத வெளி நடுவிலே
அண்டபகி ரண்டகோ டிகளுஞ் சராசர
மனைத்துமவை யாக்கன் முதலாம்

'ஜீவர்கள் அனைவரும் நடமாடும் கோயில்களே'

பொருணிலைச் சத்தரொடு சத்திக ளனந்தமும்
பொற்பொடு விளங்கி யோங்கப்
புறப்புற மகப்புறம புறமகமி வற்றின்மேற்
பூரணா கார மாகித்

தெருணிலைச சசசிதா னந்தகிர ணாதிகள்
சிறப்பமுத லந்த மின்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தியநு பவநிலை
தெளிநதிட வயஙகு சுடரே

சுருணிலைக் குழலம்மை யானந்த வல்லிசிவ
சுந்தரிக் கினிய துணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. (1)

என்னிய லுடம்பிலே யென்பிலே யன்பிலே
இதயத்தி லேத யவிலே
என்னுயிரி லேயென்ற னுயிரினுக குயிரிலே
என்னியற் குணம தனிலே

இன்னியலென் வாக்கிலே யென்னுடைய நாக்கிலே
என்செவிப் புலனி சையிலே
என்னிருகண் மணியிலே யென்கண்மணி யொளியிலே
என்னனு பவந் தன்னிலே

தன்னியலென் னறிவிலே யறிவினுக் கறிவிலே
தானே கலநது முழுதுந்
தன்மயம தாக்கியே திதித்து மேன்மேற்
ததும்பிநிறை கின்ற வமுதே

‘விவாகம்முதலியவற்றில்பசிநீக்குதலேமுக்கியமென்றறிக’

துன்னிய பெருங்கருணை வெள்ளமே யழியாத
சுகமே சுகா தீதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. (2)

உடலெலா முயிரெலா முளமெலா முணர்வெலாம்
உள்ளன வெலாங் கலந்தே
ஒளிமயம தாக்கியிரு ணீக்கியெக் காலத்தும்
உதயாத்த மான மின்றி

இடலெலாம் வல்லசிவ சத்திகிர ணங்கியாய்
ஏகமா யேக போக
இன்பநிலை யென்னுமொரு சிற்சபையி னடுவே
யிலங்கிநிறை கின்ற சுடரே

கடலெலாம் புவியெலாங் கனலெலாம் வளியெலாங்
ககனெலாங் கண்ட பரமே
காணாத பொருளெனக் கலையெலாம் புகலவென்
கண்காண வந்த பொருளே

தொடலெலாம் பெறவெனக் குள்ளும் புறத்துமெய்த்
துணையாய் விளங்கு மறிவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. (3)

எண்ணிலா வண்டபகி ரண்டத்தின் முதலிலே
இடையிலே கடையி லேமேல்
ஏற்றத்தி லேயவையு ளூற்றத்தி லேதிரண்
டெய்துவடி வந்தன் னிலே

'கடவுள் பூசைகளிலும்பசிநீக்குதலே தலையாகக் கொள்க'

கண்ணுரு வருவிலே யுருவிலே குருவிலே
கருவிலே தன்மை தனிலே
கலையாதி நிலையிலே சத்திசத் தாகிக்
கலந்தோங்கு கின்ற பொருளே
தெண்ணிலாக் காந்தமணி மேடைவாய்க் கோடைவாய்ச
சேர்ந்தனு பவித்த சுகமே
சித்தெலாஞ் செயவல்ல தெய்வமே யென்மனத்
திருமா ளிகைத் தீபமே
துண்ணுருச் சாந்தசிவ ஞானிக ளுளத்தே
சுதந்தரித் தொளிசெய் யொளியே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. (4)

வானிலே வானுற்ற வாய்ப்பிலே வானினரு
வத்திலே வானிய லிலே
வானடியி லேவானி னடுவிலே முடியிலே
வண்ணத் திலே கலையிலே
மானிலே நித்திய வலத்திலே பூரண
வரத்திலே மற்றை யதிலே
வளரனந் தானந்த சத்திசத் தர்கடமை
வைத்தவரு ளுற்ற வொளியே
தேனிலே பாலிலே சர்க்கரை யிலேகனித்
திரளிலே தித்திக்கு மோர்
தித்திப்பெ லாங்கூட்டி யுண்டாலு மொப்பெனச்
செப்பிடாத் தெள்ளமுதமே

'பசிஆற்றுவித்தலே கடவுளுக்குச்செய்யும் தொண்டு'

ஊனிலா வண்ணத்தி லுள்ளோங்கு மானந்த
சொருபமே சொருப சுகமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. (5)

கரையிலாக் கடலிலே கடலுப்பி லேகடற்
கடையிலே கடலி டையிலே
கடன்முதலி லேகடற் றிரையிலே நுரையிலே
கடலோசை யதனடு விலே
வரையிலா வெள்ளப் பெருக்கத்தி லேவட்ட
வடிவிலே வண்ண மதிலே
மற்றதன் வளத்திலே யுற்றபல சத்தியுள்
வயங்கியவை காக்கு மொளியே
புரையிலா வொருதெய்வ மணியேயெ னுள்ளே
புகுந்தறி வளித்த பொருளே
பொய்யாத செல்வமே நையாத கல்வியே
புடமவைத் திடாத பொன்னே
மரையிலா வாழ்வே மறைப்பிலா வைப்பே
மறுப்பிலா தருள வள்ளலே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. (6)

எவவுலகு மெவவுயிரு மெப்பொருளு முடையதாய்
எல்லாஞ்செய் வல்ல தாகி
இயற்கையே யுண்மையா யியற்கையே யறிவாய்
இயற்கையே யின்ப மாகி

'விரதமென்றால், ஒருநாளைக்கு சுத்தம்
மற்றதினம் ஆடுகோழி அல்ல'

அவ்வயி னருதியே பாசமில தாய்ச்சுத்த
வருளாகி யருள் வெளியிலே
அருணெறி விளங்கவே யருணடஞ் செய்தருள்
அருட்பெருஞ் ஜோதி யாகிக்
கவலையற தனிமுதற் கடவுளா யோங்குமெய்க்
காட்சியே கருணை நிறைவே
கண்ணேயெ னன்பிற கலந்தெனை வளர்க்கின்ற
கதியே கனிந்த கனியே
வெவவினை தவிர்த்தொரு விளக்கேற்றி யென்னுளே
வீற்றிருந் தருளு மரசே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞா னகலருளே
மேவுநட ராஜ பதியே (7)

ஒருபிரம னண்டஙக ளடிமுடிப் பெருமையே
உன்ன முடியா வவற்றின்
ஓரா யிரங்கோடி மாலண்ட மரனண்டம்
உற்றகோ டாகோ டியே
திருகலறு பலகோடி யீசனண் டஞ்சதா
சிவவண்ட மெண்ணரி றநத
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தஞ்
சீரண்ட மென்புக லுவேன்
உருவுறுமிவ் வண்டஙக ளத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு வணுக்க ளாக
ஊடசைய வவவெளியி னடுநின்று நடனமிடும்
ஒருபெருங் கருணை யரசே

‘ஏழைகள் வயிறு எரியச செய்யாதே’

மருவியெனை யாட்கொண்டு மகனாக்கி யழியா
வரந்தந்த மெய்த்தந் தையே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. (8)

பேருற்ற வுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென வுணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கு மிங்கும்
போருற்றி றந்து வீண் போயினா ரின்னும் வீண்
போகாத படிவி ரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை யுணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதிநீ
யென்பிள்ளை யாத லாலே
இவ்வேலை புரிகவென் றிட்டன மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திரு ளகற்று மொளியே
நிர்க்குண னந்தபர நாதாந்த வரையோங்கு
நீதிநட ராஜ பதியே. (9)

காயெலாங் கனியெனக் கனிவிக்கு மொருபெருங்
கருணை யமுதே யெனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட வற்புதக்
காட்சியே கனக மலையே

தாயெலா மனையவென் றந்தையே யொருதனித்
தலைவனே நின்பெரு மையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட வறிந்திடச
சார்கின்ற தோறு மந்தோ
வாயெலாந் தித்திக்கு மனமெலாந் தித்திக்கும்
மதியெலாந் தித்திக்கு மென்
மன்னியமெய் யறிவெலாந் தித்திக்கு மெனிலதில்
வருமின்ப மென்புகலு வேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாந்
தோன்றிட விளங்கு சுடரே
துரியவெளி நடுநின்ற பெரிய பொருளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. (10)

எய்ப்பறவெ னக்குக் கிடைத்தபெரு நிதியமே
எல்லாஞ்செய் வல்ல சித்தாய்
என்கையி லகப்பட்ட ஞானமணி யேயென்னை
யெழுமையும் விடாத நட்பே
கைப்பறவெ னுள்ளே யினிக்கின்ற சர்க்கரைக்
கட்டியே கருணை யமுதே
கற்பக வனத்தே கனிந்தகனி யேயெனது
கண்காண வந்த கதியே
மெய்ப்பய னளிக்கின்ற தந்தையே தாயேயென்
வினையெலாந் தீர்த்த பதியே
மெய்யான தெய்வமே மெய்யான சிவயோக
விளைவேயென் மெய்ம்மை யுறவே

'கருணையைப் பெறுவதே கடவுள் பக்தியாகும்'

துய்ப்புறுமெ னன்பான துணையேயென் னின்பமே
சுத்தசன் மார்க்க நிலையே
துரியவெளி நடுநின்ற பெரிய பொருளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. (11)

ஓங்கிய பெருங்கருணை பொழிகின்ற வானமே
ஒருமைநிலை யுறுஞானமே
உபயபத சததளமு மெனதிதய சததளத்
தோங்கநடு வோங்கு சிவமே
பாங்கிய லளித்தென்னை யறியாத வொருசிறிய
பருவத்தி லாண்ட பதியே
பாசநெறி செல்லாத நேசர்தமை யீசராம்
படிவைக்க வல்ல பரமே
ஆங்கியல்வ தென்றுமற் றீங்கியல்வ தென்றும்வா
யாடுவோர்க் கரிய சுகமே
ஆனந்த மயமாகி யதுவுங் கடந்தவெளி
யாகிநிறை கின்ற நிறைவே
தூங்கிவிழு சிறியனைத் தாங்கியெழு கென்றெனது
தூக்கந் தொலைத்த துணையே
துரியவெளி நடுநின்ற பெரிய பொருளேயருட்
ஜோதி நடராஜ குருவே. (12)

வயித்திய நாதர்-பதிகம்.

ஓகைமட வாரல்குலே பிரம பதமவர்கள்
உந்தியே வைகுந்த மேல்
ஓங்குமுலை யேகைலை யவர்குமுத வாயினிதழ்
ஊறலே யமுத மவர்தம்

'ஜீவகருணையில்லாத பத்தி, வைராக்கியம்,
ஞானம், பலனுண்டோ'

பாகனைய மொழியேநல் வேதவாக் கியமவர்கள்
பார்வையே கருணை நோக்கம்
பாங்கினவ ரோடுவிளை யாடவரு சுகமதே
பரமசுக மாகு மிந்த

பூகமறி யாமலே தேகமிக வாடினீர்
உறுசுவைப் பழமெ றிந்தே
உற்றவெறு வாய்மெல்லும் வீணர்நீ ரென்றுநல்
லோரை நிந்திப்ப ரவர்தம்

வாகைவாய் மதமற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. (1)

கல்லையு முருக்கலாம் நாருரித் திடலாம்
கனிந்தகனி யாசசெய் யலாம்
கடுவிடமு முண்ணலா மமுதாக்க லாங்கொடுங்
கரடிபுலி சிஙக முதலா

வெல்லுமிரு கங்களையும் வசமாக்க லாமன்றி
வித் தையுங் கற்பிக்கலாம்
மிக்கவா ழைத்தணடை விறகாக்க லாமணலை
மேவுதேர் வடமாக் கலாம்

இல்லையொரு தெய்வமவே றில்லையெம் பாலின்பம்
ஈகின்ற பெண்கள் குறியே
யெங்கள்குல தெய்வமெனு மூடரைத் தேற்றவெனில்
எத்துணையு மரிதரிது காண்

'முத்திக் கேது பத்தியாகும்'

வல்லையவ ருணர்வற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. (2)

பெண்கொண்ட சுகமதே கண்கண்ட பலனிது
பிடிக்கவறி யாது சிலர்தாம்
பேரூரி லாதவொரு வெறுவெளியிலே சுகம்
பெறவே விரும்பி வீணில்
பண்கொண்ட வுடல்வெளுத் துள்ளே நரம்பெல்லாம்
பசையற்று மேலெ ழும்பப்
பட்டினி கிடந்து சாகின்றார்க ளீதென்ன
பாவமிவ ருண்மை யறியார்
கண்கொண்ட குருடரே யென்றுவாய்ப் பல்லெலாங்
காட்டிச சிரித்து நீண்ட
கழுமரக் கட்டைபோல் நிற்பார்க ளையவிக்
கயவர்வாய் மதமு ழுதுமே
மண்கொண்டு போகவோர் மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. (3)

கற்பவை யெலாங்கற் றுணர்ந்தபெரி யோர்தமைக்
காண்பதே யருமை யருமை
கற்பதரு மிடியனிவ னிடையடைந் தாலெனக்
கருணையா லவர் வலியவந்

‘மோன மென்பது ஞானவரம்பு’

திற்புற னிருப்பவது கண்டுமேந் தோகடி
　　தெழுந்துபோய்த் தொழுது தஙகட்
　கியலுறுதி வேண்டாது கண்கெட்ட குருடர்போல்
　　ஏமாந் திருப்ப ரிவர்தாம்
பொற்பினறு சுவையறியு மறிவுடைய ரன்றுமேற்
　　புல்லாதி யுணு முயிர்களும்
　போன்றிடா ரிவர்களைக் கூரைபோய்ப் பாழாம்
　　புறச்சுவ ரெனப் புகலலாம்
வற்புறும் படிதரும வழியோங்கு தவசிகா
　　மணியுலக நாத வள்ளல்
　மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
　　வளர் வயித்திய நாதனே. (4)

இளவேனின் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
　　இலஞ்சிபூம் பொய்கை யருகாய்
　ஏற்றசந் திரகாந்த மேடையா யதன்மேல்
　　இலங்கு மரமிய வணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்
　　றழைத்திடு நிலாக காலமாய்த்
　தனியிளந தென்றலாய் நிறைநரம் புளவீணை
　　தன்னிசைப் பாட லிடமாய்
களவே கலந்தகற் புடையமட வரல்புடை
　　கலந்தநய வார்த்தை யுடனாய்க்
　களிகொள விருந்தவாகள் கண்டசுக நின்னடிக்
　　கழனிழற் சுக நிகருமே

‘கெடுமதி கண்ணுக்குத் தெரியுமா’

வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. (5)

திருச்சிற்றம்பலம்.

அத்துவிதானந்தத்தநுபவவிடையீடு

சிதம்பரத்தே யானந்த சித்தர்திரு நடந்தான்
சிறிதறிந்த படியின்னு முழுதுமறி வேனோ
பதம்பெறத்தேம் பழம்பிழிந்து பாலுநறும் பாகும்
பசுநெய்யுங் கலந்ததெனப் பாடிமகிழ் வேனோ
நிதம்பரவி யானந்த நித்திரைநீங் காத
நித்தர்பணி புரிந்தின்ப சித்திபெறு வேனோ
மதம்பரவு மலைச்செருக்கிற் சிறந்தசிறி யேனான்
வள்ளல்குரு நாதர்திரு வுள்ளமறி யேனே. (1)

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தருணங்
கடைச்சிறியே னுளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பியுதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினுந்
துளக்கமறவுண் ணுவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ
ஜோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலனே. (2)

‘இளமைப் பழக்கம் பசுமரத் தாணிபோல்’

தாய்கொண்ட திருப்பொதுவி லெங்கள்குரு நாதன்
சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
கனிந்தபழங் கொண்டுவருங் காலதனை மதமாம்
பேய்கொண்டு போய்விடுமோ பிலத்திடைவீழ்ந் திடுமோ
பின்படுமோ முன்படுமோ பிணங்கியொளித் திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ வென்னை
மறந்திடுமோ திருவுளத்தின் வண்ணமறிந் திலனே.

மாயாவிளக்கம்

இடுக்கறவெனைத்தான் வளர்த்திடப்பரையாஞ்செவி லியாற் சேர்த்தனையவளோ, எடுக்கவு நினையாள் படுக்கவு மொட்டா ளென்செய்வே னின்னுமென் னிடைப்பால், மடுக்கநற்றாயும் வந்திலள் நீயும் வந்தெனைப் பார்த்திலையந் தோ, தடுக்கருங் கருணைத் தந்தையே தளர்ந்தேன் தனய னேன் தளர்ந்திட லழகோ. (1)

ஞானவானந்த வல்லியாம் பிரியாநாயகி யுடனெழுந் தருளி, ஈனமாரிடர்தீர்த் தெடுத்தெனை யணைத்தே யின் னமுதனைத்தையு மருத்தி, ஊனமொன்றில்லா தோங்கு மெய்த்தலத்தி லுறப்புரிந் தெனைப்பிரியாமல், வானமும் புவியுமதிக்கவாழ்ந் தருள்க மாமணி மன்றிலெந் தாயே.2

பிரியேனென்றல்

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெலாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்

வடலூறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியேயென் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென் னவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே. (1)

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யா னுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் னருளொளியைக் கொடுத்தருளிப்
[பொழுதே.

உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியே னுன்னாணை யிதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவாயெனில்யான் [ந்தாய்
என்னசெய்வே னெங்குறுவே னெவர்க்குரைப்பே னெ
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவேல்
இதுதருண மருட்ஜோதி யெனக்குவிரைந் தருளே.(3)

திருவருட்பேறு

பெட்டியிதி னுலவாத பெரும்பொருளுண் டிதுநீ
பெறுகவென வதுதிறக்கும் பெருந்திறவு கோலும்
எட்டிரண்டுந் தெரியாதே னென்கையிலே கொடுத்தீர்
இதுதருணந் திறந்ததனை யெடுக்கமுயல் கின்றேன்

அட்டிசெய வினையாதீ ரரைக்கணமுந் தரியேன்
அரைக்கணத்துக் காயிரமா யிரஙகோடி யாக
வட்டியிட்டு நும்மிடத்தே வாங்குவனும் மாணை
மணிமன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே. (1)

காசையும் பணத்தையுங் கன்னியர் தமையுங் காணியி னாட்சியுங் கருதிலேன் கண்டீர், நேசநுந் திருவரு ணேச மொன் றல்லால் நேசமற் றிலையிது நீரறி யீரோ, ஏசற லகற்றிவந் தென்னைமுன் னாண்டீர் இறையவ ரேயுமை யின்றுகண் டல்லால், ஆசையிற் பிறரொடு பேசவு மாட் டேன் அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. (2)

மாயையாற் கலங்கி வருந்திய போதும் வள்ளலுன் றன்னையே மதித்துன், சாயையாப் பிறரைப் பார்த்ததே யல்லாற் றலைவவே றெண்ணிய துண்டோ, தூயபொற் பாத மறியநா னறியேன் துயரினிச் சிறிதுமிங் காற் றேன், நாயகா வெனது மயக்கெலாந் தவிர்த்தே நன்ற ருள் புரிவதுன் கடனே. (3)

எம்மத நிலையு நின்னருள் நிலையி லிலங்குத லறிந்தன னெல்லாஞ், சம்மத மாக்கிக் கொள்கின்றே னல்லாற் றனித்துவே றெண்ணிய துண்டோ, செம்மலுன் பாத மறியநா னறியேன் சிறிதுமிங் கினித்துய ராற்றேன், இம் மதிக் கடியேன் குறித்தவா றுள்ள தியற்றுவ துன்கட னெந்தாய். (4)

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த வுலக ரனைவரையுஞ், சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்

'அறிவே சிவமெனல் ஆரணமுடிவு'

தடைவித் திடவஅநும், இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற் கென்றே யெனையிந்த, யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனே.

வாதனைக்கிரங்கல்

படமாட்டேன் துயர்சிறிதும் படமாட்டே னினிநான்
  பயப்படவு மாட்டேனுன் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டே னெமாந்து விடமாட்டேன் கண்டீர்
  மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும் மடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவு மாட்டேன்
  கிளரொளியம் பலத்தாடல் வளரொளிநும் மல்லால்
நடமாட்டே னென்னுளத்தே நான்சாக மாட்டேன்
  நல்லதிரு வருளாலே நான்றுனே னேனே. (1)

அருளரசை யருட்குருவை யருட்பெருஞ் ஜோதியை யென்-அம்மையையென் னப்பனையென் னாண்டவனை யமுதைத், தெருளுறுமென் னுயிரையென்ற னுயிர்க்குயிரை யெல்லாஞ்-செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியை, மருவுபெருவாழ்வையெல்லா வாழ்வுமெனக்களித்த-வாழ்முதலை மருந்தினைமா மணியையென்கண் மணியைக், கருணைநடம் புரிகின்ற கனகசபா பதியைக்-கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. (2)

மதித்திடுத லரியவொரு மாணிக்க மணியை-வயங்கியபே ரொளியுடைய வச்சிரமா மணியைத்,துதித்திடுவே தாகமத்தின் முடிமுடித்த மணியைச்-சுயஞ்ஜோதித் திரு

மணியைச் சுத்த சிவ மணியை, விதித்தல் முதல்தொழி லியற்று வித்தகுரு மணியை- விண்மணியை யம்மணிக் குள் விளங்கியமெய்ம் மணியைக்,கதித்தசுக மயமணியைச் சித்தசிகாமணியைக்-கண்டுகொண்டேன் கனிந்துகொண் டேன் கலந்துகொண்டேன் களித்தே. (3)

பதியேயெம் பரனேயெம் பரம்பரனே யெமது
பராபரனே யானந்தப் பதந்தருமெய்ஞ் ஞான
நிதியேமெய்ந நிறைவேமெய்ந் நிலையேமெய் யின்ப
நிருத்தமிடுந் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியேயென் கண்ணேயென் கண்மணியே யெனது
கருத்தேயென் கருத்திலுற்ற கனிவேசெங் கனியே
துதியேயென் துரையேயென் தோழாவென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகாமணியே. (4)

படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றறவிட் டடக்கிப்
பார்த்திடலு மடக்கியுறும் பரிசமெலா மடக்கித
தடிப்புறுமூண் சுவையடக்கிக் கந்தமெலா மடககிச
சாதிமதஞ் சமயமெனுஞ் சழக்கையும்விட் டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேலன வேனவே
வனகுரஙகும் வியப்பவென்றன் மனக்குரங்கு குதித்த
துடிப்படக்கி யாட்கொண்ட துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே.

பணிந்தறியே னன்புடனே பாடுதலு மறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியிற்பூ மாலை
அணிந்தறியேன் மனமுருகக் கண்களில்நீர் பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரஞ் சிறிதுந்

தணிந்தறியேன் தயவறியேன் சத்தியவா சகமுந்
தானறியே னுழுந்தடித்த தடியதுபோ லிருந்தேன்
துணிந்தெனக்குங் கருணைசெய்த துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. (6)

அன்புடைய வென்னறிவே யருளுடைய பொருளே
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
துன்புடைய வுலகரெலாஞ் சுகமுடைய ராகத்
துன்மார்க்கந் தவிர்த்தருளிச் சன்மார்க்கம் வழங்க
இன்புடைய பேருளிங் கெனைப்பொருள்செய் தளித்த
என்னமுதே யென்னுறவே யெனக்கினிய துணையே
என்புடைநீ யிருக்கின்றா யுன்புடைநான் மகிழ்ந்தே
இருக்கின்றே னிவ்வொருமை யார்பெறுவா ரீண்டே.()

கருவிற் கலந்த துணையேயென் கனிவிற் கலந்த வமுதேயென் - கண்ணிற் கலந்த வொளியேயென் கருத்திற் கலந்த களிப்பேயென், உருவிற் கலந்த வழகே யென் னுயிரிற் கலந்த உறவேயென் - உணர்விற் கலந்த சுகமேயென் னுடைய வொருமைப் பெருமானே, தெருவிற் கலந்து விளையாடுஞ் சிறியேன் தனக்கே மெய்ஞ் ஞான - சித்தி யளித்த பெருங்கருணைத் தேவே யுலகத் திரளெல்லாம், மருவிக் கலந்து வாழ்வதற்கு வாய்த்த தருண மிதுவென்றே - வாயே பறையா யறைகின்றே னெந்தாய் கருணை வலத்தாலே. (8)

காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்
சாலையிலே யின்பந் தழைக்கின்றேன்-ஞாலமிசைச [கச

'சரவணபவ வெனச சாற்றுவாயென்றும்'

சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேனடிக்கும்
ஏகா நினக்கடிமை யேற்று. (9)

கொள்ளையென வின்பங் கொடுத்தாய் நினதுசெல்வப்
பிள்ளையென வெற்குப் பெயரிட்டாய்-தெள்ளமுதந்
தந்தாய் சமரசசன் மார்க்கசங்கத் தேவைத்தாய்
எந்தாய் கருணை யிது. (10)

கட்டமுங் கழன்றேன் கவலைவிட் டொழிந்தேன் கலக்கமுந் தீர்ந்தனன் பிறவிச், சட்டமுங் கிழித்தேன் தூக்கமுந் துறந்தேன் சாவையு நோவையுந் தவிர்ந்தேன், சிட்டமு மடைந்தேன் சிற்சபை யுடையான் செல்வமெய்ப் பிள்ளையென் றொருபேர்ப், பட்டமுந் தரித்தே னெனக் கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. (11)

திருச்சிற்றம்பலம்.

உத்தரஞானசிதம்பர மான்மியம்

கொல்லா நெறியது கோடா நிலையது கோபமிலார்
சொல்லா லுவந்தது சுத்தசன் மார்க்கந் துணிந்ததுல
கெல்லா மளிப்ப திறந்தா லெழுப்புவ தேதமொன்றுஞ்
செல்லா வளத்தின துத்தர ஞான சிதம்பரமே. (1)

பொற்பங் கயத்தின் புதுநறவுஞ் சுத்த சலமும் புகல் கின்ற, வெற்பந் தரமா மதிமதுவும் விளங்கும் பசுவின் தீம்பாலும், நற்பஞ் சகமு மொன்றாகக் கலந்து மரண நவைதீர்க்குங், கற்பங் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. (2)

‘ஒவ்வொரு மதத்தினும் உண்மையுண்டு’

பாமாலையேற்றல்

ஏதாகு மோவெனநா னெண்ணி யிசைத்தவெலாம்
வேதா கமமென்றே மேலணிந்தான் - பாதார
விந்த மெனதுசிர மேலமர்த்தி மெய்யளித்த
எந்தைநட ராஜ னிசைந்து. (1)

என்பாடடுக் கெண்ணாத தெண்ணி யிசைத்தேனென்
தன்பாட்டைச சத்தியமாத் தான்புனைந்தான் - முன்பாட்
காலையிலே வநது கருணையளித் தேதருமச [டுக்
சாலையிலே வாவென்றான் றான். (2)

நான்செய்த புண்ணிய மென்னுரைக்கேன் பொது
நண்ணியதோர். வான்செய்த மாமணி யென்கையிற்பெற்று
நல்வாழ்வடைந்தேன், ஊன்செய்த தேக மொளிவடிவாக
நின் றோங்குகின்றேன், தேன்செய்த தெள்ளமுதுண்டேன்
கண்டேன்மெய்த் திருநிலையே. (3)

திருக்கதவந் திறத்தல்.

திருக்கதவந் திறவாயோ திரைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித திருவுருக்காட்டாயோ
உருக்கியமு தூற்றெடுத்தென் னுடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாகவுறமெய் யுணர்ச்சியரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னையென் னுட்கலந்தே
கங்குல்பக லின்றியென்றுங் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (1)

‘புத்தியை வென்றோர் புத்தராவர்’

மணிக்கதவந் திறவாயோ மறப்பையெலாந் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையி லென்னொடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகங் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினியென் தனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியவெல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (2)

உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போக மோங்கியுறும் பொருட்டே
இரைகடந்தென் னுள்ளகத்தே எழுந்துபொங்கித் ததும்பி
என்காதற் பெருவெள்ள மென்னைமுற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித் தாங்கமுடி யாது
கண்டுகொள்வாய் நீயேயென் கருத்தின்வண்ண மரசே
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (3)

உன்புடைநான் பிறர்போலே யுடுக்கவிழைந் தேனோ
உண்ணவிழைந் தேனோவே றுடைமைவிழைந் தேனோ
அன்புடையா யென்றனைநீ யணைந்திடவே விழைந்தேன்
அந்தோவென் னாசைவெள்ள மணைகடந்த தரசே
என்புடைவந் தணைகவென வியம்புகின்றே னுலகோர்
என்சொலினுஞ்சொல்லுகவென் இலச்சையெலாம் விடு
த்தேன், தென்புடையோர் முகநோக்கித் திருப்பொதுநிற்
கின்றோய், சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

இறந்திறந்தே யிளைத்ததெலாம் போதுமிந்த வுடம்பே
இயற்கையுடம் பாகவரு ளின்னமுத மளித்தென்
புறந்தழுவி யகம்புணர்ந்தே கலந்து கொண்டெந் நாளும்
பூரணமாஞ் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைத்தே மாந்த
பேதையர்போ லெனைநினையேல் பெரியதிருக் கதவந்
திறந்தருளி யணைந்திடுவாய் சிற்சபைவா ழரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (5)

பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சிவிழைந் தேனோ
பூணவிழைந் தேனோவான் காணவிழைந் தேனோ
மெய்யுடையா யென்னொடுநீ விளையாட விழைந்தேன்
விளையாட்டெடன் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பனையரொடு மாடுகின்றோ யெனது
பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோ யின்னே
செய்யுடையென் னொடுகூடி யாடவெழுந் தருள்வாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (6)

கூறுகின்ற சமயமெலா மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலனொன்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றா ரவர்போல்
நீடுலகி லழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தே னேற்றுவித்தா யாங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுத மளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (7)

வேதநெறி யாகமத்தி னெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்து முளவனைத்துங் காட்டி
உள்ளதனை யுள்ளபடி யுணரவுணர்த் தினையே
ஏதமற வுணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவு மெண்ணமிலே னென்னொடுநீ புணர்ந்தே
தீதறவே யனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (8)

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலா மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெறவெவ் வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினையென் றனக்கே
உலைவறுமிப் பொழுதேநற் றருணமென்நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வா யுண்மையுரைத் தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருப்பொதுநிற் கின்றோய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. (9)

திருத்தகுமோர் தருணமிதிற் றிருக்கதவந் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுத மூட்டிக்
கருத்துமகிழ்ந் தென்னுடம்பிற் கலந்துளத்திற் கலந்து
கனிந்துயிரிற் கலந்தறிவிற் கலந்துலக மனைத்தும்
உருத்தகவே யடங்குகின்ற வூழிதொறும் பிரியா
தொன்றாகிக் காலவரை யுரைப்பவெலாங் கடந்தே
திருத்தியொடு விளங்கியரு ளாடல்செய வேண்டுஞ்
சித்தசிகா மணியேயென திருநடநா யகனே. (10)

திருச்சிற்றம்பலம்

'பொன்னம்பலமெனப் போகும் பாவம்'

பிள்ளைச்சிறு விண்ணப்பம்

தடித்தவோர் மகனைத் தந்தையீண்டடித்தாற் றாயுட னணைப்பள் தாயடித்தாற், பிடித்தொரு தந்தை யணைப் பனிங் கெனக்குப் பேசிய தந்தையுந் தாயும், பொடித்திரு மேனி யம்பலத் தாடும் புனிதநீ யாதலா லென்னை, அடித் தது போது மணைத்திடல் வேண்டும் அம்மையப் பாவினி யாற்றேன். (1)

பணத்திலே சிறிது மாசையொன் றிலைநான் படைத் தவப பணங்களைப்பலகால், கிணற்றிலே யெறிந்தேன் குளத்திலுமெறிந்தேன் கேணியி லெறிந்தன னெந்தாய், குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளையெறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே, கணத்திலே யெல்லாங் கா ட்டுநின் னருளைக் கண்டன னினிச் சொல்வதென்னே. (2)

சரியையோர் நான்குங்கிரியையோர் நான்குஞ் சாற் றிடும் யோகமோர்நான்கும், புரியவும் பதங்கள்பொருந்தவு மெனது புந்தியி லாசைசற் றறியேன், பெரியதோர்ஞான நான்கினு மாசை பெற்றிலேன் முத்திபெற் றிடவும், உரியதோ ரிச்சை யெனக்கிலை யென்ற னுள்ளநீ யறிந் தே யெந்தாய். (3)

இறக்கவு மாசை யில்லையிப் படிநா னிருக்கவு மாசை யின் றினிநான், பிறக்கவு மாசை யிலையுல கெல்லாம் பெரியவர் பெரியவ ரெனவே, சிறக்கவு மாசை யிலைவிசித் திரங்கள் செய்யவு மாசையொன் றில்லை, துறக்கவுமாசை யிலைதுய ரடைந்து தூங்கவு மாசையொன் றிலையே. (4)

சற்சபைக் குறியார் தம்மொடுங் கூடித் தனித்தபே ரன்புமெய் யறிவும, நற்சபைக் குரிய வொழுக்கமு மழியா நலலமெய் வாழ்க்கையும பெற்றே, சிற்சபைநடமும்பொற் சபைநடமுந் தினந்தொறும் பாடிநின் றாடித், தெற்சபை யுலகத் துயிர்க்கெலா மின்பஞ் செய்வதென் னிச்சையா மெந்தாய். (5)

எவ்வுயிர்த் திரளு மென்னுயி ரெனவே யெண்ணிநல் லின்புறச செயவும், அவவுயிர களுக்கு வருமிடை யூற்றை யகற்றியே யச்சநீக் கிடவுஞ், செவவையுற் றுனது திருப் பதம் பாடிச சிவசிவ வென்றுகூத் தாடி, ஒவ்வுறு களிப்பா லழிவுறு திங்கே வோங்கவு மிச்சைகா ணெந்தாய். (6)

தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்தசன் மார்க்கச், சங்கமே கண்டு களிக்கவுஞ் சஙகஞ் சார்திருக் கோயில்கண் டிடவுந், துங்கமே பெறுஞ்சற சஙகங் றேழி துலஙகவுஞ் சங்கத்தி லடியேன், அஙகமே குளிர நின்றனைப் பாடி யாடவு மிச்சைகா ணெந்தாய். (7)

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துய ரச்சமா திகளைத், தருணநின் னருளாற் றவிர்த்தவர்க் கின்பந் தரவும்வன் புலைகொலை யிரண்டும், ஒருவிய நெறியி லுலகெலா நடக்க வுஞற்றவும் அம்பலந் தனிலே, மருவிய புகழை வழுத்தவும் நின்னை வாழ்த்தவு மிச்சைகா ணெந்தாய். (8)

பிள்ளைப்பெரு விண்ணப்பம்.

கருத்துமே ரூகிக் கோயிலிற் புகுந்துன் காட்சியைக் கண்டபோ தெல்லாம, வருத்தமே யடைந்தேன் பயத்

‘உலகபோகம் நாய்கக்கின பாயாசமே’

தொடுந் திரும்பிவந்து நொந்திளைத்தன னெந்தாய், நிருத்தனே நின்னைத் துதித்தபோ தெல்லாம் நெகிழ்ச்சியில்லாமையால் நடுங்கிப், பருத்தவென் னுடம்பைப் பார்த்திடா தஞ்சிப் படுத்தது மையநீ யறிவாய். (1)

புன்புலா லுடம்பி னாசுத்தழ மிதனிற் புகுந்துநா னிருக்கின்ற புணர்ப்பும், என்போலா மணியே யெண்ணி னானெண்ணி யேங்கிய வேக்கநீ யறிவாய், வன்புலா லுண்ணு மனிதரைக் கண்டு மயங்கியுள் நடுங்கி யாற்றமல், என்பெலாங் கருக விளைத்தன னந்த விளைப்பையுமையநீ யறிவாய். (2)

பொருளிலே யுலக மிருப்பதா தலினால் புரிந்துநா மொருவர்பாற் பலகால், மருவினாற் பொருளி னிச்சையாற் பலகால் மருவுகின் றனெனக் கருதி, வெருவுவரெனநா னஞ்சியெவ் விடத்து மேவிலே னெந்தைநீ யறிவாய், ஒருவுமப் பொருளை நினைத்தபோ தெல்லா முவட்டினே னிதுவுநீ யறிவாய். (3)

கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன், மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால் மெய்யெலா மையகோ மறைத்தேன், வையமேற் பிறர்தங் கோலமு நடையும் வண்ணமு மண்ணலே சிறிதும், பையநா னூன்றிப் பார்த்ததே யில்லை பாரப்பனேல் பயமிகப் படைப்பேன். (4)

தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தாற் சிறுகுறு மென்றுளம் பயந்தே, நாட்டிலே சிறிய வூர்ப்புறங் களிலே நண்ணினே னூரப்புற மடுத்த, காட்டிலே பருக்கைக் கல்

‘புலால் உணபவன் புலையனாவான்’

விலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற விளைப்பை, எட்டிலே யெழுத முடியுமோ விவைக ளெந்தைநீ யறிந்தது தானே. (5)

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினா லிளைத்தே, வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன், நீடிய பிணியால் வருந்துகின் றோரென் னேருறக் கண்டுளந் துடித்தேன், ஈடின் மானிகளா யேழைக ளாய்நெஞ் சிளைத்தவர் தமைக் கண்டே யிளைத்தேன். (6)

நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பல பெயர் நாட்டிப், பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய வுயிரைப், பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே புந்திநொந் துளநடுக் குற்றேன், கலியுறு சிறியதெய்வவெங் கோயில்கண்டகாலத்திலும்பயந்தேன்.

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம்பயந்தேன், கண்ணினா லையோ பிறவுயிர் பதைக்கக் கண்டகாலத்திலும் பதைத்தேன், மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி வகைகளுங் கண்டபோ தெல்லாம், எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்க மெந்தைநின் திருவுள மறியும். (8)

காட்டுய ரணைமே லிருக்கவும் பயந்தேன் காலின்மேற் கால்வைக்கப் பயந்தேன், பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன் பஞ்சணை படுக்கவும் பயந்தேன், நாட்டிய வுயர்ந்த திண்ணைமே லிருந்து நன்குறக் களித்துக் கால் கீழே, நீட்டவும் பயந்தே னீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தன னெந்தாய். (9)

கருணையுஞ் சிவமே பொருளெனக்காணுங் காட்சியும் பெறுகமற் றெல்லாம், மருணெறி யெனநீ யெனக்கறி வித்த வண்ணமே பெற்றிருக் கின்றேன், இருணெறி மாயைவினைகளாற்கலக்க மெய்தியதென்செய்வேனெந்தாய், தெருணிலை யின்றிக் கலங்கினே னெனினுஞ் சிறுநெறி பிடித்ததொன் றிலையே. (10)

தலைவர்க ளெல்லாந் தனித்தனிவணங்குந்தலைவனே யின்றுமென் னுளமும், மலைவிலென் னறிவு நானுமிவ் வுலக வழக்கிலே வுயிரிரக் கத்தால், இலகுகின் றனநா னென்செய்வே னிரக்க மென்னுயி ரென்னவே நிலையே நிலைபெறு மிரக்கம் நீங்கிலென் னுயிரும் நீங்குமின் றிருவுள மறியும். (11)

சுத்தசன்மார்க்க வேண்டுகோள்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை யியம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க வருட்ஜோதி செலுத்தியிடல்வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டுந்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

சன்மார்க்க துன்மார்க்க இயல்பு

சேய்போ லுலகத் துயிரையெல் லாமெண்ணிச் சேர்ந்துபெற்ற, தாய்போ லுரைப்பர்சன் மார்க்கசங் கத்தவர் சாற்றுமெட்டிக், காய்போற் பிறர்தமைக் கண்டாற் கசந்துட் கடுகடுத்தே, நாய்போற் றுரைப்பர்துன் மார்க்க சங் கத்தவர் நானிலத்தே. (1)

திருவுடையாய் சிற்சபைவாழ் சிவபதியே யெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச சித்தசிகா மணியே
உருவுடையயென்னுயிராக்குயிராயொளிர்கின்ற வொளியே
உன்னுதொறு மென்னுளத்தே யூறுகின்ற வமுதே
அருவுடைய பெருவெளியா யதுவிளங்கு வெளியாய்
அப்பாலு மாய்நிறைந்த வருட்பெருஞ் ஜோதியனே
மருவுடையாள் சிவகாம வல்லிமணா வாளா
வந்தருள்க அருட்ஜோதி தந்தருளக விரைந்தே. (2)

பாவிமனக் குரங்காட்டம் பார்க்கமுடி யாதே [தேன்
பதிவெறுத்தே னிதிவெறுத்தேன் பற்றனைத்துந் தவிர்த்
ஆவியுடல் பொருளையுன்பாற் கொடுத்தேனுன்னருட்பேர்
ஆசைமய மாகியுனை யடுத்துமுயல் கின்றேன்
கூவியெனை யாட்கொளநீ நினையாயோ நினது
குறிப்பறியேன் பற்பலகால் கூவியிளைக் கின்றேன்
தேவிசிவ காமவல்லி மகிழுமணா வாளா
தெருணிறைவா னமுதளிக்குந் தருணமிது தானே. (3)

காட்டையெலாங் கடந்துவிட்டே னாட்டையடைந் துனது
கடிநகர்ப்பொன் மதிற்காட்சி கண்குளிரக் கண்டேன்
கோட்டையெலாங்கொடிநாட்டிக் கோலமிடப்பார்த்தேன்
கோயிலின்மேல் வாயிலிலே குறைகளெலாந்தவிர்ந்தே
சேட்டையற்றுக் கருவியெலாமென்வச நின்றிடவே [ன்
சித்தியெலாம் பெற்றேனுன் திருச்சிற்றம் பலமேல்
பாட்டையெலாம் பாடுகின்றே னிதுதருணம் பதியே
பலர்தருமென் னுளந்தனிலே கலந்துநிறைந் தருளே ()

‘கள் அருந்துபவன் கடையனாவான்’
‘உலகம் ஓங்காரம் என்றுணர்வான் விவேகி’

அருள்விளக்கமாலை

அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச் சிவமே
அருளமுதே யருணிறைவே யருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் னுளமுழுது மிடங்கொண்ட பதியே
என்னறிவே யென்னுயிரே யெனக்கினிய வுறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா வெனக்கே
தெருளளித்த திருவாளா ஞானவுரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற் றருளே. (1)

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிந் தருளே. (2)

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே.

'தெரிபவை அனைத்தும் தூக்கத்தொகுதி'

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத் தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே. (4)

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கு மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கு மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கு நலமே
எல்லார்க்கும் பொதுவிலநட மிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே. (5)

கொலைபுரிவார் தவிரமற்றை யெல்லாரு நினது
குலத்தாரே நீயெனது குலத்துமுதன் மகனே
மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந் திருக்கவென வாழ்த்தியவென் குருவே
நிலைவிழைவார் தமைக்காக்கு நித்தியனே யெல்லா
நிலையும்விளங் குறவருளில் நிறுத்தியசிற் குணனே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்றமணிப் பொதுவில்
புனிதநடத் தரசேயென் புகலுமணிந் தருளே. (6)

'விரத மேன்பது கொன்று தின்னாமையே'
'காணமெலாம் கரைந்தால் தனிக்கரை காணலாம்'

உயிர்க்கொலையும் புலைப்புசிப்பு முடையவர்க ளெல்லாம்
உறவினத்தா ரல்லாவர் புறவினத்தா ரவர்க்குப்
பயிர்ப்புறமோர் பசிதவிர்த்தன் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவே லிங்கே
நயப்புறுசன் மார்க்கமவ ரடையளவு மிதுதான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றவரு ளிறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே. (7)

தயையுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே யீங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருணெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகவென் றெனக்கிசைத்த நண்புறுசற் குருவே
உயலுறுமென் னுயிர்க்கினிய வுறவேயென் னறிவில்
ஓங்கியபே ரன்பேயென் னன்பிலுறு மொளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே. (8)

நால்வருண மாசிரம மாசார முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணந் தோல்வருணங் கண்டறிவா ரிலைநீ
விழித்திதுபா ரென்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணிலலை யாதே
காண்பனவெல் லாமெனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடத் தரசேயென் மாலையணிந் தருளே. (9)

'கிராசைக்கொத்த அமிர்தமில்லை'
'ஆசைக்கொத்த விஷமில்லை'

உபதேசவுண்மை

கண்ணே கண்மணியே-கருத்-தேகருத் தின் கனிவே
விண்ணே விண்ணிறைவே-சிவ-மேதனிமெய்ப் பொருளே
தண்ணே ரொண்மதியே-யெனைத்-தந்த தயாநிதியே
யுண்ணேருள்ளொளியே-யெனக்-குண்மை யுரைத்தருளே.

நன்னா லுங்கடந்தே-யொளிர்-ஞான சபாபதியே
பொன்னா ருஞ்சபையாய்-அருட்-பூரண புண்ணியனே
என்றா லாவதொன்றும்-உனக்-கில்லையெனினு மெந்தாய்
உன்னால் வாழுகின்றே-னெனக்-குண்மை யுரைத்தருளே.

சிவயோகநிலை

மதிமண்ட லத்தமுதம் வாயார வுண்டே
பதிமண்ட லத்தரசு பண்ண - நிதிய
நவநேய மாக்கு நடராஜ னேயெஞ்
சிவனே கதவைத் திற. (1)

இந்தா ரருளமுதம் யானருந்தல் வேண்டுமிங்கே
நந்தா மணிவிளக்கே ஞானசபை - எந்தாயே
கோவே யெனது குருவே யெனையாண்ட
தேவே கதவைத் திற. (2)

சாகா வருளமுதந் தானருந்தி நான்களிக்க
நாகா திபர்சூழ் நடராஜா - ஏகா
பவனே பரனே பராபரனே யெங்கள்
சிவனே கதவைத் திற (3)

அருளோங்கு தண்ணமுத மன்பா லருந்தி
மருணீங்கி நான்களித்து வாழப் - பொருளாந்
தவநேயர் போற்றுந் தயாநிதியே யெங்கள்
சிவனே கதவைத் திற. (4)

வானோர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானோ தயவமுத நானருந்த - ஆனாத்
திறப்பா வலர்போற்றுஞ் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. (5)

எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லா ரமுதமது நானருந்த - நல்லார்க்கு
நல்வாழ் வளிக்கு நடராயா மன்றோங்கு
செல்வா கதவைத் திற. (6)

ஏழ்நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நானுண்டு மாண்புறவே - கேழ்நிலைக்க
ஆவாவென் றென்னையுவந் தாண்டதிரு வம்பலமா
தேவா கதவைத் திற. (7)

ஈனா வுலகத் திடர்நீங்கி யின்புறவே
ஞான வமுதமது நானருந்த - ஞான
உருவே யுணர்வே யொளியே வெளியே
திருவே கதவைத் திற. (8)

திரையோ தசத்தே திகழுகின்ற வென்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப - உரையோது
வானேயெம் மானேயெம் மானே மணிமன்றிற்
றேனே கதவைத் திற. (9)

சோதிமலை மேல்வீட்டிற் றூய திருவமுதம்
மேதினிமேல் நானுண்ண வேண்டினேன் - ஓதரிய
ஏகா வனேகா வெழிற்பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற. (10)

ஆக மாந்தமும் வேதத்தி னந்தமும் அறையும்
பாக மாம்பர வெளிநடம் பரவுவீ ருலகீர்
மோக மாந்தருக் குரைத்திலே னிதுசுக முன்னும்
யோக மாந்தர்க்குக் காலமுண் டாகவே யுரைத்தேன்.

உறுதிகூறல்.

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோ மென்பீர் கண்ணோடே கருத்தோடே கருத்தனைக கருதீர், பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில் பசியோடே வந்தாரைப் பார்ககவு நேரீர், கொட்டோடே முழக்கோடே கோலங்காண்கின்றீர் குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக குறியீர், எட்டோடே யிரண்டுசேர்த் தெண்ணவு மறியீர் எதுதுணை கொள்கின்றீர் பித்துலகீரே. (1)

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரசசந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீ ரழிதலழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே
வீதியிலே யருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே. (1)

தத்துவ வெற்றி

மனமெனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுறவென் சொல்வழியே யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீ யென்சொல்வழி யேற்றிலையா னாலோ

திணையளவுன் னதிகாரஞ் செல்லவொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளாற் கணத்தே
நனவிலெனை யறியாயோ யாரெனவிங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே. (2)

விரிந்தமன மெனுஞ்சிறிய விளையாட்டுப் பயலே
விரிந்துவிரிந் தலையாதே மெலியாதே விடயம்
புரிந்தநெறி புரிந்தவமே போகாதே பொறிவாய்ப்
புரையாதே விரையாதே புகுந்துமயங் காதே
தெரிந்துதெளிந் தொருநிலையிற் சித்திரம்போ லிருநீ
சிறிதசைந்தா லக்கணமே சிதைத்திடுவேன் கண்டாய்
பரிந்தெனைநீ யாரென்று பார்த்தாய்சிற் சபைவாழ்
பதிதனக்கே யருட்பட்டம் பலித்தபிள்ளை நானே. (3)

சுத்தசிவநிலை

சுத்த வடிவுஞ் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவு நிறைந்தோங்கு - மத்தெனுமோர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றே னெங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான். (1)

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்சொல் வார்த்தையன்றி. நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர் நான் - ஏனுரைப்பேன், நாஞு ரெனக்கெனவோர் ஞான வுணர் வேதுசிவம், ஊனுடி நில்லா வழி. (2)

'சன்மார்க்க மெய்ந்நெறியைக் கடைப்பிடியுங்கள்'

'சாகாவரம் பெற்றவரே ஞானிகளாவார்'

'இந்திரிய வடக்கம் இதமெலாம் தரும்'

வேதா கமங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்னவலா லுண்மைவெளி தோன்ற வுரைத்தலிலை
என்ன பயனோ விவை. (3)

செத்தாரை யெல்லாந் திரும்ப வெழுப்புதலிங்
கெத்தால் முடியுமெனி லெம்மவரே - சித்தாம்
அருட்பெருஞ் ஜோதி யதனால் முடியுந்
தெருட்பெருஞ் சத்தியமீ தே. (4)

ஆடாதீர் சற்று மசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் - வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினியிங்
கென்மார்க் கமுமொன்றா மே. (5)

மார்க்கமெலா மொன்றாகு மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலா நீக்கித் துணிந்துளத்தே - ஏக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீரிந் நாள். (6)

ஏமாந் திருக்கு மெமரங்கா ளிவ்வுலகில்
சாமாந்த காரத் தரம்பெறவே - காமாந்த
காரத்தை விட்டுக் கருதுமினோ வித்தருணம்
நீரத்தைச் சேர்வீர் நிசம். (7)

ஞானசரியை

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு[பே
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று

வனைந்துவனைந் தேத்துதுநாம் வம்மினுலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்கின்றே
ன், பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே.

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருண மிதுவே
வானுரைத்த மணிமன்றில் நடம்புரியெம் பெருமான்
வரவெதிர்கொண் டவனருளால் வரங்களெலாம் பெறவே
தேனுரைக்கு முளமினிக்க வெழுகின்றே னீவிர்
தெரிந்தடைந்தென் னுடனெழுமின் சித்திபெற லாகும்
ஏனுரைத்தே னிரக்கத்தா லெடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையுஞ் சுகத்தினைநீர் தானடைதல் குறித்தே. (2)

குறித்துரைக்கின் றேனிதனைக் கேண்மினிங்கே வம்மின்
கோணுமனக் குரங்காலே நாணுகின்ற வுலகீர்
வெறித்தவும்மா லொருபயனும் வேண்டுகிலே னெனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதஞ் சமயமெலாம் பொய்பொய்யே யவற்றில்
புகுதாதீர் சிவமொன்றே பொருளெனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
சித்தியெலா மித்தினமே சத்தியஞ்சேர்ந் திடுமே. (3)

செய்தாலுந் தீமையெலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தானங் கவனே
மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்கம்
மேவுகவென் றுரைக்கின்றேன் மேதினியீரெனைத்தான்

'ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் படித்தவனே
வாழ்வின் சட்டமறிந்தவன்'

வைதாலும் வதிடுமின் வாழ்த்தெனக்கொண் டிடுவேன்
மனங்கோணேன் மானமெலாம் போனவழி விடுத்தேன்
பொய்தானோர் சிறிதெனினும் புகலேன்சத் தியமே
புகல்கின்றே னீவிரெலாம் புனிதமுறும் பொருட்டே.()
மற்றறிவோ மெனச்சிறிது தாழ்ந்திருப்பீ ராணல்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே யந்தோ
சற்றுமதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்களல்லா லதனை
எற்றினின்று தடுக்கவல்லா ரெவ்வுலகி லெவரும்
இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமினோ வெற்றுமிற வீரே. (5)

அணங்கெழுபே ரோசையொடும் பறையோசை பொங்கக்கோரணிகொண்டந்தோபிணங்கழுவியெடுத்துப்போய்சுடுகின்றீ ரினிச்சாகும் பிணங்க ளேநீர், கணங்கழுகுண் டாலுமொரு பயனுண்டே யென்னபயன் கண்டீர் சுட்டே,எணங்கெழுஞ்சாம் பலைக்கண்டீ ரதுபுன்செயெருவுக்கு மியலா தன்றே. (1)

பரனளிக்குந் தேகமிது சுடுவதப ராதமெனப் பகர்கின் றேனீர், சிரநெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலருஞ் சித்த சாமி, உரனளிக்க வெழுகின்ற திருநாள்வந் தடுத்தனவீ துணர்ந்து நல்லோரா, வரனளிக்கப் புதைத்தநிலை காணீரோ கண்கெட்ட மாட்டி னீரே. (2)

கருணையிலா வாட்சி கடுகி யொழிக
அருணயந்த சன்மார்க்க ராள்க - தெருணயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க விசைந்து. (1)

நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரு மெஞ்ஞான்
சாவா வரமெனைப்போற் சார்ந்தவருந்-தேவாநின் [றும்
பேரருளை யென்போலப் பெற்றவரு மெவ்வுலகில்
ஆருளார்நீ சற்றே யறை. (2)

தொடக்கவோநல்ல சொன்மலரில்லைநான் துதிக்க
வோபத்தி சுத்தமுமில்லையுள், ஒடுக்கவோமன மென்வச
மில்லையூழ் உற்றவாணவமாதிமலங்களைத், தடுக்கவோதிட
மில்லையென்மட்டிலே தயவுதானினக் கில்லையுயிரையும்,
விடுக்கவோமனமில்லையென்செய்குவேன்விளங்குமன்றில்
விளங்கியவள்ளலே. (3)

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ் செயல்க ளாலே
வேற்றாலே யெஞ்ஞான்று மழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தா [னெனக்கே
ஏற்றாலே யிழிவெனநீர் நினையாதீ ருலகீர்
எந்தையருட் பெருஞ்ஜோதி யிறைவனைச்சார் வீரே ()

என்றாலோர் துரும்புமசைத் தெடுக்கமுடி யாதே
எல்லாஞ்செய் வல்லவனென் றெல்லாரும் புகலும்
நின்றாலிவ் வுலகிடைநான் வாழ்கின்றே னரசே
நின்னருள்பெற் றழியாத நிலையையடைந் திடவென்
தன்றாலோர் சுதந்தரமு மில்லைகண்டாய் நினது
சகலசுதந் தரத்தையென்பாற் றயவுசெயல் வேண்டும்
பின்றாலென் றிடிற்சிறிதுந் தரித்திருக்க மாட்டேன்
பேராணை யுரைத்தேனென் பேராசை யிதுவே. (5)

யான் எனும் செருக்குநன்மையைப் போக்கும்

உ

அருட்பெருஞ்ஜோதி.

திரு அருட்பா

நாமாவளி

அம்பலத் தரசே யருமருந்தே
ஆனந்தத் தேனே யருள் விருந்தே (1)
பொது நடத்தரசே புண்ணியனே
புலவ ரெல்லாம் புகழ் கண்ணியனே (2)
மலைதரு மகளே மட மயிலே
மதிமுக வமுதே யிளங் குயிலே (3)
ஆனந்தக் கொடியே யிளம் பிடியே
அற்புதத் தேனே மலைமானே (4)
சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா (5)
படன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா (6)
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா (7)
அந்தண வங்கண வம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாகா (8)
அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா (9)
இக்கரை கடந்திடி லக்கரையே
இருப்பது சிதம்பர சர்க்கரையே (10)
என்னுயி ருடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராஜ புத்தமுதே (11)

ஐயர் திருச்சபை யாடகமே
ஆடுத லானந்த நாடகமே (12)
உத்தர ஞான சிதம் பரமே
சித்தி யெலாந்தரு மம் பரமே (13)
அம்பலவா சிவ மாதே வா
வம்பல வாயிங்கு வாவாவா (14)
நடராஜ னெல்லார்க்கு நல்லவனே
நல்ல வெலாஞ் செய வல்லவனே (15)
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த யோனகங் கொண் டோமே (16)
சகள வுபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா (17)
சந்ததமுஞ் சிவ சங்கர பஜனம்
சங்கித மென்பது சற்சன வசனம் (18)
சங்கர சிவ சிவ மாதேவா
எங்களை யாட்கொள வாவாவா (19)
அரகர சிவசிவ மாதேவா
அருளமு தந்தர வா வா வா (20)
நடன சிகாமணி நவ மணியே
திடனக மாமணி சிவ மணியே (21)
நடமிடு மம்பல நன் மணியே
புடமிடு செம்பல பொன் மணியே (22)
உவட்டாது தித்திக்கு முள்ளமுதே
தெவிட்டாது தித்திக்குந் தெள்ளமுதே (23)
நடராஜ வள்ளலை நாடுதலே
நன்னெறி மாமுனி யாடுதலே (24)
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட்பெருஞ் ஜோதி யென் னாண்டவனே (25)

நடராஜ மாணிக்க மொன் றதுவே
நண்ணுத லாணிப்பொன் மன்றதுவே (26)
நடராஜ பலமது நம்பலமே
நடமாடுவது திரு வம்பலமே (27)
நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு (28)
சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு (29)
அம்பலப் பாட்டே யருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லா மருட் பாட்டு (30)
அம்பல வாணனை நாடினனே
அவனடியா ரொடுங் கூடினனே (31)
தம்பத மாம்புகழ் பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே (32)
நான் சொன்ன பாடலுங் கேட்டாரே
ஞான சிதம்பர நாட்டாரே (33)
இனித்துயர் படமாட்டேன் விட்டேனே
என்குருமே லாணை யிட்டேனே (34)
இனிப்பாடு படமாட்டேன் விட்டேனே
யென் னப்பன்மே லாணை யிட்டேனே (35)
சன்மார்க்கம் நன்மார்க்கம நன் மார்க்கம்
ஜகமார்க்கந் துன்மார்க்கம் துன்மார்க்கம் (36)
நாதாந்த நாட்டுக்கு நாயகரே
நடராஜரே சபா நாயகரே (37)
நான் சொல்லுமிது கேளீர் சத்தியமே
நடராஜவெனில் வரு நித்தியமே (38)
நல்லோ ரெல்லாக்குஞ சபாபதியே
நல்வர மீயுந் தயாநிதியே (39)

நடராஜர் தன்னட நன்னடமே
நடம்புரி கின்றது மென்னிடமே (40)
சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளையே
திருவாள ஞனவன் சீர்ப் பிள்ளையே (41)
சிவகாம வல்லியைச் சேர்ந்தவனே
சித்தெலாஞ் செய்திடத் தேர்ந்தவனே (42)
இறவா வரந்தரு நற்சபை யே
எனமறை புகழ்வது சிற் சபையே (43)
என்னிரு கண்ணு ளிருந்தவனே
இறவா தருளு மருந்தவனே (44)
சிற்சபை யப்பனை யுற்றேனே
சித்தியெலாஞ் செயப் பெற்றேனே (45)
அம்பல வாணர்தம் அடியவரே
அருளரசாள் மணி முடியவரே (46)
அருட் பெருஞ் ஜோதியைக் கண்டேனே
ஆனந்தத் தெள்ளமு துண்டேனே (47)
இருட் பெருமாயையை விண்டேனே
எல்லாஞ் செய் சித்தியைக் கொண்டேனே (48)
கருணை நிதியே குண நிதியே
கதிமா நிதியே கலா நிதியே (49)
தருணை பதியே சிவ பதியே
தனிமா பதியே சபா பதியே (50)
கருணை நிதியே சபா பதியே
கதிமா நிதியே பசுபதியே (51)
சபாபதி பாதம் தபோப்ர சாதம்
தயாநிதி போதம் சதோய வேதம் (52)
கருணைம் பரவர கரசிர பவபவ
அருணைம் பரதர ஹரஹர சிவசிவ (53)

கனகா கரபுர ஹரசிர கரதர
கருணா கரபர சுரவர ஹரஹர (54)
கனக சபாபதி பசுபதி நவபதி
அனக வுமாபதி யதிபதி சிவபதி (55)
சிதம் ப்ரகாசா பரம் ப்ரகாசா
சிதம்ப ரேசா சுயம்ப்ர காசா (56)
அருட்ப்ர காசம் பரப்ர காசம்
அகப்ர காசம் சிவப்ர காசம் (57)
நடப்ர காசம் தவப்ர காசம்
நவப்ர காசம் சிவப்ரகாசம் (58)
நாத பரம்பரனே பரநாத சிதம்பரனே
நாத திகம்பரனே தசநாத சுதந்தரனே (59)
ஞான நடத்தவனே பர ஞானியிடத்தவனே
ஞான வரத்தவனே சிவ ஞான புரத்தவனே (60)
ஞான சபாபதியே மறைநாடு சதாகதியே
தீன தயாநிதியே பர தேவியுமா பதியே (61)
புத்தந் தரும் போதா வித்தந்தருந் தாதா
நித்தந்தரும் பாதா சித்தந்திரும் பாதா. (62)
சூதுமன்னு மிந்தையே சூடலென்ன விந்தையே
கோதுவிண்ட சிந்தையே கோயில்கொண்ட தந்தையே ()
அன்புமுந்து சிந்தையே அம்பலங்கொள் விந்தையே
இன்பமென்ப னெந்தையே எந்தைதந்தை தந்தையே ()
ஞானசித்தி புரத்தனே நாதசத்தி பரத்தனே
வானமுத்த தரத்தனே வாதவித்தை வரத்தனே (65)
நீயென்னப்பன் அல்லவா நினக்கும் இன்னஞ் சொல்லவா
தாயின்மிக்க நல்லவா சர்வசித்தி வல்லவா (66)
அஞ்சலஞ்ச லென்றுவந்தென் னெஞ்சமர்ந்த குழகனே
வஞ்சகஞ்ச முண்டகண்ட மன்றுள்நின்ற வழகனே. (67)

தொண்டர்கண்டு கண்டுமொண்டு கொண்டுளுண்ட இன்ப னே,அண்டரண்டமுண்டவிண்டுதொண்டுமண்டுமன்பனே உரியதுரியபெரியவெளியிலொளியிலொளிசெய்நடனனே பிரியவரிய பிரியமுடைய பெரியரிதய படனனே (69)
அகிலபுவன வுயிர்கள் தழைய அபயமுதவும் அமலனே
அயனும்அரியும் அரனும்மகிழ அருளும்நடன விமலனே()

நினைக்கில்நெஞ்ச மினிக்குமென்ற நிருத்தமன்றி லொருத்தனே, நினைக்குமன்பர் நிலைக்கநின்று பொருத்துகின்ற கருத்தனே. (71)

தடுத்தமலத்தைக் கெடுத்துநலத்தைக் கொடுத்தகருணைத் தந்தையே தனித்தநிலத்தில் இனித்தகுலத்திற் குனித்தவடிகொள் எந்தையே. (72)

வருகைக்கண்ணி.

வாரீர் சிதம்பர வல்லி சிவகாம
வல்லி மணாளரே வாரீர்—மணிமன்ற வாணரே வாரீர்.
அருட்பெருஞ் ஜோதியென் றுண்டவரே திரு
அம்பல வாணரே வாரீர்—அன்புடை யாளரேவாரீர்.(வா)
அச்சந் தவிர்த்தென்னை யாட்கொண் டருளிய
அந்தணரே யிங்கு வாரீர்—அம்பலத்தையரே வாரீர். (வா)
அன்புரு வானவ ரின்புற வுள்ளே
அறிவுருவாயினீர் வாரீர்—அருட்பெருஞ்ஜோதியீர் வாரீர்
அண்டங்க ளெல்லா மணுவி லடக்கும்
அரும்பெருஞ்சித்தரேவாரீர்--அற்புதரேயிங்குவாரீர். (வா)
அம்மையு மாயெனக் கப்பனு மாகியென்
அன்பனு மாயினீர் வாரீர்—அங்கணரேயிங்கு வாரீர்.(வா)
அல்ல லறுத்தென் னறிவை விளக்கிய
அம்பல வாணரே வாரீர்—செம்பொருளாயினீர் வாரீர். ()

அப்பணி பொன்முடி யப்பனென் றேத்துமெய்
அன்பருக் கன்பரே வாரீர்—இன்பந்தரவிங்கு வாரீர். (வா)
கண்டணைந் தாலன்றிக் காத லடங்காதென்
கண்மணியீ ரிங்கு வாரீர்—உண்மணியீ ரிங்கு வாரீர். (வா)
கட்டிக்கொண் டும்மைக கலந்துகொளல் வேண்டும்
காரணரே யிங்கு வாரீர்—பூரணரே யிங்கு வாரீர். (வா)

—: * :—

கையறவி லாதுநடுக் கண்புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டுதிறந் துண்டுநடு நாட்டு
ஐயர்மிக வுய்யும்வகை யப்பர்விளை யாட்டு
ஆடுவதென் றேமறைகள் பாடுவது பாட்டு. (1)

சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்தமென தாச்சு
தேவர்களு மூவர்களும் பேசுவதென் பேசசு
இச்சமய வாழ்விலெனக் கென்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு. (2)

ஐயரருட் ஜோதியர சாட்சியென தாசசு
ஆரணமு மாகமமும் பேசுவதென் பேச்சு
எய்யுலக வாழ்விலெனக கென்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு. (3)

ஈசனரு ளாற்கடலி லேற்றதொரு வோடம்
ஏறிக்கரை யேறினே னிருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடநடுத் தெய்வமணிப் பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்நததுசந் தோடம். (4)

மேருமலை உச்சியில் விளங்குகம்ப நீட்சி
மேவுமதன் மேலுலகில் வீறுமர சாட்சி
சேருமதிற் கண்டபல காட்சிகள்கண் காட்சி
செப்பலரி தாமிதற்கென் னப்பனருள் சாட்சி. (5)

துரியமலை மேலுளதோர் சோதிவள நாடு
தோன்றுமதி லையர்நடஞ் செய்யுமணி வீடு
தெரியுமது கண்டவர்கள் காணிலுயி ரோடு
செத்தவ ரெழுவாரென்று கைத்தாளம் போடு. (6)
சொல்லால் அளப்பரிய சோதிவரை மீது
தூயதுரி யப்பதியில் நேயமறை யோது
எல்லாஞ்செய் வல்லசித்தர் தம்மையுறும் போது
இறந்தா ரெழுவாரென்று புறந்தாரை யூது. (7)
அம்பலத்தி லெங்களைய ராடியநல் லாட்டம்
அன்பொடு துதித்தவருக் கானதுசொல் லாட்டம்
வம்புசொன்ன பேர்களுக்கு வந்ததுமல் லாட்டம்
வந்ததலை யாட்டமன்றி வந்ததுபல் லாட்டம். (8)
நாத்திகஞ்சொல் கின்றவர்தம் நாக்குமுடை நாக்கு
நாக்குருசி கொள்ளுவது நாறியபிண் ணாக்கு
சீர்த்திபெறு மம்பலவர் சீர்புகன்ற வாக்கு
செல்வாக்கு நல்வாக்கு தேவர்திரு வாக்கு. (9)

இராகம்-பியாகடை-அடதாளசாப்பு.

பல்லவி.

வருவா ரழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே.

அநுபல்லவி.

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங் குஞ்சித பாதர்
சிவசிதம் பரபோதர் தெய்வச் சபாநாதர் வரு

சரணங்கள்.

1. சிந்தை களிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு [டு
தெளிந்தோ ரெல்லாருந்தொண்டு செய்யப்பவுரிகொண்

இந்த வெளியில்நட மிடத்துணிந் திரேயங்கே
இதைவிடப் பெருவெளி யிருக்குதென் றுலிங்கே வரு
2. இடுக்கி லாமலிருக்க இடமுண்டு நடஞ் செய்ய
இங்கம் பலமொன் றங்கே யெட்டம் பலமுண்டைய
ஒடுக்கிலிருப்பதென்னவுளவு கண்டுகொள்வீரென்றால் [ல்
உண்மையிதுவஞ்சமல்லவுன்மேலாணையென்றுசொன்
3. மெல்லியல் சிவகாம வல்லி யுடன்களித்து
விளையா டவுமெங்கள் வினையோ டவுமொளித்து
எல்லையிலின் பந்தரவும் நல்லசம யந்தானிது
இங்குமங்கும் நடமாடி யிருக்கலா மென்றபோது வரு

இராகம்-கல்யாணி-அடதாளம்.
பல்லவி.
இதுநல்ல தருணம் அருள்செய்ய-இதுநல்ல தருணம்.
அநுபல்லவி.
பொதுநல்ல நடம்வல்ல புண்ணியரே கேளும்
பொய்யேதுஞ் சொல்கிலேன் மெய்யே புகல்கின்றேன் ()
சரணங்கள்.
மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணாச சிரமமெனு மயக்கமுஞ் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லா மொழிந்தது
கொலையுங் களவு மற்றைப் புலையு மழிந்தது. (இது)
குறித்த வேதாகமக கூசசலு மடங்கிற்று
குதித்த மனமுருட்டுக் குரங்கு முடங்கிற்று
வெறித்தவெவ வினைகளும் வெந்து குலைந்தது
விந்தைசெய் கொடுமாயைச சந்தையுங் கலைந்தது. (இது)
கோபமுங காமமுங் குடிகெட்டுப் போயிற்று
கொடியவோ ராங்காரம் பொடிப்பொடி யாயிற்று

தாபமுஞ் சோபமுந் தானானே சென்றது
தத்துவ மெல்லாமென் றன்வச நின்றது. (இது)
கரையா வெனதுமனக் கல்லுங் கரைந்தது
கலந்து கொளற்கென் கருத்தும் விரைந்தது
புரையா நிலையிலென் புந்தியுந் தங்கிற்று
பொய்படாக் காதல் ததும்பிமேற் பொஙகிற்று. (இது)

நெஞ்சோடுகிளத்தல்.

இராகம்-இந்துஸ்தான்காபி-சாப்புதாளம்.

பல்லவி.

அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே. அஞ்

அநுபல்லவி.

1. வஞ்சமி லார்நாம் வருந்திட லப்போதே
அஞ்சலென் பாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்
2. துய்ய ரருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
அய்ய ரிதோதிரு வம்பலத் திருக்கின்றார். அஞ்
3. மண்ணில் நமையாண்ட வள்ளலார் நம்முடைய
அண்ண லிதோதிரு வம்பலத் திருக்கின்றார். அஞ்
4. இப்புவி யில்நம்மை யேன்றுகொண் டாண்டநம்
அப்ப ரிதோதிரு வம்பலத் திருக்கின்றார். அஞ்
5. சித்த ரெலாம்வல்ல தேவர் நமையாண்ட
அத்த ரிதோதிரு வம்பலத் திருக்கின்றார். அஞ்
6. சோதி யருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
ஆதி யிதோதிரு வம்பலத் திருக்கின்றார். அஞ்
7. தாண்டவ ஞரெனத் தான்தடுத் தாட்கொண்ட
ஆண்டவ ஞரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்
8. வன்பர் மனத்தை மதியா தவர்நம
தன்ப ரிதோதிரு வம்பலத் திருக்கின்றார். அஞ்

9\. தெருளுடை யாரெலாஞ் செய்யவல் லார்திரு
அருளுடை யாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்
10\. நம்மையாட் கொள்ள நடம்புரி வார்நம
தம்மையி னோடிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்
11\. பாடுகின் றார்க்கருட் பண்பினர் ஞானக்கூத்
தாடுகின்றா ரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்
12\. நீளவல்லார்க்குமேல் நீளவல்லார்நம்மை
ஆளவல்லா ரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்
13\. இன்புடை யார்நம் மிதயத் தமர்ந்தபே
ரன்புடையா ரிதோ அமபலத் திருக்கின்றார். அஞ்
14\. செடிகள் தவிர்த்தருட் செல்வ மளிக்கின்ற
அடிக ளிதோதிரு வம்பலத் திருககின்றார். அஞ்
15\. செறிவுடை யாருளத் தேநடஞ் செய்கின்ற
அறிவுரு வாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்

இராகம்-தன்யாசி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடிய பாத மன்றாடிய பாதம்
ஆடிய பாதம் நின்றாடிய பாதம்.

சரணங்கள்.

1\. பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர் நேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம் ஆடிய
2 தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்க ளெல்லாந் தெரிசிக்கும் பாதம்
வாரா வரவாகி வந்தபொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம் ஆடிய

3. ஆரா வமுதாகி யண்ணிக்கும் பாதம்
அன்ப ருளத்தே யமர்ந்தருள் பாதம்
நாரா யணன்விழி நண்ணிய பாதம்
நான்புனை பாடல் நயந்த பொற்பாதம் ஆடிய
4. நல்லவ ரெல்லாம் நயக்கின்ற பாதம்
நாத முடிவில் நடிக்கின்ற பாதம்
வல்லவர் சொல்லெல்லாம் வல்லபொற் பாதம்
மந்திர யந்திர தந்திர பாதம் ஆடிய
5. எச்சம யத்து மிலங்கிய பாதம்
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குமாம் பாதம்
அச்சந் தவிர்த்தென்னை யாட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம் ஆடிய

வெண்ணிலா

தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே-ஒரு
தந்திரஞ்சொல்லவேண்டும் வெண்ணிலாவே 1
நாதமுடிமேலிருந்த வெண்ணிலாவே-அங்கே
நானும்வரவேண்டுகின்றேன் வெண்ணிலாவே 2
சச்சிதானந்தக்கடலில் வெண்ணிலாவே-நானுந்
தாழ்ந்துவிழவேண்டுகின்றேன் வெண்ணிலாவே 3
இராப்பகலில்லாவிடத்தே வெண்ணிலாவே-நானும்
இருக்கவெண்ணிவாடுகின்றேன் வெண்ணிலாவே 4
தேசுநிறமாய்நிறைந்த வெண்ணிலாவே-நானுஞ்
சிவமயமதாய்விழைந்தேன் வெண்ணிலாவே 5
போதநடுஆடிருந்த வெண்ணிலாவே-மலப்
போதமறவேண்டுகின்றேன் வெண்ணிலாவே 6
ஆருமறியாமலிங்கே வெண்ணிலாவே அரு
ளாளர்வருவாரோசொல்லாய் வெண்ணிலாவே 7

அந்தரங்கசேவைசெய்ய வெண்ணிலாவே-எங்கள்
ஐயர்வருவாரோசொல்லாய் வெண்ணிலாவே 8
வேதமுடிமேலிருந்த வெண்ணிலாவே-மல
வேதையுளவேதுசொல்லாய் வெண்ணிலாவே 9
குண்டலிப்பால் நின்றிலஙகும் வெண்ணிலாவே-அந்த
குண்டலிப்பால்வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 10
அம்பரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே-என்னை
ஆட்டுகின்றா ரிம்பரத்தே வெண்ணிலாவே. 11

இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தெண்டனிட்டேனென்றுசொல்லடி—சுவாமிக்கு நான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி.

அநுபல்லவி.

தண்டலை விளங்குந்தில்லைத் தலத்திற்பொன்னம்பலத்தே
கண்டவர் மயங்கவேடம் கட்டியாடுகின்றவர்க்கு. (தெ)

சரணங்கள்.

கற்பூர வாசம்வீசும் பொற்பார் திருமுகத்தே
கனிந்த புன்னகையாடக் கருணைகடைக்கண்ணுட
அற்பார் பொன்னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்
ஆடிகொண்டே யென்னை ஆட்டங்கண்டாருக்கு (தெ)
இழிந்தாலும் நம்மையிங்கே ஏற்றுவா ரென்றடைந்தால்
ஏற்றுவார் போலேபின்னும் இழியவைப் பாருக்குப்
பழந்தான் நழுவிமெல்லப் பாலில்வி ழுந்த தென்னப்
பசப்பிப் பசப்பி அன்பர் பண்டம் பறிப்பவர்க்கு (தெ)
சுட்ட திருநீறு பூசித் தொந்தோ மென்றாடுவார்க்குத்
தோன்றுதலை மாலையணி தோள்விளங்க வருவார்க்குப்
பிட்டுக்காசைப்பட்டு மாறன் பிரம்படி பட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக்காசைகொண்ட கள்ளத்தவவேடருக்கு()

வாழ்ந்தாரை மேன்மேலும் வாழச செய்பவருக்கு
மாசுபறித்தவா கையில் காசுபறிக்கின்றவர்க்குத்
தாழ்ந்தாரை அடிக்கடி தாழக்காண்பவருக்குத்
தாஞகி நாஞகித் தனியேநின்றவருக்கு (தெ)
ஆதியந்தம் நடுவில்லா ஆனந்த நாடருக்கு
அண்டருயிர் காத்தமணி கண்டசசி கண்டருக்கு
ஜோதிமயமாய் விளங்குந் தூயவடிவாளருககுத் [வர்க்கு
தொண்டர்குடி கெடுக்கவே துஜங்கட்டிக் கொண்ட
பாட்டுக்காசைப் பட்டுமுன்னம்பரவைதன் வாயிலிற்போய்
பண்புரைத்துத்தூதனென்றேபட்டஙகட்டிக்கொண்டவ
வீட்டுக்காசைப்படுவாரைவீட்டைவிட்டுத்துரத்தியே[ர்க்கு
வேட்டாண்டி யாயுலகில் ஓட்டாண்டி யாக்குவார்க்கு()
தாய்வயிற்றில் பிறவாது தானே முளைத்தவர்க்கு
ஜாதிகுல மறியாது தாண்டவஞ் செய்கின்றவர்க்கு
ஏய தொழிலருளும் என் ப்ராண நாயகர்க்கு
ஏமாந்த வரை யெல்லாம் ஏமாத்தும் ஈசருக்கு (தெ)

இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னந் தயவுவர இல்லையா—உனக்கென்மீதில்
என்ன வர்மம் சொல்லையா.

சரணஙகள்.

அன்னம் பாலிக்குந் தில்லைப் பொன்னம்பலத்தி லாடும்
அரசே—அரசே—அரசே—என்றலரவும் (இ)
சின்னஞ் சிறுவயதில் என்னை யடிமை கொண்ட
சிவமே—சிவமே—சிவமே—என்றலரவும் (இ)
முன்னம் பிழை பொறுத்தாய்இன்னம் பொருதுவிட்டால்
முறையோ—முறையோ—முறையோ—என்றலரவும் (இ

தன்னை யறியா வென்னை இன்னலுறச செய்தாயே
தகுமோ—தகுமோ—தகுமோ—என்றலரவும் (இ)

பண்டு மகிழ்ந்தெனை யாட் கொண்டு கருணை செய்த
பரமே—பரமே—பரமே—என்றலரவும் (இ)

கொண்டு குலம் பேசுவார் உண்டோ உலகில் எங்கள்
குருவே—குருவே—குருவே—என்றலரவும் (இ)

மெய்யருள் வியப்பு.

எனகுமுனக்குமிசைந்தபொருத்தம்என்னபொருத்தமோ
இந்தப்பொருத்தம்உலகில்பிறருக்கெய்தும்பொருத்தமோ

தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்ப மொன்றதே
தாவிப் போகப் போக நூலின் றாததி னின்றதே
கனக்கத் திகைப்புற் றங்கே நானுங் கலங்கி வருந்தவே
கலக்க நீக்கித் தூக்கி வைத்தாய் நிலை பொருந்தவே. 1

இங்கோர் மலையி னடுவி லுயர்ந்த தம்ப நணுகவே
ஏறிப் போகப் போக நூலி னிழைபோ னுணுகவே
அங்கே திகைத்து நடுங்கும் போதென் னடுக்க நீக்கியே
அதன்மே லுயர்ந்த நிலையில் வைத்தா யடிமையாக்கியே. 2

நினைக்க நினைக்கத் தித்திப் பெனதுநினைவிற்கொடுக்குதே
நின்பா லன்றிப் பிறர்பாற் செல்ல நெஞ்ச நடுக்குதே
எனைத்துன்பொழித் தாட்கொண்டநின்னை யன்னையென்ப
எந்தா யன்பிலேனின் னடிக்கு முன்னை யன்பனே. [னே

உன்னை மறக்கி லெந்தா யுயிரென் னுடம்பில் வாழுமோ
உன்பா லன்றிப் பிறர்பா லென்ற னுள்ளஞ் சூழுமோ
என்னைக் கொடுக்க வாங்கிக் கொண்ட தென்ன கருதியோ
எந்தாய் நின்னைக கொடுக்க வென்பா லின்றுவருதியோ. 4

வள்ளா லுன்னைப் பாடப் பாடவாய் மணக்குதே
வஞ்ச வினைக ளெனைவிட் டோடித் தலை வணக்குதே
எள்ளா துனது புகழைக் கேட்கச் செவி நயக்குதே
எந்தாய் தயவை யெண்ணுந் தோறும் உளம்வியக்குதே.
சுத்த சிவசன் மார்க்க நீதி ஜோதி போற்றியே
சுகவாழ் வளித்த சிற்றம் பலத்து ஜோதி போற்றியே
சுத்த சுடர்ப்பொற் சபையி லாடுஞ் ஜோதி போற்றியே
ஜோதி முழுதும் விளங்க விளங்குஞ் ஜோதி போற்றியே.

சற்குருதோத்திரம்

விசித்திர விஸ்வமாயிநம்-விகாரம்ருத்யு பஞ்ஜனம்
சரீரரூப வர்ஜிதம்-ஸ்வயம்ப்ரகாச லக்ஷணம்
தநுத்ரயேண சோபிதம்-தராதிதத்வ தாரிணம்
குருத்தமார்ய ராமலிங்க-கோமணிம் நமாம்யஹம். (1)
சிதாத்மதேஜ பாஸ்வரம்-சிவானுபூதி ரஞ்சனம்
ஸதாத்மகோடி நாயகம்-ஷடாந்தஜ்யோதி பாஸ்கரம்
பதார்த்தசோத நாஸ்ரயம்-பவாப்திசோஷ ணாகரம்
குருத்தமார்ய ராமலிங்க-கோமணிம் நமாம்யஹம் (2)
சராசராத்ம ரூபகம்-ஸதோதயார்க்க சிந்திதம்
க்ஷராக்ஷரத்வ யாதிகம்-ஸநாதநம் புராதநம்
பராபரப்ர காசகம்-பரோக்ஷபோத வர்ஜிதம்
குருத்தமார்ய ராமலிங்க-கோமணிம் நமாம்யஹம். (3)

வெண்பா

அகத்தியனோ வான்மிகியோ ஆதிசேடன் தானோ
மகத்துவமாம் சம்பந்த வள்ளலோ—இகத்தில்
சசிதானந்தத்தின் தண்ணளியோ யென்னென்பேன்
மெச்சுமதி இராமலிங்க வேள்.

அருட்பெருஞ்ஜோதி-தனிப்பெருங்கருணை

உ

அருட்பெருஞ்ஜோதி

திரு அருட்பா

கீர்த்தனை

ஆனந்தக்களிப்பு

நல்ல மருந்திம் மருந்து—சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து (நல்ல)

அருள்வடி வான மருந்து—நம்முள்
அற்புத மாக வமர்ந்த மருந்து
இருளற வோங்கு மருந்து—அன்பர்க்
கின்புரு வாக விருந்த மருந்து. (நல்ல)

சஞ்சலந் தீர்க்கு மருந்து—எங்குந்
தானேதா னாகித் தழைக்கு மருந்து
அஞ்சலென் றருளு மருந்து—சசசி
தாணந்த மாக வமர்ந்த மருந்து. (நல்ல)

வித்தக மான மருந்து—சதுர்
வேத முடிவில் விளங்கு மருந்து
ததது வா தீத மருந்து—என்னைத்
தானாக்கிக கொணட தயாள மருந்து. (நல்ல)

பிறப்பை யொழிககு மருந்து—யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கு மருந்து—என்னுள்
என்று மதுரித் தினிக்கு மருந்து. (நல்ல)

புத்தமு தாகு மருந்து—பார்த்த
போதே பிணிகளைப் போக்கு மருந்து
பத்த ரருந்து மருந்து—அநு
பானமுந் தானும் பரம மருந்து. (நல்ல)

மாலயன் தேடு மருந்து—முன்னம்
மார்க்கண் டரைக்காக்க வந்த மருந்து
காலனைச் சாய்த்த மருந்து—தேவர்
காணுங் கனவினுங் காணா மருந்து (நல்ல)

ஏக வுருவா மருந்து—மிக்க
ஏழைக ளுக்கு மிரங்கு மருந்து
சோகந் தவிர்க்கு மருந்து—பரஞ்
சோதியென் றன்பர் துதிக்கு மருந்து. (நல்ல)

செல்வந் தழைக்கு மருந்து—என்றும்
தீரா வினையெலாந் தீர்த்த மருந்து
நல்வந் தனைகொண் மருந்து—பர
நாதாந்த வீட்டினு நண்ணு மருந்து. (நல்ல)

பெண்ணாசை தீர்க்கு மருந்து—பொருட்
பேராசை யெல்லாம் பிளக்கு மருந்து
மண்ணாசை தீர்க்கு மருந்து—எல்லாம்
வல்ல மருந்தென்று வாழ்த்து மருந்து. (நல்ல)

மூவர்க் கரிய மருந்து—செல்வ
முத்துக் குமாரனை யீன்ற மருந்து
நாவிற் கினிய மருந்து—தைய
னாயகி கண்டு தழுவு மருந்து. (நல்ல)

நடேசர் கொம்மி

பல்லவி.

கொம்மியடிப் பெண்கள்-கொம்மியடி-இரு
கொங்கை குலுங்கவே கொம்மியடி

அநுபல்லவி.

நம்மை யாளும்பொன் னம்பல வாணனை [யுங்கடி
நாடிக் கொம்மி யடியுங்கடி-பதம்-பாடிக் கொம்மி யடி

சரணங்கள்.

காம மகற்றிய தூயனடி சிவ-காம சௌந்தரி நேயனடி
மாமறை யோதுசெவ் வாயனடி-மணி-மன்றெனு ஞானவா
காயனடி. (1)

ஆனந்தத் தாண்டவ ராஜனடி-நமை-ஆட்கொண் டரு
ளிய தேஜனடி, வானந்த மாமலை மங்கைமகிழ்-வடி-வாள
னடி மணவாளனடி. (2)

கல்லைக் கனிவிக்கும் சுத்தனடி-முடி-கங்கைக்கருளிய
கர்த்தனடி, தில்லைச் சிதம்பர சித்தனடி-தேவ-சிங்கமடி
யுயர் தங்கமடி. (3)

பெண்ணொரு பால்வைத்த மத்தனடி-சிறு-பிள்ளைக் கறி
கொண்ட பித்தனடி, கண்ணி நமக்கரு ளத்தனடி-மிக-
நல்லனடி யெல்லாம் வல்லனடி. (4)

அம்பலத் தாடல்செ ய்யனடி-அன்ப-ரன்புக் கெளி
தரு மெய்யனடி, தும்பை முடிக்கணி தூயனடி-சுயஞ்-
சோதி யடிபரஞ் சோதியடி. (5)

ஆனந்தமேலீடு

இராகம்-சஹானு-அடதாளம்.

கைவிட மாட்டானென் றாதுது சங்கே
கனக சபையானென் றாது சங்கே
பொய்விடச் செய்தானென் றாது சங்கே
பூசை பலித்ததென் றாது சங்கே. (1)

தூக்கந் தொலைத்தானென் றாது சங்கே
துன்பந் தவிர்த்தானென் றாது சங்கே
ஏக்கங் கெடுத்தானென் றாது சஙகே
ஏம சபையானென் றாது சங்கே. (2)

பொன்னடி தந்தானென் றாது சங்கே
பொன்னம் பலத்தானென் றாது சங்கே
இன்ன லறுத்தானென் றாது சஙகே
என்னு ளமர்ந்தானென் றாது சஙகே. (3)

அச்சந் தவிர்த்தானென் றாது சஙகே
அம்பல வாணனென் றாது சஙகே
இச்சை யளித்தானென் றாது சஙகே
இன்பங் கொடுத்தானென் றாது சங்கே. (4)

என்னுயிர் காத்தானென் றாது சங்கே
இன்பம் பலித்ததென் றாது சங்கே
பொன்னுரு தந்தானென் றாது சங்கே
பொற்சபை யப்பனென் றாது சங்கே. (5)

சிவமாக்கிக் கொண்டானென் றாது சங்கே
சிற்றம் பலத்தானென் றாது சங்கே
நவநோக் களித்தானென் றாது சங்கே
நானவ னேனென் றாது சங்கே (6)

நாத முடியானென் றாதாது சங்கே
ஞான சபையானென் றாதாது சங்கே
பாத மளித்தானென் றாதாது சங்கே
பலித்தது பூசையென் றாதாது சங்கே. (7)
தெள்ளமு தானென் றாதாது சங்கே
சிற்சபை யப்பனென் றாதாது சங்கே
உள்ள முவந்தானென் றாதாது சங்கே
உள்ள துரைத்தானென் றாதாது சங்கே. (8)
இறவாமை யீந்தானென் றாதாது சங்கே
எண்ணம் பலித்ததென் றாதாது சங்கே
திறமே யளித்தானென றாதாது சஙகே
சிற்றம் பலத்தானென் றாதாது சஙகே. (9)
எல்லாஞ்செய் வல்லானென் றாதாது சங்கே
எல்லார்க்கு நல்லானென் றாதாது சங்கே
எல்லா முடையானென் றாதாது சஙகே
எல்லாமு மானென் றாதாது சங்கே. (10)
கருணை நிதியனென் றாதாது சங்கே
கடவு ளவனேயென் றாதாது சங்கே
அருணை டகத்தானென் றாதாது சஙகே
அம்பலச சோதியென் றாதாது சங்கே (11)

இராகம்-தர்பார்-ரூபகதாளம்.

பல்லவி

அற்புதம் அற்புதமே—அருள்
அற்புதம் அற்புதமே.

சரணங்கள்

1. சிற்பதம் பொற்பதஞ் சீரே சிறந்தது
சித்தாடு கின்ற திருநாள் பிறந்தது

கற்பத நெஞ்சக் கரிசு துறந்தது
கற்றபொய்ந் நூல்கள் கணத்தே மறந்தது அற்

2. செத்தா ரெழுகின்ற திருநா ளடுத்தது
சிவநெறி யொன்றே யெங்குந் தலை யெடுத்தது
இத்தா ரணிமுதல் வானு முடுத்தது
இறவா வரந்தா னெனக்குக் கொடுத்தது அற்

3. ஆனந்த நாடக மாடுதல் சார்ந்தது
அடுத்த தருண மிதுவாக நேர்ந்தது
ஈனந்த மாயை யிருள்வினை சோர்ந்தது
என்னருட் ஜோதியென் னுள்ளத்தி லார்ந்தது அ

4. சத்திய ஞான சபையென்னுட் கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக்கொண்டனன்
நித்திய ஞான நிறையமு துண்டனன்
நிந்தை யுலகியற் சந்தையை விண்டனன் அற்

5. வஞ்சக ரஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
தஞ்ச மெமக்கருள் சாமிநீ யென்றனர்
சன்மார்க்க சஙகத் தவர்களே வென்றனர் அற்

6. புறங்கூறி னோரெல்லாம் புல்லெனப் போயினர்
பொற்படிக் கீழ்ப்புற மீளவு மேயினர்
மறங்கூறி னேமென்செய் வோமென்று கூயினர்
வாழிய வென்றசொல் வாயின ராயினர் அற்

7. வெவ்வினைக் காடெலாம் வேரோடு வெந்தது
வெய்ய மாமாயை விரிவற்று நொந்தது
செவ்விய ஞானஞ் சிறப்புற வந்தது
சித்திகள் யாவையுஞ் செய்திடத் தந்தது அற்

8. சாதி சமயச சழக்கெலா மற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினி யிற்சாகா வித்தையைக் கற்றது
மெய்யருட் ஜோதியென் னுள்ளத்திலுற்றது அற்

பிரபஞ்சவெற்றி

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

அம்பலவர் வந்தாரென்று சின்னம்பிடி
அற்புதஞ் செய்கின்றாரென்று சின்னம்பிடி
செம்பல னளித்தா ரென்று சின்னம்பிடி
சித்தி நிலைபெற்ற தென்று சின்னம்பிடி. (1)

சிற்சபை யைக்கண்டோ மென்று சின்னம்பிடி
சித்திகள் செய்கின்றோ மென்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோ மென்று சின்னம்பிடி
புந்தி மகிழ்கின்றோ மென்று சின்னம்பிடி. (2)

ஞான சித்திபுர மென்று சின்னம்பிடி
நாடகஞ் செய்யிட மென்று சின்னம்பிடி
ஆன சித்திசெய் வோமென்று சின்னம்பிடி
அருட்ஜோதி பெற்றோமென்று சின்னம்பிடி. (3)

கொடிகட்டிக் கொண்டோமென்று சின்னம்பிடி
கூத்தாடு கின்றோமென்று சின்னம்பிடி
அடிமுடியைக் கண்டோமென்று சின்னம்பிடி
அருளமுத முண்டோமென்று சின்னம்பிடி. (4)

அப்பர்வரு கின்றாரென்று சின்னம்பிடி
அற்புதஞ் செய்வதற் கென்று சின்னம்பிடி
செப்ப நிலைபெற்ற தென்று சின்னம்பிடி
சித்தி புரமிட மென்று சின்னமபிடி. (5)

சண்முகர் கொம்மி.

குறவர் குடிசை நுழைந்தாண்டி-அந்தக்
கோமாட்டி யெசசில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி-அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி. (1)

மாமயி லேறி வருவாண்டி-அன்பர்
வாழ்த்த வரஙகள் தருவாண்டி
தீமையி லாத புகழாண்டி - அவன்
சீர்த்தியைப் பாடி யடியுங்கடி . (2)

பன்னிரு தோள்க ளுடையாண்டி-கொடும்
பாவிகள் தம்மை யடையாண்டி
என்னிரு கண்க ளனையாண்டி-அவன்
ஏற்றத்தைப் பாடி யடியுஙகடி. (3)

வேங்கை மரமாகி நின்றாண்டி-வந்த
வேடர்தமை யெலாம் வென்றாண்டி
தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி-அந்த
தீரனைப் பாடி யடியுங்கடி. (4)

சீர்திகழ் தோகை மயின்மேலே - இளஞ்
செஞ்சுடர் தோன்றுந் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான் - வருங்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள். (5)

ஆறு முகங்களிற் புன்சிரிப்பும் - இரண்
டாறு புயந்திக ழற்புதமும்
வீறுபரஞ்சுடர் வண்ணமுமோர் - திரு
மேனியும் பாருங்கள் வெள்வளைகாள். (6)

சைவந் தழைக்கத் தழைத்தாண்டி - ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி

பொய்வந்த வுள்ளத்திற் போகாண்டி - அந்த
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி. (7)

பாங்கியர்க்கறிவுறுத்தல்.

கண்ணிகள்

அம்பலத்தி லாடுகின்றார் பாங்கிமாரே - அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே. (1)

ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமாரே - மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே. (2)

இன்பவடி வாய்ச்சபையிற் பாங்கிமாரே - நடம்
இட்டவர்மே லிட்டம்வைத்தேன் பாங்கிமாரே. (3)

ஈனவுடற் கிசைவையேன் பாங்கிமாரே - நட
நேசர்தமை யெய்தும்வண்ணம் பாங்கிமாரே. (4)

உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமாரே - இன்ப
வுருவாகி யோங்குகின்றார் பாங்கிமாரே. (5)

கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமாரே-யென்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமாரே. (6)

காமனைக்கண் ணாலெரித்தார் பாங்கிமாரே - என்றன்
காதலைக்கண் டறிவாரோ பாங்கிமாரே. (7)

குஞ்சிதப்பொற் பாதங்கண்டாற் பாங்கிமாரே - உள்ள
குறையெல்லாந் தீருங்கண்டீர் பாங்கிமாரே. (8)

கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமாரே-நங்கள்
குடிக்கெல்லாங் குலதெய்வம் பாங்கிமாரே. (9)

கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமாரே-அது
கூடும்வண்ணங் கூட்டிடுவீர் பாங்கிமாரே. (10)

காட்சிக்கண்ணி

இராகம் - சாமா - அடதாளம்.

பல்லவி

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி - அம்மா
அற்புதக் காட்சியடி.

சரணங்கள்

1. ஜோதி மலையொன்று தோன்றிற் றதிலொரு
வீதியுண் டாச்சுதடி - அம்மா
வீதியுண் டாச்சுதடி. ஆணி

2. வீதியிற் சென்றேனவ் வீதி நடுவொரு
மேடை யிருந்ததடி - அம்மா
மேடை யிருந்ததடி ஆணி

3. மேடை மேலேறினேன் மேடைமே லங்கொரு
கூட மிருந்ததடி - அம்மா
கூட மிருந்ததடி ஆணி

4. கூடத்தை நாடவக் கூடமே லேழ்நிலை
மாட மிருந்ததடி - அம்மா
மாட மிருந்ததடி. ஆணி

5. ஏழ்நிலைக் குள்ளு மிருந்த வதிசயம்
என்னென்று சொல்வேனடி - அம்மா
என்னென்று சொல்வேனடி ஆணி

6 ஓர்நிலை தன்னி லொளிர்முத்து வெண்மணி
சீர்நீல மாச்சுதடி - அம்மா
சீர்நீல மாச்சுதடி ஆணி

7. பாரோரா் நிலையிற் கருநீலஞ் செய்ய
பவளம தாச்சுதடி - அம்மா
பவளம தாசசுதடி ஆணி

8. மற்ருேர் நிலையில் மரகதப் பச்சைசெம்
மாணிக்க மாசசுதடி - அம்மா
மாணிக்க மாச்சுதடி ஆணி

9. பின்ஞேர் நிலையிற் பெருமுத்து வசசிரப்
பேர்மணி யாச்சுதடி - அம்மா
பேர்மணி யாசசுதடி ஆணி

10. வேருேர் நிலையில் மிகும்பவ ளத்திரள்
வெண்மணி யாசசுதடி - அம்மா
வெண்மணி யாச்சுதடி ஆணி

11. புகலோர் நிலையிற் பொருந்திய பன்மணி
பொன்மணி யாசசுதடி - அம்மா
பொன்மணி யாசசுதடி ஆணி

12. பதியோர் நிலையிற் பகர்மணி யெலலாம்
படிகம தாசசுதடி - அம்மா
படிகம தாசசுதடி ஆணி

13. எழ்நிலை மேலே யிருந்ததோர் தம்பம்
இசைந்தபொற் றம்பமடி - அம்மா
இசைந்தபொற் றம்பமடி ஆணி

18. வல்லபத் தாலந்த மாதம்பத் தேறி
மணிமுடி கண்டேனடி - அம்மா
மணிமுடி கண்டேனடி ஆணி

19. மணிமுடி மேலோர் கொடுமுடி நின்றது
மற்றது கண்டேனடி - அம்மா
மற்றது கண்டேனடி ஆணி

20. கொடுமுடி மேலாயி ரத்தெட்டு மாற்றுப்பொற்
கோயி லிருந்ததடி - அம்மா
கோயி லிருந்ததடி ஆணி

21. கோயிலைக் கண்டங்கே கோபுர வாயிலில்
கூசாது சென்றேனடி - அம்மா
கூசாது சென்றேனடி ஆணி

29. அத்திரு வாயிலில் ஆனந்த வல்லியென்
அம்மை யிருந்தாளடி - அம்மா
அம்மை யிருந்தாளடி ஆணி

30. அம்மை யைக்கண்டேன் அவளருள் கொண்டேன்
அமுதமு முண்டேனடி - அம்மா
அமுதமு முண்டேனடி ஆணி

31. தாங்கும் அவளரு ளாலே நடராஜர்
சந்நிதி கண்டேனடி - அம்மா
சந்நிதி கண்டேனடி ஆணி

32. சந்நிதி யிற்சென்று நான்பெற்ற பேரது
சாமி யறிவாரடி - அம்மா
சாமி யறிவாரடி ஆணி

ஆனந்தக்களிப்பு

இராகம்-இந்துஸ்தானி-அனுஷித்தாளம்.

பல்லவி

ஞான மருந்திம் மருந்து - சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து ஞான

சரணங்கள்

1. அருட்பெருஞ் ஜோதி மருந்து-என்னை
ஐந்தொழில் செய்தற் களித்த மருந்து
பொருட்பெரும் போக மருந்து - என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து ஞான

2. எல்லாஞ்செய் வல்ல மருந்து - என்னுள்
என்றும் விடாமல் இனிக்கு மருந்து
சொல்லால் அளவா மருந்து - சுயஞ்
ஜோதி யருட்பெருஞ் ஜோதி மருந்து ஞான

3. காணாது காட்டு மருந்து - என்றன்
கையிற்பொற் கங்கணங் கட்டு மருந்து
ஆணாகிப் பெண்ணாம் மருந்து - அது
வாகி மணிமன்றி லாடு மருந்து ஞான

4. சுத்தசன் மார்க்க மருந்து - அருட்
ஜோதி மலையில் துலங்கு மருந்து
சித்துரு வான மருந்து - என்னைச்
சித்தெல்லாஞ் செய்யச்செய் வித்த மருந்து ஞான

5. அன்பர்க் கெளிய மருந்து - மற்றை
ஐவர்க்குங் காண்டற் கரிய மருந்து
என்பற்றி லோங்கு மருந்து - என்னை
இன்ப நிலையி லிருத்து மருந்து ஞான

6. நாதாந்த நாட்டு மருந்து - பர
ஞான வெளியில் நடிக்கு மருந்து
போதாந்தற் கெய்து மருந்து - என்னுள்
பொன்னடி காட்டிப் புணர்ந்த மருந்து ஞான

7\. ஆதி அனாதி மருந்து - திரு
அம்பலத் தேநடமாடு மருந்து
ஜோதி மயமா மருந்து - என்னைச
சோதியா தாண்ட துரிய மருந்து ஞான

8\. என்னுயிர்க் கன்பா மருந்து - கலந்
தென்னுயிருக் குள்ளே யிருந்த மருந்து
என்னுயிர் காக்கு மருந்து - என்றும்
என்னுயி ராகிய இன்ப மருந்து ஞான

9\. என்குரு வான மருந்து - என்றும்
என்தெய்வ மாகி யிருக்கு மருந்து
என்னன்னை யென்னு மருந்து - என்றும்
என்தந்தை யாகிய வின்ப மருந்து ஞான

10\. கற்பூர ஜோதி மருந்து - பசுங்
கற்பூர நன்மணங் காட்டு மருந்து
பொற்பூவி னேயகு மருந்து - என்தற்
போத மொழித்தசிற் போத மருந்து ஞான

இராகம் - மோகனம் - ஜம்பைதாளம்.

நடுநாடி நடுநாடி நடமாடு பதியே
நடராஜ நடராஜ நடராஜ நிதியே (1)
நடுநாடி யிடைநாடி நடமாடு நலமே
நடராஜ நடராஜ நடராஜ பலமே (2)
நடுநாடி யொடுகூடி நடமாடும் உருவே
நடராஜ நடராஜ நடராஜ குருவே. (3)

கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம் (1)
தலைவநி ஷிணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம் (2)
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம் (3)
உலைவறு மொருபரை சரணஞ் சரணம்
உமைசிவை யம்பிகை சரணஞ் சரணம். (4)

கலகந்தரு மவலம்பன கதிநம்பல நிதமுங்
கனகந்தரு மணிமன்றுறு கதிதந்தரு ளுடலஞ்
சலசந்திர னெனநின்றவர் தழுவும்பத சரணம்
சரணம்பதி சரணஞ்சிவ சரணங்குரு சரணம் (1)

எனதென்பது நினதென்பதும் இதுவென்றுணர் தருணம்
இனமொன்றது பிறிதன்றென இசைகின்றது பரமம்
தனதென்பது மனதென்பது சகமென்றனை சரணம்
சரணம்பதி சரணஞ்சிவ சரணங் குருசரணம் (2)

ஜோதிஜோதி ஜோதிசுயஞ் ஜோதிஜோதி ஜோதிபரம்
ஜோதிஜோதி ஜோதியருள் ஜோதிஜோதி ஜோதிசிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி ஏறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி (2)

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே. (3)

சற்குரு தோத்திரம்

அருள்பழுத்த செழுங்கனியே அகம்பழுத்த
சிவஞான அமுதே முத்திப்
பொருள்பழுத்த அருட்பாவை எமக்களித்த
தெய்வமணப் பூவே என்றும்
மருள்பழுத்த அடியேங்கள் மனவிருளை
அகற்றவரு மணியே மெய்மைத்
தெருள்பழுத்த வடலூர்வாழ் இராமலிங்க
நின்னருளைச் சிந்திப்பேனே. (1)

தேன்கலந்த திருவமுதாம் தேவாரத்
திருப்பாட்டைத் தினமு நாடி
'நான்கலந்து பாடுங்கால் நானறியேன்
எனை' எனநீ நவின்ற பாட்டை
வான்கலந்த வடலூர்வாழ் இராமலிங்க
மணியேயான் வழுத்துங் காலை
ஊன்கலந்த உயிரெல்லாம் உளமெல்லாம்
உணர்வெல்லாம் உருகு மாலோ. (2)

வள்ளால்நின் வாசகத்தை வடித்ததமிழ்த்
தேனென்கோ வானோர் எய்த
அள்ளாத அமுதென்கோ அருளென்கோ
அன்பென்கோ அறமே என்கோ
பொள்ளாத மணியென்கோ பொருளென்கோ
பொன்னென்கோ புலன்கள் நாடி
விள்ளாத வீடென்கோ இராமலிங்க
மாமணியே விரிக்கொ ணாதே. (3)

திருச்சிற்றம்பலம்.

விண்ணப்பம்

எண்சீரடி யாசிரிய விருத்தம்.

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது
 தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்கு ளொருவனெனக் கொள்வீர்
 எல்லாஞ்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
 புரிமயக்க கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்குஞ் சுத்தசிவ மொன்றே
 தன்னாணை யென்னாணை சார்ந்தறிமி னீண்டே.

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை யென்னைத்
 தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்க
 நடுவிருக்க வருளமுத நல்கியநா யகனைப்
புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
 பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கந் தவிர்த்தருளி யம்பலத்தே நடஞ்செய்[ரே.
 அருட்பெருஞ்ஜோ தியையுலகீர் தெருட்கொளச்சார்வீ

மதுவிலக்கு.

மதிப்பாலை யருட்பாலை யானந்தப் பாலையுண்ண மறந்தார் சில்லோர், விதிப்பாலை யறியேந்தாய்ப் பாலையுண்டு கிடந்தழுது விளைவிற் கேற்பக், கொதிப்பாலை யுணர்வழிக்குங் குடிப்பாலை மடிப்பாலைக் குடிப்பாரிங்கே, துதிப்பாலை யருடருநந் தேவசிகா மணித்தேவைத் துதியா ரந்தோ.

சிரிப்பிலே பொழுது கழிகருமிவ வாழ்க்கைச் சிறியவர் சிந்தைமாத் திரமோ, பொருப்பிலே தவஞ்செய் பெரி

யர்தம் மனமும் புளிப்பிலே துவர்ப்பிலே யுவர்ப்புக், கரிப்பிலே கொடிய கயப்பிலே கடிய கார்ப்பிலே கார்ப்பொடு கலந்த, எரிப்பிலே புகுவ தன்றியென் னளவு மினிப்பிலே புகுகின்ற திலையே. (1)

உருவ ராகியு மருவின ராகியு முருவரு வினராயும், ஒருவ ரேயுளார் கடவுள்கண் டறிமினோ வுலகுளீ ருணர்வின்றி, இருவ ராமென்று மூவரே யாமென்று மியலுமை வர்களென்றும், எருவ ராயுரைத் துழல்வதென் னுடற் குயி ரிரண்டுமூன் றெனலாமோ. (2)

உழக்கறியீ ரளப்பதற்கோ ருளவறியீ ருலகீர்
ஊரறியீர் பேரறியீ ருண்மையொன்று மறியீர்
கிழக்கறியீர் மேற்கறியீ ரம்பலத்தே மாயைக்
கேதமற நடிக்கின்ற பாதமறி வீரோ
வழக்கறிவீர் சண்டையிட்டே வம்பளக்க வறிவீர்
வடிக்குமுன்னே சோறெடுத்து வயிற்றடைக்க வறிவீர்
குழைக்கறியே பழககறியே கூட்டுவாக்கக் கறியே
குழம்பேசா றேயெனவும் கூறவறி வீரே (3)

இணக்கறியீ ரிதமறியீ ரிருந்தநிலை யறியீர்
இடமறியீர் தடமறியீ ரிவ்வுடம்பை யெடுத்த
கணக்கறியீர் வழக்கறியீ ரம்பலத்தே மாயைக
கலக்கமற நடிக்கின்ற துலக்கமறி வீரோ
பிணக்கறிவீர் புரட்டறிவீர் பிழைசெயவே யறிவீர்
பேருணவைப் பெருவயிற்றுப் பிலத்திலிட வறிவீர்
மணக்கறியே பிணக்கறியே வறுப்பேபேர்ப் பொரிப்பே
வடைக்குழம்பே சாறேயென் றடைக்கவறி வீரே. (4)

வாது பேசிய மனிதர் காளொரு வார்த்தை கேண்மின்கள் வந்துநும், போது போவதன் முன்னரே யருட்

பொதுவி லேநடம் போற்றுவீர், நீது பேசினீ ரென்றி டாதுமைத திருவு ளங்கொளுங காண்மினோ,சூது பேசிலே னன்மை சொல்கின்றேன் சுற்ற மென்பது பற்றியே. (5)

சன்மார்க்க முரசு.

கிழக்குவெளுத் ததுகருணை யருட்ஜோதி யுதயங்
கிடைத்ததெனு துளக்கமலங் கிளர்ந்ததென தகத்தே
சழக்குவெளுத் ததுசாதி யாசசிரமா சாரஞ்
சமயமதா சாரமெனச சண்டையிட்ட கலக
வழக்குவெளுத் ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம்
மனம்வெளுதது வாய்வெளுத்து வாயுறவா தித்த
முழக்குவெளுத் ததுசிவமே பொருளெனுஞ்சன் மார்க்க
முழுநெறியிற் பரநாத முரசுமுழங் கியதே.

திருத்தொண்டர் பெருமை

வண்டணிபூங் குழலம்மை யெங்கள்சிவ காம வல்லி யொடு மணிமன் றில் வயங்கியநின் வடிவங், கண்டவ ரைக் கண்டவர்தங் கான்மலர்முத் தேவர் கனமுடிக்கே முடிக்கின்ற கடிமலரா மென்றால், பண்டகுநின் திருத் தொண்டரடிப் பெருமை யெவரே பகர்ந்திடுவர் மறைக ளெலாம் பகர்ந்திடுவான் புகுந்தே, விண்டுலர்ந்து வெளுத் ததவை வெளுததமட்டோ வவற்றை வியந்தோது மந்தண ரும் வெளுத்தனருள் ளுடம்பே.

பராபரன் உண்மைநிலயம்

எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப காிக்கின் றார் யாவ ரந்தச், செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவரு ளின் செயலெனவே தெரிந்தே னிங்கே, கவ்வையிலாத்

திருநெறியத் திருவாளர் தமக்கேவல் களிப்பாற் செய்ய, ஒவ்வியதேன் கருத்தவர்சீ ரோதிடவேன் வாய்மிகவு மூர்வ தாலோ.

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணி யுள்ளே, ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார் யாவரவ ருளந்தான் சுத்த, சித்துருவா யெம்பெருமா னடம்புரியு மிடமெனநான் தெரிந்தே னந்த, வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென் சிந்தைமிக விழைந்ததாலோ.

கருணையொன்றே வடிவாகி யெவ்வுயிருந் தம்முயிர் போற் கண்டு ஞானத், தெருணெறியிற் சுத்தசிவ சன்மார்க் கப் பெருநீதி செலுத்தா நின்ற, பொருணெறிசற் குணசாந் தப் புண்ணியர்தந் திருவாயாற் புகன்ற வார்த்தை, அரு ணெறிவே தாகமத்தி னடிமுடிசொல் வார்த்தைகளென் றறைவ னாலோ.

கரும்பசைக்கு மொழிச்சிறியார் கன்மனத்திற் பயி ன்றுபயின், றிரும்பசைக்கு மனம்பெற்றேன் யாரேனெவ் வேழைகள்தம், அரும்பசிக்கு மருந்தளிப்பே னந்தோவிங் கென்னாலே, துரும்பசைக்க முடியாதே சோதிநடப் பெருமானே.

ஆர்ந்தவருட் பெருஞ்ஜோதி யப்பாநா னடுத்தவர்தஞ் சோர்ந்தமுகம் பார்க்கவினித் துணியேனின் னருளாணை நேர்ந்தவர்க ணேர்ந்தபடி நெகிழ்ந்துரைக்கும் வார்த்தைக ஓர்ந்துசெவி புகத்துணியேன் உன்றனை யுன்றனை.[ளும்

ஸ்ரீராமநாமத் திருப்பதிகம்

காராயவண்ணமணிவண்ணகண்ணகனசங்கு சக்ரதரநீள் சீராயதூயமலர்வாயநேயஸ்ரீராமராமவெனவே

தாராயவாழ்வுதருநெஞ்சுசூழ்கதாமோதராயநமவோம்
நாராயணாயநமவாமனாயநமகேசவாயநமவே.

மண்ணாள நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாள வேண்டேன்
விண்ணாள நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் திருவருளை வேண்டி நின்றேன்
புண்ணாள நின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணாள சுடர்க்கமலக் கண்ணா என்னைக
கைவிடிலென் செய்வேனே கடைய னேனே. (2)

அருட்பெருஞ்ஜோதி.

திரு அருட்பிரகாச வள்ளலார் சித்திவளாகத்தில்
திருக்காப்பிட்டுக் கொண்டகாலத்தில்

அருளிய திருப்பாடல்.

திருச்சிற்றம்பலம்.

பிச்சுலகர் மெச்சப் பிதற்றி நின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாந் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தெய்வமே துணை.

திரு அருட்பா

பாட்டு முதற்குறிப்பகராதி.

—:*:—

அ

அகத்தியனே	160	அருட்பெருங	49
அகத்தேகறு	119	அருணிலைவிள	104
அஞ்செழுத்	42	அருமறையாக	26
அஞ்சாதே	154	அருளருவிவழிந்	17
அடாதகா	100	அருள்பழுத்தசெ	176
அடிமைசெயப்	30	அருள்விளக்கே	134
அடுத்திலேனி	73	அருள்வெளியி	29
அணங்கெழு	143	அருளரசை	120
அண்ணுவோ	73	அருளுடைய	34
அண்டங்கள	15	அருளாரமுதே	86
அண்டமெலா	19	அலங்கரிக்கி	103
அணியே	38	அவலவயிற்றை	72
அணிகொள்	45	அழிதருமுலக	75
அந்தரமிங	24	அழுகுநெஞ்சி	73
அப்பாநான்	132	அளவையெலா	17
அமராவதி	10	அளவிறந்த	14
அம்பரத்தே	31	அற்புதம்அற்	165
அம்பலத்தரசே	145	அன்பெனும்	8
அம்பலத்திலா	169	அன்னையினும்	27
அம்பலவர்வந்	167	அன்னையப்பனு	48
அருளோங்கு	137	அன்புடைய	122
அருட்ஜோதித்	93	அன்னேயென்னை	67

ஆ

ஆகமாந்தரும் 139
ஆடாதீர் 141
ஆடியபாத 155
ஆணிப்பொன் 170
ஆண்டவனீ 62
ஆர்ந்தவருட் 180
ஆதிரீதிவேத 175
ஆறடுத்துச 44
ஆறுமுகப் 75
ஆனேறும் 26

இ

இசைத்திடவு 100
இணக்கறியீர் 178
இந்தியமாய் 13
இதுநல்லதருணம் 153
இந்தாரருள 137
இப்பாரிலென் 35
இப்பாரிலுட 100
இல்லையென் 41
இளவேனிலின் 115
இறந்திறந்தே 126
இறக்கவுமாசை 128
இன்றுவருமோ 7
இன்னந்தயவு 158

ஈ

ஈயென்று 82
ஈனவுலக 138

உ

உடல்குளிர 20
உடலெலா 106
உடுத்திலே 97
உடையாயுன் 45
உடையுடுத்திட 41
உண்ணுடும் 43
உண்டோவென் 50
உண்டியேவிழை 98
உயிர்க்கொலை 136
உய்குவித்து 29
உருவராகிய 178
உருத்திரர் 24
உரைகடந்த 125
உலகநிலை 11
உலகமெலா 12
உழக்கறியீர் 178
உளந்தளர 69
உளமெனது 84
உள்ளமனக் 69
உறியிலேதயி 97
உன்னைமறந்தி 118
உன்புடைகான் 125

ஊ

ஊட்டுகின்றனை 47
ஊதுதுசங்கே 164
ஊர்தருவோர் 36

எ

எங்கள்காழிக் 63
எண்ணியநம் 34
எண்ணூறு 50
எண்ணிலா 106
எத்துணையும் 180
எத்திக்கு 85
எந்தைபிரா 76
எந்தைநினை 82
எம்பெருமான் 31
எம்மதநிலை 119
எய்ப்பறவெ 111
எல்லாஞ்செய்வ 93
எல்லாமும் 138
எவவுலகுமெவ 108
எவ்வுயிரும் 179
எவவுயிர்த் 129
எழுத்தறிந்து 23
எழுவகைப் 52
எளியனேன் 53
எனக்குமஉனக்கு 159
எனதென்பதும் 175
என்னுருயிரிற் 101
என்னியலுட 105
என்றுநின்ன 48
என்போற்கு 39
என்னரசே 28
என்னுலோர்துரு 144
என்னுயிர்நீ 26
என்பாட்டுக் 124

ஏ

ஏட்டாலும் 36
ஏதாகுமோ 124
ஏதுசெய்திடினு 49
ஏமாந்திருககு 141
ஏழுநிலைக்கு 138

ஐ

ஐயமேற்றுத் 71
ஐயநின்சீர் 83

ஒ

ஒருபிரமன் 109
ஒருமையுடனி 81
ஒளிமருவுமுனது 58

ஓ

ஓகைமடவார 112
ஓங்கியபெரு 112

க

கடலமுதே 37
கட்டமேயறி 101
கட்டமுஙகழ 123
கட்டோடே 139
கண்ணேகண் 137
கண்மயககும் 33
கண்ணேயக 38
கண்ணப்பா 45
கண்ணப்பனெ 75

கருணையே 129
கருணையுஞ்சி 132
கருணையிலா 143
கருணையொன் 180
கருத்துவே 129
கருவிற்கல 122
கரும்பசைக்கு 180
கரைசேரப் 101
கரையிலாக் 108
கருணைநிறை 11
கலைபயின்ற 59
கலைநிறைகண 175
கலையுரைதத 127
கலகந்தரு 175
கலலாாகருங் 135
கல்லாககித 44
கல்லாயமன 103
கல்லாநடையே 50
கல்லுஙகனிய 96
கல்லையுமுருக 113
கல்வியெலா 76
களககமறப் 116
கள்ளுருகு 61
கள்ளுணட 45
கறிபிடிதத 78
கற்பவையெ 114
கற்பங்கள் 22
கற்றவனை 29

கா

காசமேகங 71
காசையும்ப 119
காட்டுயானை 131
காட்டையெ 133
காமவுட்பகை 80
காமப்பயலை 71
காயெலாங 110
காராயவண் 180
காலையிலே 122
காற்றுலேபு 144

கி

கிழக்குவெளு 179

கீ

கீரையேவிரு 97

கு

குடிகொண்மல 50
குலத்திடையு 94
குறவாகுடிசை 168
குறிததுரைக் 142

கூ

கூட்டுவிக் 15
கூமபாத 30
கூறுகின்ற 126

கை

கையறவிலாது 151
கையுறவீசி 130
கைவிடமாட்டா 164

கொடியமாத 46
கொடியபாவி 49
கொம்மியடிப் 163
கொலையறியா 47
கொலைபுரிவார் 135
கொல்லாநெ 123
கொள்ளையென 123

கோ

கோடையிலே 134
கோதகன்ற 17
கோவேயெண் 16
கோலக்குற 87

ச

சங்குடையா 43
சந்ததமெ 54
சண்முகர்கொம்மி 168
சரஸ்-தேர்த் 59
சரியையோர் 128
சற்குருதோத் (ச) 160
சற்குருதோத் (த) 176
சறசபைக் 129
சன்மார்க்கசங 177
சன்மார்க்கப்பெருங 177

சா

சாகாவருளமு 137
சாதியிலே மத 139

சி

சிதம்பரத்தே 116
சிந்தைமயங் 42
சிரிப்பிலே 177
சிவநேசவெண் 35
சின்னம்பிடி 167

ஸ்ரீ

ஸ்ரீராமநாம திரு 180

சீ

சீத்தமணி 62
சீராவளஞ் 63
சீரார்சண்பை 65
சீரிடம்பெறுமோ 99
சீர்கொண்ட 67
சீர்கொண்டஒற் 37
சீர்பூத்தவருட் 67
சீர்சான்றவே 35
ஜீவசாக்ஷிமாலை 68

சு

சுத்தவடிவுஞ் 140
சுந்தரமூர்த்தி 66
சுழியாதவருட் 18

சூ

சூரிட்டநடை 56

செ

செஞ்சடையெ 27
செத்தாரையெ 141
செய்தாலுந்தீ 142
சென்றநாளிலோ 48

சே

சேமமிகுந்திரு 66
சேய்போலுலகத் 132

சை

சைவநாயக 70

சொ

சொல்லொழிய 19
சொற்போதற் 20

சோ

ஜோதி ஜோதி 175
சோதிமலே 138
சோறாவேண் 99
சோற்றிலே 97

ஞா

ஞாலமெலாம் 76
ஞானமருந்திம் 172
ஞானவானந் 117
ஞானசரியை 141

த

தக்கவளஞ் 64
தஙகமேயனே 129
தடித்தவோர் 128
தணிகைமலே 71
தணிகாசலம் 71
தண்ணீர்விள 8
தண்ணமுத 18
தததுவவெற் 139
தந்தைதாய் 45
தந்தைதாய்மனே 46
தந்தையுந்தா 93
தம்மைமறந்து 33
தயையுடையா 136
தலேவர்களெ 132
தனித்தனிமுக் 134
தன்னேயறிந் 156

தா

தாயாகித்தந 93
தாயாகினுஞ் 36
தாயேமிகவுந் 39
தாய்தடையெ 60
தாய்கொண்ட 117
தாவுமானென 95

தி

திங்களங 10
திடனுன் 64
திடுக்கறவெனே 117
திருத்தொண்-பெரு 179
திருஅருட்பாமகி 8
திருஞானசம்பந்தர் 65
திருவிளஙகச 8
திருவுங்கல்வி 9
திருவருண்முறை 35
திருமுதுகுன்றம் 101
திருநாவுக்கரசர் 65
திருநாள்நினே 39
திருவுளந்தெரி 60
திருத்தருசீரத் 65
திருமாலுநா 38

திருப்பள்ளியெ 102
திருக்கதவந் 124
திருத்தகுமோர் 127
திவசங்கடொ 74
திருவுடையா 133
திரையோதசத் 138

தீ

தீதுசெய்தாலும் 39
தீதுமுற்றுநாளு 50
தீவினைநல் 31

து

துண்ணெனக 131
துநகுணமா 102
துப்பாடுதிருமே 65
துயிலேறிய 74

தூ

தூங்குகின்ற 95
தூண்டாதமணி 94
தூயநெஞ்சமே 46
தூயநெஞசினே 99

தெ

தெண்டனிட்டே 157

தே

தேட்டிலே 130
தேடுவாரதேடு 49
தேவரேமுதலு 74
தேருப்பெரு 74
தேனெனவினி 42
தேனேயுளங் 72
தேனகலந்த 176

தொ

தொடுக்கவோநல் 144
தொல்லைகருடும 72

தோ

தோன்றுதுவி 13
தோன்றுபர 25

ந

நககட்கினி 87
நடராஜபதிமாலை 104
நடுநாடிநடுநாடி 174
நண்ணேனே 70
நயததாலுனது 96
நலிதருசிறிய 131
நல்லமருந்திம் 161
நறைமணகக்கும் 44
நறுமுயுமபி 33
நன்றுலுங் 137

நா

நாடாகதொடி 104
நாடிநின்றே 36
நாடுந்தாய் 48
நாதமுஙகட 9
நால்வருண 136
நானபடும்பாடு 35
நான்காவதுதிரு 60
நான்செய்த 124
நானுரைக்கும் 142
நானுரைக்கும்வா 140

நி

நிதியைநினை 60
நிலந்தெளிந்த 102
நிலையறியாத 37
நிலையிலாவுலகி 41
நிலையுமூநிரா 80
நில்லாவுடம்பை 43
நிறையணிந்த 64
நினைந்துநினை 141
நின்மயமாயெ 14

நீ

நீயேயெனது 38
நீறணிந்தொ 58

நெ

நெஞ்சோடுகிள 154

நே

நேயானுகூல 40

நோ

நோவாதுநோ 144

ப

படமாட்டேன் 120
படமுடியாதி 117
படமெடுத்தாடு 51
படிப்படக்கி 121
பட்டிமாடென 75
பணிந்தறியே 121
பணத்திலே 128
பணிந்தடங்கு 103
பண்ணே 86
பண்ணேறு 68
பண்ணுலுன் 47
பதியேயெம் 121
பரமேது 78
பரமாகி 13
பராபரம் 7
பரிக்கிரகநிலை 25
பரனளிக்கும் 143
பவமானவெழு 55
பற்றுவதுபந்த 52
பற்றறியா 22
பன்னகநொந் 70
பன்னிருகண் 77

பா

பாங்குளநாந் 23
பாடற்கினிய 40
பாடுகின்றோர் 44
பாட்டுவித்தால் 100
பாயிரமாமறை 24
பார்த்தாலும் 135
பாலிலேகல 98
பாவியேன் 70
பாவிமனக்குர 133

பி

பிச்சுலுகர்மெச்ச 181
பிட்டுக்கும் 37
பிள்ளைச்சிறுவிண்ணப்பம் 128
பிள்ளைப்பெருவிண்ணப்ப 129

பு

புற்றோங்கு 34
புன்புலாலுடம்பு 130
புற்றோங்கு 34
புன்செய்கை 43
புன்புலாலுடம் 130

பூ

பூமாந்து 43
பூவேமணமே 8

பெ

பெட்டியிலிலு 118
பெண்குணத்திற் 78
பெண்கொண்ட 114
பெண்மணியே 44
பெண்சுமந்த 60
பெற்றதாய் 40

பே

பேதமுறுமெய் 20
பேருற்றவுலகி 110
பேருரும்பரவை 66

பொ

பொஙகுபலசமய 21
பொருளிலேயுல 130
பொழுதுவிடி 102
பொய்யுடையார் 126
பொய்யாதமொழி 54
பொற்குன்றே 16
பொற்பஙகயத்தின் 132
பொன்னுகி 15
பொன்னுடையா 32
பொன்மலையோ 32

ம

மக்கட்பிறவி 73
மஞ்சேர்பிணி 75
மடையார்வாளை 64
மட்டகன்ற 23
மணகுமலர் 25
மணிக்கதவ 125
மண்ணேயும் 47
மண்ணுசை 37
மண்ணுளா 181
மதித்திடுத 125
மதிப்பாலயருட் 177
மதிமணடலத் 137
மதியணிந்த 28
மத்தேறியலே 27
மருந்தறியேன் 95
மருவாணைப்பெண் 61
மலேமேலுங் 15
மலேயான்தவ 38
மறைமுடிக்கு 16
மறைமுடிவிள 60
மற்றறிவோமென 143
மனமெனுமோ 139
மன்னுருத்திரர் 46
மன்னுயிர்க்கு 61

மா

மாதர்மணியே 63

மாயாவிளக் 117
மாயையாற் 119
மாலையயெனு 56
மார்க்கமெ 141
மாருதவன் 43
மாருதபெரு 76
மாலேநதிய 74
மாற்றறியா 104
மானேனர்விழி 38

மி

மின்போலுஞ் 5
மின்னுருமிடை 68

மு

முடியாமுதலே 86
முத்திநீறீடார் 41
முருகாவென 77
முருகன்தோத்திரம் 10
முன்னவனே 9

மெ

மெய்ஞ்ஞான 21
மெய்யருள்வியப்பு 159
மெய்யுணர் 22
மெய்விளக்கே 61

மை

மைப்படியுக 42

ய

யாரினும்கடை 99

வ

வள்ளால்நின் 176
வட்டியேபெரு 96
வட்டவான் 101
வண்டணிபூங் 179
வந்தாள்வாயை 69
வரம்பழுத்தநெ 19
வருகணத்து 32
வருகைககண்ணி 150
வருமொழிசெய் 66
வருவாரழைத்து 152
வள்ளலுனே 79
வறுத்தலே 98
வன்புகலந்து 18
வன்கொடுமை 28

வா

வாக்கொழி 104
வாடியபயிரை 131
வாட்டமிலா 67
வாணுளடைவர் 39
வாதுபேசி 178
வாயாகி 14
வாய்கொண்டு 84
வாரீர்சிதம் 150
வாழாதவண் 68
வாழிநின்சே 40
வாழையடி 118
வாளேய்நெடுங 36
வான்காணு 21
வான்மாறி 36
வான்தேட 39

வானிலேவா 107
வானோர்க்கரி 138
வான்கலந்த 66

வி

விசித்திர 160
விடையார்வி 63
விண்படைத்த 62
வித்தாகி 12
விரிந்தமன 140
விழியைத்தூ 95
விளக்கறியா 94

வீ

வீட்டுக்கடங 44
வீறுடையாய் 10

வெ

வெடிக்கப்பார் 96
வெண்ணிலா 156
வெம்புமுயிர் 72
வெவ்வினைக் 37
வெள்ளமணி 30

வே

வேண்டாமை 5[illegible]
வேதமுங்கலை 77
வேதப்பொரு 87
வேதநெறி 127
வேதாகமங் 141
வேதாந்தநிலை 1[illegible]
வேல்கொண்ட 1[illegible]

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
21	5	யொல்லாந்	யெல்லாந்
48	17	மன்றியா	மன்றியாஞ்
57	16	மிகு	வெகு
72	22	நொந்து	நொந்துநொந்து
77	17	கியமனொரு	இயமனொரு
97	21	பேரா ச	பேராசை
107	20	கடமை	கடம்மை
120	2	வ அரும்	அவரும
127	15	திருப்பொதுநிற் [கின்றோய்	திருவமுதமளிததோய்
139	18	நிறுத்த	ஞான
140	16	மத்தெனுமோர்	சித்தெனுமோர்
148	27	சதோய	சதோதய

அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை